

அடங்காத
குதிரைகளும்
நாணயக்
கயிறுகளும்



தேடுதல்
வேட்டை

மே 29- ஜீன் 04, 2011 May 29 - June 04, 2011 பக்கங்கள் -30 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI


வார மலர்



## இந்தியாவுக்கு எதிராக மீண்டும்...!

# ரஜினி

## மீண்டும் வருவாரா?



# ரஜினி மீண்டும் வருவாரா...?

தமிழில் ஜனரஞ்சக சினிமாவின் சுவாரஸ்யத்தில் ரஜனிக்கு இருக்கும் தனித்துவம் என்றும் தனித்தன்மையானது. அந்த இடத்தைக்கடந்து யாராலும் செல்ல முடியாது. அதற்காகத் தான் தமிழ்திரையுலகமும், தமிழ் ரசிகர்களும் ''சூப்பர் ஸ்டார்'' கௌரவத்தை அளித்திருக்கின்றனர்.

இப்போதிருக்கும் நடிகர்களைப் போல சத்தங்களாலும் கற்பனைக்கெட்டாத சாகசங்களாலும் வலிந்து நடிப்பை திணித்துக் கொண்டவரல்லர் ரஜனி. தனக்கேயுரிய மோடிப்படுத்தப்பட்ட நடிப்பினால் சிகரம் தொட்டவர். இவரும் தமிழ் திரையுலகத்தை விட்டு ஒதுங்கிக் கொள்ளப் போவதற்கான சாத்தியங்களை, அண்மையில் ஏற்பட்டிருக்கும் உடல் உபாதைகள் அதிகரித்திருக்கின்றன. வைத்தியர்களினது கண்காணிப்பும் தொடர்ச்சியான வாழ்த்துக்களும், பிரார்த்தனைகளும் அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழும் சக்தியை அவருக்கு இன்றும் வழங்கவில்லை. சோனியா, ஜெயலலிதா, நரேந்திரா மோடி, விஜயகாந் என இந்தியாவின் முக்கிய பெரும் புள்ளிகள் வைத்தியசாலைக்கு நேரில் சென்று பார்த்திருக்கின்றனர். இதற்கிடையில் உருவான வதந்தியால் ஊத்தக் கோட்டை பகுதியைச் சேர்ந்த ரஜனி வெங்கடேஷ் என்ற ரசிகன் தற்கொலை செய்து கொண்டுள்ளார். தொடர்ந்தும் பலர் இந்த வழியைத் தம் தனி வழியாகக் கைக்கொள்ள நினைத்து காப்பாற்றப்பட்டிருக்கின்றனர். ரஜனிக்கு எதுவும் நடக்கவில்லை; வெகு விரைவில் உங்களைச் சந்திப்பார் என ரஜனி, லதா மற்றும் மகள்கள், வைத்தியர்கள் தெரிவிக்கின்ற போதும் யாரும் நம்புவதாக இல்லை. நம்பவைக்க இறுதியில் மூத்த மகள் சௌந்தர்யாவுடன் ரஜனி கையில் சேலைன் ஏற்றிய அடையாளங்களுடன் ஒளிப்படம் வெளியிடப்பட்டது. உடல் தேறிவந்தாலும் மீண்டும் நடிக்க வருவாரா?.

காலம்தான் பதில் சொல்ல வேண்டுமாம்.✱

## சிவாஜி ராவ் காயக்வாட்

**இயற்பெயர்: சிவாஜி ராவ் காயக்வாட்**
**பிறப்பு: டிசெம்பர் 12.1950 (61 வயது)**
**கர்நாடகா, இந்தியா**
**சினிமாக்காலம்: 1975 முதல் தற்போது வரை.**
**மனைவி:லதா ரஜினிகாந்**
**பிள்ளைகள்:சௌந்தர்யா மற்றும் ஐஸ்வர்யா**

ரஜினிகாந்தின் முதற்தொழில் பேருந்து நடத்துனர். அந்தக் காலத்தில் மேடை நாடகங்களில் நடித்து வந்தார். சினிமாவில் நடிக்கும் ஆசையால் நண்பரின் உதவியுடன் சென்னை திரைப்படக் கல்லூரியில் படித்தார். கற்றுக் கொண்டிருக்கும் போதே 1975 ஆம் ஆண்டு கே.பாலச்சந்தரிடம் அறிமுகமானார். அப்போது அவர் இயக்கிய *அபூர்வராகம்* படத்தில் நடித்து தன் திறமையை வெளிக்காட்டினார். தொடர்ந்தும் பல படங்களில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. அதில் குறிப்பிடும்படியாக அமைந்தது *மூன்றுமுடிச்சு* (1976). இது அவரை சிறந்த நடிகராக நிலைநிறுத்தியது. பின்னர் *16 வய தினிலே*, *காயத்திரி* போன்ற படங்களில் வில்லனாகவும் தொடர்ந்து வந்த படங்களில் கதாநாயகனாகவும் நடித்தார். *தில்லு முல்லு* படத்தின் மூலம் தான் ஒரு சிறந்த நகைச்சுவை நடிகரும் என்பதை நிரூபித்தார். இவரின் 100 ஆவது படமான *ஸ்ரீ ராகவேந்திரா*வில் பக்தி நாயகனாக நெக்குருக வைத்தார். தொடர்ந்து பல பொழுதுபோக்குப் படங்களில் நடித்தார். 2010 இல் வெளிவந்த *எந்திரன்* படம் வரைக்கும் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, மலையாளம் என்று எல்லா மொழிகளிலும் 170க்கு மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

இவரின் நடிப்புத் திறனால் ஈர்க்கப்பட்ட ரசிகர்களின் இந்தியாவைக் கடந்து ஜப்பான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இருக்கின்றனர். *படையப்பா* படத்தை 100 தடவை பார்த்த ஜப்பானிய ரசிகன் கூட உண்டு.✱

அட்சயன்



## நடந்தது என்ன?

**62** வருட உழைப்புடனான வாழ்வில் ரஜினி தன் உடலில் அதிக வியாதிகளை மறைத்து வைத்திருந்தார் என்ற உண்மையைக் கண்டறிந்திருக்கிறது வைத்தியர் குழு. இதனை ராணா படப்பிடிப்பு வெளிப்படுத்தியிருந்தது.

(இந்தப் படத்துக்காக 15 கிலோ உடல் எடையைக் குறைத்திருந்தார். கடந்த 13 ஆம் திகதி தமிழகத் தேர்தல் முடிவுகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்த தருணத்தில் ரஜினி மரணித்துவிட்டார் என்ற வதந்தி தீவிரமாகப் பரவியது. பின்னர் சற்று நேரத்தில் ராணா படப்பிடிப்பின்போது திடீர் சுகயீனத்தால் பாதிக்கப்பட்ட ரஜனி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பதாக உண்மைச் செய்திகள் வெளிவந்தன.

மருத்துவர்கள் ஏற்கனவே சமிபாட்டுக்கோளாறு, நீர் சத்துக் குறைவு மற்றும் சோர்வு போன்ற வியாதிகளால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தவருக்குப் படப் பிடிப்பும் உடற் பலவீனத்தை அதிகரித்திருக்கிறது என்பதைக் கண்டறிந்தனர்.

நீண்டகாலமாகப் புகைத்தல் பழக்கம் இருந்ததனால் இப்போது நுரையீரல் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. இதனை நீக்குவதற்காகச் செய்யப்பட்ட சத்திரசிகிச்சையின்போது சிறு அளவிலான மாரடைப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் இருந்ததாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

ஆனால் சத்திர சிகிச்சை வெற்றி.

எவ்வளவுதான் பணம் இருந்தாலும் வியாதிகள் நிம்மதியைக் கெடுத்துவிடும் என்பார்கள். ரஜினிக்கும் அதுதான். அடுத்தடுத்து நோயைக் கண்டறிந்தனர் வைத்தியர்கள்.

சிறுநீரகங்களின் செயற்பாட்டில் ஒழுங்கீனங்கள் காணப்படுகின்றதாம். அவரின் இரத்தத்தில் கிரீயேட்டினைன் அளவு அதிகமாகக் காணப்படுகிறதாம். இதுவே காலில் வீக்கம் ஏற்படவும், சிறுநீரகத் தொற்றுக்கும் முக்கிய காரணம்.

இந்த வகை நோயின் முதற்படியில் ரஜினி இருக்கிறார் என்கின்றனர் வைத்தியர்கள். எனவே இலகுவில் குணப்படுத்திவிடலாம் எனவும் சொல்லப்பட்டுவருகின்றது. சொல்லியதைப் போலவே அவரின் உடல் தற்போது முழுச் சுகமடைந்து ஆரோக்கிய நிலையைப் பெற்றிருப்பதாக ஆதாரங்களோடு செய்திகள் வெளிவந்திருக்கின்றன. ஆனாலும் இப்போது அவர் நடித்துக்கொண்டிருக்கும் ராணா படத்துக்கான படப் பிடிப்புக்களில் தொடர்ந்தும் கலந்துகொள்வாரா என்பதும் சந்தேகமாகவே இருக்கிறது.

சிலவேளைகளில் இத்துடன் ரஜினியினுடைய சினிமா வாழ்க்கை நிறைவுபெற்று, முழுமையான ஆன்மீகவாதியாகத் தன்னை அவர் நிலைநிறுத்திக் கொள்வார் எனவும் எதிர்பார்க்கலாம்.✱

## ரஜினியின் அரசியல்

ரஜினி எப்போதும் அரசியல் பற்றி என்ன பேசினாலும் அதனைப் பெரிதுபடுத்தி விடுவார்கள். 1990களில் ஆரம்பித்த அவருக்கான இந்தச் சர்ச்சை கடந்த சட்டமன்றத் தேர்தல் வரைக்கும் நீடித்தது. அதில்கூட அவர் ஜெயலலிதாவுக்கு வாக்களித்தார் என்பதை நிரூபித்திருந்தனர். ஆனால் அன்று மாலையே கலைஞருடன் அமர்ந்திருந்து பொன்னர் சங்கரர் படம் பார்த்தார் ரஜினி.

1990களின் நடுப்பகுதியில் அரசியல் வரவு குறித்த இவரின் பஞ்டயலக்குகளால் அப்போது நடைபெற்ற தேர்தலை முடங்கச் செய்தார். அ.தி.மு.கவுக்கு எதிரான தன் பிரசாரத்தை வெளிப்படையாகவே மேற்கொண்டார். அதன்படியே அந்தமுறை அம்மையார் பெரும் தேல்வியைச் சந்தித்திருந்தார். ஆனால் அதன் பின்னரான காலங்களில் சினிமாவில் ஏற்பட்ட தொடர்ச்சியான ஏற்ற இறக்கங்களும் அரசியல் நுழைவின்போது ஏற்பட்ட மூக்குடைப்புக்களும் ரஜினியை நிதானம் கொள்ளவைத்தன. தனது அரசியல் ஆசையைக் கைவிட்டதோடு ஆன்மீகத்துக்கான பயணத்தை மறைந்த சாய்பாபாவின் வழியில் மேற்கொண்டார்.


இந்தமுறை மக்கள் நலனில் அக்கறை கொண்டதனால்தானோ என்னவோ ஆட்சிமாற்றத்தை வேண்டி அ.தி.மு.க. பக்கம் நிலையெடுத்தார் போல தெரிகிறது. தேர்தல் முடிவுகள் வெளிவந்த உடனேயே வைத்தியசாலையில் ரஜினி முடங்கியமைக்கும் ஏதும் அரசியல் காரணிகள் இருக்கலாம். அதாவது ஆட்சிமாற்றத்தோடு தமிழ்த் திரையுலகில் நிகழ்ந்துவரும் மாற்றங்களால் பாதிக்கப்படாமல் தப்பிக்கொள்வதற்காகத் தனக்கிருந்த எல்லா நோய்களையும் காரணம்காட்டி வைத்தியசாலையில் ஒளிந்துகொண்டாரோ தெரியவில்லை என்கின்றன சில வட்டாரங்கள்✱


உங்களின் உடலினை நீங்கள்
கட்டுக்கோப்புடன் வைத்துள்ளீர்களா?
www.esermarketing.com
மிதமிஞ்சிய உடல் வளர்ச்சி, உடலின் எடை அதிகரித்தல் வயிறு வைத்தல், கெஸ்ட்ரிக் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் நீங்கள் கவலைப் படுகிறீர்களா....
இதோ! அதற்கான தீர்வு எம்மிடமிருந்து....
CROSS TRAINER
PRO RACING BIKE
10 Kg DUMBBELL PACK
WEIGHT LIFTING BENCH
ரூ.13.900/- விலிருந்து
ELECTRONIC TREADMILL
ரூ.43,500/- விலிருந்து
WEIGHTS & BARS
1Kg ரூ.99/-விலிருந்து
BODY STRIDER
இது Fat Burning (கொழுப்பினை கரைத்தல்)பயிற்சி உபகரணமாகும் உடலின் எடை அதிகரித்தல் வயிறு வைத்தல் கொலஸ்ரோல் மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்றவற்றினால் துன்பப்படுவோருக்கு இது பயன் தரவல்லது .
தொடர்ச்சியாக ஒவ்வொரு நாளும் 20 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்வதனால் நல்லதொரு பிரதிபலனை நீங்கள் எதிர்பார்க்கலாம்.
நீச்சல் நடைப்பயிற்சி போன்ற-வைகளுக்கு ஒப்பான பயிற்சியினை இதனால் செய்து கொள்ளலாம் இக்கருவி ஆண் பெண் இருபாலாருக்கும் மற்றும் சகல வயதினருக்கும் உகந்தது.
AB ROCKER
ரூ.6.900/-விலிருந்து
TOTAL TRAINER (TOTAL GYM)
HOME GYM
ரூ.37,500/-விலிருந்து
SIT-UP BENCH
ரூ.5,900/-
PUNCHING TARGET
4 STATION COMMERCIAL GYM
DUMBBELL BARS
ரூ.500/- விலிருந்து
ESER
ஏசர் மார்கடின் MARKETING
PLASTIC DUMBBELLS FOR LADIES
WEIGHT LIFTING BELTS & GLOVES
PUNCHING BAG & PUNCHING GLOVES
YOGA MAT
நாடளாவிய கிளைகள்
பம்பலபிட்டி - தொ: 011 2585330
இராஜகிரிய - தொ: 011 5347632
நுகேகொடை - தொ: 011 5529888
கல்கிஸ்சை - தொ: 011 5238823
மொறட்டுவ - தொ: 011 5528888
ஜா-எல - தொ: 011 5731730
களனி - தொ: 011 5552008
கண்டி - தொ: 081 5673333
மாத்தளை - தொ: 066 5678886
குருநாகல் - தொ: 037 5672562
வத்தளை - தொ: 011 5731888
கம்பஹா - தொ: 033 5628889
காலி - தொ: 091 5457777
மாத்தரை - தொ: 041 5629888
இரத்தினபுரி - தொ: 045 5678887
நீர்கொழும்பு - தொ: 031 5678880
களுத்தரை - தொ: 034 5629888
அநுராதபுரம் - தொ: 025 5628889
கேகாலை - தொ: 035 5628889
பண்டாரவல - தொ: 057 5678889
முகவர்கள்
மட்டக்களப்பு - சனபில் ஸ்போட்ஸ் தொ: 077 3512341
வவுனியா - 'கணேஷ்' தொ: 024 4924775
யாழ்பாணம் - 'யாழகம்' தொ: 021 2225563
திருகோணமலை - 'அஜ்மீர்' தொ: 026 4909879
HOTLINE: 5232323,5652652,071 4440555

www.asiaassetfinance.com

# பல தசாப்தங்களுக்கு நிலைத்திடும் ப்ராஸ் ஃபிடிங்ஸ் மற்றும் சொகுசு ஜப்பான் வாகனங்கள் குறைந்த விலைக்கு

## எல்.பீ பெரேரா மற்றும் குழுமம் மற்றும் எல்.பீ.ஏ மோட்டர் சேல்ஸ்



குடும்ப வியாபாரமான பித்தளை மற்றும் வீட்டுபகரணங்கள் (ப்ராஸ் ஃபிடிங்ஸ்) வர்த்தகத்தினை நடாத்தி சென்ற பெரேரா அவர்கள் அவரின் வர்த்தகத்தினை மேலும் மேம்படுத்த விசேட கடன் ஒன்றை பெற்றுக் கொள்ள எம்மிடம் வந்தார்.

**பொதுவாக எமது வர்த்தக அனுபவத்திற்கு அமைய, எமது தாளத்திற்கு எமது வயதிற்கு பொருத்தமான வர்த்தகங்களுக்கே அதிக கவனம் செலுத்துவோம். வெறுமனே கடன் ஒன்றை வழங்கி பெரேரா அவர்களை திருப்பி அனுப்ப நாம் விரும்பவில்லை.**

அவரின் வர்த்தகத்தை உயர்தரத்தில் பேணுவதற்கு தேவையான நிதிவசதி-களை செய்யும் அதேவேளை, வெகுகாலம் மூடப்பட்டிருந்த எல்.பீ.ஏ. மோட்டர் சேல் வர்த்தகத்தை மீண்டும் செயற்படுத்த தேவையான இறக்குமதி கடன் ஒன்றை வழங்கி தேவையான ஆலோசனைகளையும் வழங்கினோம்.

தற்போது வீட்டுபகரணங்கள் (ப்ராஸ் ஃபிடிங்ஸ்) வர்த்தகத்தின் பெயர் எல்.பீ.ஏ பெரேரா மற்றும் குழுமம் என்பதே. தரகர்கள் இன்றி நேரடியாக ஜப்பான் வாகனம் ஒன்றை இறக்குமதி செய்ய ஆடம்பர வாகனங்களை குறைந்த விலைக்கு இறக்குமதி செய்ய சிறந்த இடம் எல்.பீ.ஏ. மோட்டர் சேல் ஆகும்.

உங்களுக்கு புத்தம் புதிய ஜப்பான் வாகனம் ஒன்று தேவை எனின் 0777 900 889 இலக்கத்தினூடாக திருமதி பெரேரா அவர்களை தொடர்பு கொள்ளுங்கள். அவரின் வேலைப்பளு காரணமாக அவரை தொடர்பு கொள்ள முடியாது எனின்

**ஏசியா அசெட் ஃபினான்ஸ் துரித இலக்கமான 0773 135 804 இற்கு எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.**

ASIA ASSET FINANCE LIMITED

**ஏசியா அசெட் ஃபினான்ஸ் லிமிறெற்**

*நிகரில்லா நிதிக் கொடுக்கல் வாங்கல்*

இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
தொ.பே: 0112 574 682-5 தொ.ந: 0112 577 477

**தமது வாடிக்கையாளர்களுக்கு ஏசியா அசெட் பைனான்ஸ் நிறுவனத்தின் பங்களிப்பு**

# முகம் சொல்லும் கதைகள்



பெண்ணின் முகத்தில் ஏகப்பட்ட உணர்வுகளைப் பார்க்க முடியும். ஆனால் ஆண்கள் முகத்தைப் பார்த்தால் ஒன்றையும் புரிந்து கொள்ள முடியாதாம். இதை ஓர் ஆய்வு நிரூபிக்கிறது. இந்த ஆய்வை மேற்கொள்வதற்காக ஒரு ஆயிரம் ஆண், பெண்களை எடுத்துக் கொண்டனர். அவர்களின் புகைப்படங்களை இணையதளத்தில் இடம் பெற வைத்தனர். ஏற்கனவே அவர்கள் குறித்த தகவல்களை வாங்கி வைத்துக் கொண்டனர். இது தவிர புகைப் படங்களைப் பார்த்து கருத்து சொல்வோருக்காக கேள்விகளையும் தயார் செய்தனர். பின்னர் புகைப்படங்களை இணையதளத்தில் பிரசுரித்து, அந்தப் பெண்களின் முகங்களைப் பார்த்தால் உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது என்று கேள்வி கேட்டிருந்தனர். இந்த இணையத் தளத்திற்குக் கிட்டத்தட்ட 6500 பேர் வருகைதந்து அதில் இடம்பெற்றிருந்த பெண்களின் முகத்தைப் பார்த்து அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள், அவர்களைப் பார்த்தால் எப்படித் தோன்றுகிறது என்பதைத் தெரிவித்திருந்தன.

# வசூல் மழையில்...



'பரடைஸ் ஒப் த கரீபியன்' படத்தின் மூன்றாம் பாகம் ஜூன் 20 ஆம் திகதி உலகெங்கும் வெளியாகியது. ஜொனிடீப், பென்ஸ் லோப் குரூஸ், ஜெபரி ரஷ் ஆகியோரின் நடிப்பில் ரொப் மார்சலின் இயக்கத்தில் வெளிவந்துள்ள இத்திரைப்படம் சிறுவர்களை மட்டுமல்லாது பெரியோரையும் திரள் திரளாக ஈர்த்து இழுத்து வருகிறது. கடற்கொள்ளைக்காரன் ஒருவனின் சாகசங்களை நகைச்சுவையாகவும் பிரமாண்டமாகவும் சொல்கின்ற இத்திரைப்படம் வந்த வேகத்திலேயே வசூல் வேட்டையிலும் இறங்கியுள்ளது. ஒருவாரத்தில் மட்டும் 'பரடைஸ் ஒப் த கரீபியன்' திரைப்படம் 90 மில்லியன் டொலர்களை வசூலில் அள்ளியுள்ளது.

அடுத்துவரும் வாரங்களில் இந்தத் தொகை பல மடங்கு அதிகரிக்கும் என்று கூறப்படுகின்றது. இதே வேகத்தில் வசூல் வேட்டை தொடர்ந்தால் உலகிலேயே அதிக இலாபமீட்டிய திரைப்படம் என்ற உலக சாதனையையும் இத் திரைப்படம் தனதாக்கிக் கொள்ளக்கூடும் என்று எதிர்வு கூறப்படுகிறது. இதேவேளை இத் திரைப்படத்தின் நான்காவது பாகத்திற்கான தயாரிப்பு வேலைகளில் இயக்குநர் ரொப் மார்ஷல் இப்போதே இறங்கிவிட்டார்.



# அமெரிக்கப் புதையல்

அமெரிக்காவில் தாங்கள் விலைக்கு வாங்கிய வீட்டில் இருந்த 20 லட்ச ரூபாயை, அந்த வீட்டின் பழைய உரிமையாளரிடம் திருப்பிக் கொடுத்துள்ளது ஒரு குடும்பம். அமெரிக்காவின் உட்டா மாகாண தலைநகர் சால்ட் லேக் சிட்டியின் புறநகர் பகுதி தான், பவுன்டிபுல். இங்கு பெரின் என்பவர் சமீபத்தில் வீடு ஒன்றை விலைக்கு வாங்கினார்.

பெரின், சால்ட் லேக் சிட்டி நகரில் வெளியாகும், ''டெசர்ட் நியூஸ்' பத்திரிகையில் ஓவியக் கலைஞராகப் பணியாற்றுகிறார். தங்கள் குடும்பத்துக்கென்று, கடைசியில் ஒரு வீடு சொந்தமாகக் கிடைத்து விட்டது என்ற சந்தோஷத்தில் குடிபுகுவதற்கு முன் ஒருநாள், வீட்டைச் சுற்றிப் பார்க்கச் சென்றார். அப்போது மாடிக்குப் போனார்.

அங்கு சுவரின் ஒரு பகுதியில், துணி ஒன்று வெளியில் நீட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தார். ஏணி ஒன்றில் ஏறி, துணி இருந்த இடத்தை நெருங்கியவருக்கு, அங்கு சுவற்றில் ஒரு சிறு கதவு தெரிந்தது. ஆர்வத்தில், அந்தக் கதவைத் திறந்தவர், அதிர்ச்சியில் உறைந்து போனார். உள்ளே ஒரு இரும்புப் பெட்டி இருந்தது. அதை வெளியில் எடுத்தார். அடுத்தடுத்து, ஆறு பெட்டிகள் இருந்தன. ஒரு பெட்டியைத் திறந்த போது அதில், கத்தை கத்தையாக பணம் இருந்தது.

அதிர்ச்சியில் இருந்து மீண்ட பெரின், அவற்றை தன் காரின் பின்பகுதியில் வைத்துக் கொண்டு, தன் பழைய வீட்டுக்குச் சென்றார். அங்கு அவர், அவர் மனைவி மற்றும் குழந்தைகள் என அனைவரும் சேர்ந்து அந்தப் பெட்டிகளில் இருந்த பணத்தை எண்ணினர். நாற்பதாயிரம் டாலர் (18 லட்ச ரூபாய்) அளவு தான் அவர்களால் எண்ண முடிந்தது. ஆனால் மேற்கொண்டு, மேசையில் வேறு பணம் கொட்டிக் கிடந்தது.

மொத்தப் பணத்தையும், வீட்டு சொந்தக்காரரிடம் ஒப்படைத்த பின் அவர் அளித்த பேட்டியில், ''இந்தப் பணம் நான் வாங்கிய வீட்டின் உரிமையாளர் சேர்த்தது. அவர் தன் வாழ்நாளில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைத்தது எனக்கல்ல என்பதை நான் உணர்ந்தேன். என் குழந்தைகளுக்கு ஒரு நல்ல பாடம் சொல்லிக் கொடுக்கவும், நான் நேர்மையாக நடக்கவும், இதை விட நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என்று மட்டும் தெரிந்து கொண்டேன் என்று கூறினார். ★

# உறவு கொள்ளாதீர்கள்...

ஆண், பெண் உறவு என்பது சந்தோஷமான ஓர் அனுபவம் என்றாலும், காதலில் அது நுழையாமல் இருப்பதுதான் நல்லது என்பது காதல் பற்றிய ஆராய்ச்சியாளர்களது கருத்து. ஆண்களது செக்ஸ் ஆர்வமும், பெண்களது செக்ஸ் ஆர்வமும் மிக வித்தியாசமானது.

தேவையான அளவு செக்ஸ் அனுபவித்ததும் அதைவிடச் சிறப்பாக வேறு பெண்ணிடம் செக்ஸ் கிடைக்கும் என அலையும் மனம் ஆண்களுக்கு உண்டு. ஆனால் பெண்கள் இயல்பாகவே ஒரே ஒருவரிடம் மட்டுமே உறவு கொள்ள விரும்புவார்கள்.

காதலித்த பெண்ணிடம் உறவு அனுபவித்தலும், அட இவ்வளவு தானா? என்ற நிலை ஏற்பட்டுவிட்டால் காதல் காணாமல் போய் விடும். காதலுக்கு முன் செக்ஸ் வைத்துக்கொண்டால் என்ன தப்பு என்பவர்கள் கீழ்க்கண்ட பதில்களைப் பார்த்த பின்னர் முடிவு செய்து கொள்ளுங்கள்.

பெண், ஆண் இருவருக்குமே திருமணம் வரையில் கூட கற்பைக் காப்பாற்ற முடிய வில்லையே என்ற தன்னிரக்கம் ஏற்பட்டுவிடும்.

ஏதோ ஒரு மிகப்பெரிய குற்றம் செய்ததாக மனம் உறுத்திக் கொண்டே இருக்கும். அடிக்கடி தவறு செய்யத் தூண்டும். சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படாத பட்சத்தில் தேவையில்லாத கர்ப்பம் ஏற்பட்டு அதனால் பெரும் பிரச்சனைகள் உண்டாகலாம்.

எப்போதுமே கிடைக்காத பொருள் மீதுதான் ஆர் வம் அதிகமாக இருக்கும். காதலில் செக்ஸ் கிடைத்து விட்டால் அதற்குப் பின், அங்கு எதிர் பார்ப்புகள் எதுவும் இருக்காது. பெரும் ஆர்வமும் இருக்காது. ★



# மீண்டும் புயல் வரும்

உசைன் போல்ட். குறுந்தூர ஓட்டப்புயல். ஜமெய்க்கா நாட்டிலிருந்து புறப்பட்ட இந்தச் சூறாவளி வீரன் 100 மீற்றர் தூரத்தை மிகக்குறைந்த நேரத்தில் ஓடிமுடித்த சாதனைக்குச் சொந்தக்காரர். ஒலிம்பிக்கில் தங்கமகனாக ஜொலித்தவர். ஆயினும் கடந்த வருடம் காயத்தால் அவதிப்பட்ட உசைன் போல்ட் ஒரு வருடமாக ஓட்டப்பந்தயங்களில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருந்தார். காயம் குணமடைந்து, பூரண உடல்தகுதியுடன் மீண்டும் மைதானத்துக்கு வந்த உசைனுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. டைமண்ட் பருவப்போட்டியின் போது டைசன் - கே என்ற வீரரிடம் மயிரிழையில் முதலிடத்தை பறிகொடுக்க வேண்டியிருந்தது. இருப்பினும் மனந்தளராமல் கடும் பயிற்சியில் இறங்கியுள்ள உசைன், ஐரோப்பிய விளையாட்டுப் போட்டிகளுக்காகக் காத்திருக்கிறார், தன்னை வீழ்த்திய டைசன் - கேயை இந்தப் போட்டிகளில் முந்துவதே தன்னுடைய இலக்கு என உசைன் போல்ட் கூறியுள்ளார். அப்படியானால் ஜமெய்க்கா புயல் மீண்டும் மையங்கொள்ளப்போகிறதா? என்று ரசிகர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.



தொலையா நினைவுகள்

# இரு விழிகள்



மேரி ஸ்ரெலா, அவள் ஓர் இளம் ஆசிரியை. அன்றைய அந்தப் பரிகாரக் கற்பித்தல் சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கு வந்திருந்தாள். ஐந்து நாள் வகுப்பின் முதல் நாளிலேயே எங்கள் கவனத்தை ஈர்த்தவர்களில் முதன்மையானவள் அவள். அவளின் கற்றல் கற்பித்தல் தொடர்பான செய்கைகளும் நடத்தைகளும் பேச்சும் உற்சாகமான அவளது வளர்ச்சியின் எதிர்காலத்தை எமக்கு உணர்த்தின. ஆடல் பாடல் ஆதியாம் கலைகளிலும் அவளின் நாட்டம் மிகவும் அபாரம். அவள் ஓர் ஆசிரியை என்ற வகையிலே அவளது பிரகாசமான வாழ்வின் படிக் கற்களாக அவை தோன்றின.

அவள் ஒரு விடயத்தில் ஈடுபட்டுச் செயற்படும்போது அதில் கொண்டிருந்த விருப்பும், சுறுசுறுப்பும், வேகமும், விவேகமும் அவளது ஆளுமையை மேலும் மேலும் அழகுபடுத்தின.

இத்தனை ஒளி பொருந்திய செயற்பாடுகளும் மலர்ந்த முகமும் கவர்ச்சியான பார்வையும் அவள் தனித்திருக்கும் சில பொழுதுகளில் அமைதியடைந்து உற்சாகம் குன்றிச் சோர்ந்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். நான் அதுபற்றி அவளிடம் கேட்க எண்ணியதுண்டு.

அன்று மூன்றாம் நாள் பயிற்சியின் பகல் உணவு இடைவேளையின் போது அவள் தனித்திருந்த இடத்திற்குச் சென்ற நான் அவளது சோர்ந்த நிலையைக் கண்டு ''என்ன ரீச்சர் ஏதாவது சுகமில்லையோ?'' என்று கேட்டேன். 'இல்லை' என்று பதிலளித்தவள் என்ன நினைத்தாளோ தெரியவில்லை ''சேர், உங்களோட நான் தனியாகக் கதைக்க வேணும் '' என்றாள். உடனேயே எண்ணிடத்தில் பல கேள்விகள் முளைத்தன. ஆனால் அவைகளைப் புறம்தள்ளி வைத்து விட்டு 'நீங்கள் என்னுடன் தாராளமாகக் கதைக்கலாம்' என்றேன் நான். ''ஓம்! சேர், இப்பொழுதில்லை. மாலை யில் வகுப்பு முடிவடைந்ததும் கதைக்கிறேன்'' என்றாள்.

மாலையில் வகுப்பு முடிவடைந்ததும் அவளைச் சந்தித்தேன். உற்சாகமும் சுறுசுறுப்பும் உறங்கிய நிலையில் கவலையின் கோடுகள் அவளின் அழகைச் சிதைக்கச் சிறு புன்னகையை வரவழைத்துக் கொண்டே அவள் என்னுடன் கதைத்தாள். அவள் சொன்ன கதைகள் யாவுமே அவளைப் பற்றியவை தான்.

அவளின் தந்தையைப் போன்ற தோற்றத்தில் நானிருக்கிறேன் என்ற பார்வையே, அவளை என் பால் ஈர்த்தது. அவள் என்னைப் பார்த்து ''நீங்கள் என் தந்தை போல் இருக்கிறீர்கள்'' என்றபோது அவளிடத்தில் நான், என் அழகிய மகளைக் கண்டேன். தனது கவலைகளை அவள் எனக்கு சொல்லிக் கண் கலங்கிய போது தந்தை என்ற அந்த உறவின் உன்னதத்தின் மீது அவள் கொண்டிருந்த உயர்ந்த பாசத்தையும் அவள் அவருக்குக் கொடுத்திருந்த மதிப்புயர் ஸ்தானத் தையும் நான் உணர்ந்து கொண டேன்.

''இப்பொழுது அம்மா, தம்பி இருவரும்தான், என்னுடன் இருக்கிறார்கள். அப்பாவை இழந்து பல வருடங்களாகி விட்டது.'' என அவள் கூறிய போது, இறப்பு இன்றைய நாட்களில் ''இயல்பானதே என்ற எண்ணத்தோடு எப்போது அது நிகழ்ந்தது?'' என விசாரித்தேன். அதற்கு அவள், தனது அப்பா வேறொரு பெண்ணுடன் குடும்பம் நடத்துவதாகக் கூறிக் கண் கலங்கினாள்.

அப்பா இறந்திருப்பின் அது பிரச்சினையாகத் தோன்றியிருக்காது. அவர் உயிருடன் இருப்பதும் வேறொரு பெண்ணுடன் குடும்பம் நடத்துவதுமே அவளுக்கு இப்பொழுது பிரச்சனையாகியது.

அவளது தம்பி, பிறந்த ஓரிரு வருடங்களுக்குள்ளாகவே அம்மாவையும் தங்களையும் விட்டு விலகிய தந்தையை அவளுக்குப் பிடிக்கவில்லை. எனினும் அவளின் அப்பா எனப்வர்; இப்பொழுது அவளுக்குத் தேவை என்ற ஒரு நிலை தோன்றியிருந்தது. அந்தக் குடும்பத்தை ஆதரவும் அன்பும் காட்டி வழிநடத்த வேண்டியவர் அவர். அவரோ தமிழர் கலாசாரத்தையும் மீறி வேறொரு பெண்ணுடன் வாழ்கிறார் என்று எண்ணும் போதெல்லாம் அவளுக்கு வேதனை பெருகியது.

**நெடுந்தீவு மகேஷ்**

அவளைச் சூழ்ந்திருக்கும் சமூகம் இதனைக் காரணமாகக் கொண்டு அவளை ஏளனமாகப் பார்ப்பதாக ஒரு பிரமை. அவள் திருமண பந்தத்தில் இணைவதற்கும் தந்தையின் இச்செயலைக் காரணம் காட்டியே தடைபோடும் சிலரின் வார்த்தைகளைக் கேட்கும் தோறும் அவளின் ஆளுமை குன்றிப் போகிறது

ஒரு குடும்பத்தின் தலைவன் தந்தையே என்பதில் அவளுக்கு இருந்த நம்பிக்கையை அவளின் வார்த்தைகள் வெளிப்படுத்தின. ஆனால் அப்பா வேறு திருமணம் செய்து தனியாக வாழ்க்கை நடத்துகிறார் என்ற செய்தி அவளைத் தினமும் வருத்தியது. அதுவே அவளது ஆளுமையைக் குலைத்தது. பல வேளைகளில் சிந்தனையைக் குழப்பி அவளின் உயர்ச்சிக்கான உற்சாகத்தையும் தடுத்தது.

அவள் ஓர் ஆசிரியை. சமூகத்தின் மதிப்புக்குரியவள். அத்தோடு திருமண வயதுக்குள் வந்துவிட்டது அவளது பருவம். இத்தனைக்கும் இடையூறு விளைக்கும் செய்கையாக வேறு பெண்ணுடனான தந்தையின் வாழ்க்கை, அது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப் பட இயலாத தாகியது. தந்தையின் செய்கை அவளது பாதையில் பல கேள்விகளை எழுப்பின. அவற்றுக்கான விடைகளைத் தேட அவளால் இயலவில்லை.

இந்த அப்பாக்கள் தங்கள் பிள்ளைகளைப் பற்றி என்றுமே சிந்தித்ததில்லை. ஒவ்வொருவரது மகிழ்வும் உயர்வும் பிள்ளைகள் விடயத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறுவதில்லை.

வாழ்வு, சமூகம் அனைத்திலும் இரத்த உறவுகளின் இணைப்புக்கள் உள்ளன. தந்தையரின் அல்லது தாய்மாரின் செய்கைகளால் பிள்ளைகள் ஏளனம் செய்யப்படுவதையோ அல்லது தாழ்வாக நோக்கப்படுவதையோ எவரும் கவனத்தில் கொள்வதில்லை. பெற்றோர் பட்ட கடன் பிள்ளைகளையே வருத்துகிறது

தந்தையின் செய்கையால் வருந்தும் ஆசிரியையின் மனம், ஆறுதலடையும் வகையில் கூறத் தகுந்த வார்த்தைகள் எதுவும் அப்பொழுது என்னிடத்தில் இருக்கவில்லை. ஆனால் அவளது தந்தையின் உருவத்தை அவள் என்னில் கண்டாள் என்ற திருப்தியில் என் மகளாக அவளைப் பார்த்தேன். எனினும் இத்தகைய தந்தையர்களால் பிள்ளைகள் அடையும் அவமானத்தைச் சற்றுச் சிந்தியுங்கள். அவளின் மகிழ்வான எதிர்காலத்தை அவளது அப்பாவின் செய்கை கேவலப்படுத்துவதாக எண்ணுவதை அவளால் மறக்க முடியவில்லை.

பெற்றோரே உங்கள் உயர்வான செய்கைகளால் பிள்ளைகளின் எதிர்காலத்தை மகிழ்வுக்குரியதாக்குங்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் உங்கள் பிள்ளைகளையும் பாதிக்கும் என்பதை நினைவில் இருத்துங்கள். ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழர் பண்பாட்டை மறந்து போகாதீர்கள். மொழியும் கலாசாரமும் எமது இரு விழிகள் எனப் போற்றும் நாம், அவற்றைக் கடைப்பிடிப்போம்.★

# பச்சை மனத்துடன் பயணிக்கும் நபீல்

மனம் ஒரு குரங்கு என்று சொல்லுவார்கள். அதன்படி அடிக்கடி மாறும் எண்ணங்களால் அலையும், தாவும், நிலையற்ற செய்கைகளால் மனத்தின் உறுதியில் மயக்கம் நிலவுவதைப் பார்க்கின்றோம்.

ஆனால் மனம் மிகவும் மென்மையானது. அது என்றும் அமைதியாகவும் மகிழ்வாகவும் இருக்கவே விரும்புகின்றது. எனினும் புறத்தாக்கங்களால் அது அடையும் வேதனைகளையும் சோதனைகளையும் கணக்கிட்டுக் கூறுதல் இயலாததாகும்.

இங்கே, கவிஞர் தனது மனதிற்கு ஏற்பட்ட துன்பதுயரங்களை ஏற்றுக் கொண்டு துடிக்கும் நிலையை அவரது இக் கவிதை வெளிப்படுத்துகிறது.

**சட்டியிலே போட்டு வறுக்கிறாய்;**
**முறுகுவதாய் இல்லை மனது.**

சட்டியில் இட்டு வறுப்பது போல் மனதை வருத்தும் செயல்களைக் காணும் தோறும் துயரம் அதிகரிக்கிறது. ஆனால் எனது மனம் முறுகவோ கருகவோ இல்லை என்கிறார் அவர்.

**ஓடு காய்ந்து அகப்பை தேய்ந்து**
**இறுகிய தறுவாயிலும் பச்சை இருக்கிறது**

வருத்தம் அதிகரித்த நிலையில் மனம் காய்ந்து இறுகிய தறுவாயிலும் எங்கோ ஒரிடத்தில் பசுமை இருக்கிறது.

**தேங்காய்போல் துருவியும் பார்த்தாய்**
**-முடியவில்லை**
**அரிசியைப்போல் உலையிலும் இட்டாய்**
**-வேகவில்லை**

எல்லா வகையிலும் எனது மனத்தின் நல்லெண்ணத்தை மாற்றமுயன்றாய். என் மனதை வருத்த முயன்றாய். தேங்காய் துருவியிலிட்டுத் துருவினாய். அது போன்ற கொடிய வலியையும் வருத்தத்தையும் ஏற்படுத்தினாய். உலையிலே இட்டு வேக வைத்தாய். ஆனால் எனது மனம் மாறவில்லை.

**உருளைக்கிழங்கு போல் வெட்டவும்**
**இலைக்கறி போல அரியவும்**
**இயலவில்லை இயலவில்லை**

என் மனத்தை வருத்தி மாற்ற நீ எடுத்துக் கொண்ட கொடிய உத்திகள் வெட்டுதலும், அரிதலும் போலக் கூர்மையாக என்னைத் தாக்கின ஆனால் இயலவில்லை. என் மனத்தின் மென்மையை மாற்ற, அதனை உடைக்க இயலவில்லை.

**ஒருமுறை உரலிலிட்டு இடித்த போதும்**
**உடையாத என் மனதை**

என் மனத்தை மாற்ற. அல்லது உங்கள் வார்த்தைகளுக்கு அடிமையாகி பொய்மைகளுக்குள் மூழ்கி இளகாத மாறாத மனத்தை, இறுதியாக உரலிலிட்டு இடித்தாய். அப்போதும் இளகாத மாறாத, உடையாத மனம் என்னுடையது. அதுதான் பச்சை மனம் என்கிறார் நிஸ்வியூ முஹம்மத் நபீல் என்கின்ற இளம் கவிஞர்.

இவர் கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1967 இல் பிறந்தவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகுதி நேர அறிவிப்பாளராகவும் கடமையாற்றுகிறார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கை நெறியில் டிப்ளோமா பட்டம் பெற்றவர். அவரது காலமில்லாக் காலம் எனும் கவிதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள ''பச்சைமனம்'' எனும் கவிதையே இது.



புதுக்கவிதைத் துறையில் ஈடுபட்டு எழுதிவரும் கவிஞரின் புலமைத்திறன் மேலும் மேலும் பல புதிய ஆக்கங்களுக்குப் பாலமிடும் என நம்புவோம்.★

**மைதிலி.தேவராஜா**

# தேடுதல் வேட்டை

சுற்றிவளைப்புகள், தேடுதல் வேட்டைகள் போன்ற வார்த்தைகள் தமிழ் மக்களின் உயிர் நடுங்கும் வலிமை வாய்ந்தவையாக விளங்கி வருகின்றன. இச்சொற்றொடர்களில் வரும் ஏனைய வார்த்தைகளின் அர்த்தங்கள் நலிவடைந்து போக வேட்டையே நடைமுறை நிகழ்வாக இருந்த காலங்களைத் தமிழ் மக்கள் மறந்து விடமுடியாது.



அண்மையில் ஒரு படுகொலை தொடர்பாக மட்டக்களப்பில் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்ரர் என்பவர் கைது செய்யப்பட்டிருந்தார். இக் கைதை அடுத்தே மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி, களுவாங்கேணி, ஏறாவூர் செங்கலடி ஆகிய பிரதேசங்கள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் வேட்டைகள் நடத்தப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. இத்தேடுதல் நடவடிக்கையின்போது ஒவ்வொரு வீடும் சல்லடை போடப்பட்டதாகவும், மக்கள் பலர் துருவித்துருவி விசாரிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. ஆனால் இதன்போது எவரும் கைது செய்யப்படவில்லை, என்பது மட்டுமன்றி இவை என்ன நோக்கத்துக்காக நடத்தப்பட்டவை என்ற விஷயம் கூட எந்த ஒரு தரப்பினாலும் வெளியிடப்படவில்லை. அதன் காரணமாக இப்படியான சுற்றி வளைப்புகள் இத்துடன் நின்று விடுமா அல்லது மேலும் தொடரக் கூடுமா என்ற பேரச்சம் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஏனெனில் ஒரு காலத்தில் சுற்றி வளைப்புகள், தேடுதல் வேட்டைகள் என்ற பெயரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பலநூறு மக்கள் கொல்லப்பட்டமையும், குறை உயிரில் வைத்து எரிக்கப்பட்டமையும் இலகுவில் மறந்து விடக்கூடியவையல்ல. அவற்றை இப்போது நினைத்தாலும் நெஞ்சு நடுங்குமளவுக்கு அவை பயங்கரமானவையாக விளங்கின.

1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வல்வெட்டித்துறையைச் சுற்றியுள்ள கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு இளைஞர்கள் கைகள் கட்டப்பட்டு வல்வெட்டித்துறை சன சமூக நிலையக் கட்டிடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு சனசமூக நிலையக் கட்டிடத்துக்குள் அடைக்கப்பட்டனர். பின் குண்டு வைத்து அக்கட்டிடம் நகர்க்கப்பட்டதில் அதற்குள் அடைக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோர் கொல்லப் பட்டனர்.

அதே காலப்பகுதியில் நெடுங்கேணி ஒதியமலையில் வீடு வீடாகப் புகுந்து இளைஞர்களையும், இளம் குடும்பஸ்தர்களையும் பிடித்துச் சென்ற படையினர் அவர்களை அங்குள்ள வாசிகசாலைக்குள் வைத்துச் சுட்டுத் தள்ளினர். இதில் முப்பதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற இப்படியொரு சுற்றி வளைப்பில் அங்குள்ள இறால் பண்ணையில் வைத்து நூற்றுக்கு மேற்பட்டோர் குடும்பம் குடும்பமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

1990 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1992 ஆம் ஆண்டிலும் இப்படியான சுற்றிவளைப்புப் படுகொலைகள் ஏராளம் நடத்தப்பட்டன. வந்தாறுமூலை, சத்துருக்கொண்டான், புதுக்குடியிருப்பு, கொக்கட்டிச்சோலை, உடும்பன் குளம் என ஒவ்வொரு இடங்களிலும் ஏராளமான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

**சந்திரசேகர ஆசாத்**

அதிகாலைப் பொழுதில் நான்கு ஐந்து கிராமங்களைச் சுற்றி வளைத்து அனைவரையும் ஒரு இடத்துக்குச் சாய்த்துச் செல்வதும், பின் விசாரணை என்ற பெயரில் இளைஞர்களையும் இளம் குடும்பஸ்தர்களையும் களைந்து எடுப்பதும், பின் அவர்களை அவர்களின் உறவினர்களின் கண் முன்னே சுட்டுக் கொல்வதும் என ஒரு பயங்கரக் கொலை வெறியாட்டம் கிழக்கில் அக்காலப்பகுதியில் அடிக்கடி இடம்பெற்றன.

பிரிட்டிஷ் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவின் கினி மினி படைப்பிரிவால் பயிற்றுவிக்கப்பட்ட விஷேட அதிரடிப்படையினரும், இஸ்ரேலிய மொஷாட் உளவுப்பிரிவால் பயிற்றுவிக்கப்பட்ட முஸ்லீம் ஊர்காவல் படையினருமே இக்கொலை வெறியாட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதாக அந்நாட்களில் செய்திகள் கசிந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1988, 1989 காலப்பகுதியில் இந்திய அமைதிப் படை இங்கு நிலை கொண்டிருந்தபோது தினமும் ஒரு தேடுதல் வேட்டை என வடக்குக் கிழக்கில் எமது மக்கள் பட்ட துன்ப துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.இப்படியான கொடூரமான அனுபவங்களைச் சந்தித்த எமது மக்கள் மீண்டும் தேடுதல் வேட்டைகள், சுற்றிவளைப்புகள் என ஆரம்பிக்கப்பட்டிருக்கும் போது எப்படி அச்சமடையாமல் இருக்க முடியும்?

மேலும் கிடைக்கப்பெறும் சில செய்திகளும் இடம்பெற்று வரும் சம்பவங்களும் இப்படியான அச்சத்தை மேலும் அதிகரிக்கும் வகையிலேயே அமைந்துள்ளன.நாடு முழுவதும் 134 இராணுவ மையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும், இவை மீண்டும் நாட்டில் கிளர்ச்சிகள் பயங்கரவாத நடவடிக்கைகள் தோற்றம் பெறுவதைத் தடுக்கும் நோக்குடன் செயற்படும் எனவும் பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இப்படி நாடு முழுவதும் இராணுவ மையங்கள் அமைக்கப்படுவதன் மூலம் நாடு முழுமையாக ஒரு இராணுவ வலைப்பின்னலுக்குள் கொண்டு வரப்படுகின்றது என்பதே முக்கியமான விஷயமாகும்.

இன்று வடக்கில் மீள்குடியேற்றம், காணிப் பிரச்சினை, அபிவிருத்தி வேலைகள் போன்ற சகல குடிசார் நடவடிக்கைகளிலும் இராணுவத்தின் மேலாதிக்கமே ஓங்கி நிற்கிறது. சிவில் அதிகாரிகள் இராணுவத்தின் ஆலோசனைகளுக்கு அமையவே செயற்பட வேண்டிய நிலை உள்ளது. திட்டமிடல் நடவடிக்கைகள் முதற்கொண்டு பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் வரை படையினரின் பிரசன்னம் என்பது எழுதப்படாத கட்டளையாக்கப்பட்டுள்ளது. இதை மீறு பவர்கள் பலவிதமான நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும் என்ற அச்சம் இங்கு நிலவி வருகிறது.

இப்போது நாடு முழுவதும் இராணுவ மையங்கள் அமைக்கப்படுவது வடக்கில் நிலவும் ஒரு இராணுவ மேலாதிக்க நிலைமையை நாடு முழுவதும் விஸ்தரிக்கும் நோக்கம் கொண்டதாக இருக்கக் கூடும் என்ற சந்தேகமும் எழுகிறது.

ஆனால் இவ்வாறான மையங்கள் அமைக்கப்படு வதும், அதற்குத் தெரிவிக்கப்படும் காரணங்களும் மீண்டும் வடக்குக் கிழக்கில் சுற்றிவளைப்புக்களும், தேடுதல் வேட்கைகளும் தொடங்கப்படும் ஒரு பயங்கரம் உருவாக்கப்படுவதற்கான முன்னறிவித்தலாக இருக்கக் கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

எனினும் இப்படியான தேடுதல் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் வடக்குக் கிழக்குடன் மட்டுப்படுத்தப்படாது என்பதற்கான சில அறிகுறிகளும் தென்படுகின்றன.

முழுநாட்டையுமே இராணுவ மயப்படுத்தும் வகையிலான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இதன் ஒரு பகுதி தான் தலைமைத்துவப் பயிற்சி என்ற பெயரில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் வழங்கப்படும் பயிற்சியாகும்.

இதுஒரு வகையில் கட்டாய இராணுவச் சிந்தனைப் போக்கை உருவாக்கும் ஒரு முயற்சியாகும். அதாவது சரி பிழை , நல்லது கெட்டது என்பன போன்ற விஷயங்களைப் பற்றி முடிவெடுக்கும் சுய சிந்தனைப் போக்கை ஒதுக்கிவிட்டு நிபந்தனையற்ற விதத்தில் கட்டளைகளுக்கு கீழ்ப்படியும் போக்கை உருவாக்குவதாகும். இப்படியான ஒரு சிந்தனைப் போக்கினால் ஒருவன் ஆட்கொள்ளப்படும் போது அவன் சகலவிதமான மனிதாபிமானச் சிந்தனைகளையும் இழந்து விடுகிறான்.

மேலதிகாரிகளின் கட்டளைக்கு கேள்வி எழுப்பாமலே கீழ்ப்படிவதும், தனக்குக் கீழ் உள்ளவர்கள் தனக்கு அப்படியே கீழ்ப்படிய வேண்டும் என எதிர்பார்ப்பதுமே அவனது நடைமுறை வாழ்வாகி விடுகிறது.

இதன் ஆபத்தை உணர்ந்து கொண்ட மாணவர் அமைப்புக்களும் புத்தி ஜீவிகளும் எதிர்ப்புக்குரல் எழுப்பி வருகின்றனர். மாணவர்கள் நீதிமன்றம் வரைக் கூடப் போயுள்ளனர்.

அரசாங்கமோ எந்த ஒரு எதிர்ப்பு நடவடிக்கையையுமே பொருட்படுத்தாமல் தலைமைத்துவப் பயிற்சி நெறியை ஆரம்பித்துவிட்டது.

எப்படியிருந்த போதிலும் இன்றைய அரசாங்கத்தின் ஒவ்வொரு நகர்வும் இலங்கையை முழுமையாக இராணுவ மயப்படுத்தப்படுவதை நோக்கியே அமைந்துள்ளன.எனவே எதிர்காலத்தில் சுற்றிவளைப்புகள், தேடுதல் வேட்டைகள் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல நாடு பரந்த அளவில் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் உண்டு.

இன்று வாழ்க்கைச் செலவு உயர்வு, ஊதிய உயர்வு மறுப்பு, மாணவர்கள் பிரச்சினை போன்ற ஏராளமான பிரச்சினைகள் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் அமைதியின்மையைத் தோற்றுவித்து வருகின்றன. ஆனால் போரின் வெற்றி, நாட்டின் இறைமை போன்ற விஷயங்களைக் காட்டி மக்களின் கோபத்தை அரசு திசை திருப்பி வருகிறது. ஆனால் இது நீண்ட நாட்களுக்கு சாத்தியமில்லை என்பதை அரசாங்கம் அறியும். எனவே அப்படியான ஒரு நிலைமையைச் சமாளிக்கும் வகையிலேயே இப்போதைய இராணுவ மயமாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடக்கு முறைகளும் படுகொலைகளும் சிங்கள மக்களுக்குச் சாதகமானவை என்றொரு மாயை ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அதே அடக்கு முறைகளும், படுகொலைகளும், தேடுதல் வேட்டைகளும் சிங்கள மக்களை நோக்கித் திரும்பும் நாட்கள் வெகு தூரத்தில் இல்லை.

இதைச் சிங்கள மக்கள் அனுபவபூர்வமாக உணரும் போது இன்றைய மாயையிலிருந்து வெளி வந்து நிச்சயம் விழிப்படைவார்கள். ஆனால் அது, காலம் கடந்தபின் வரும் விழிப்புணர்வாக இருக்குமானால் பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை.✱

# சுடர் ஒளி

29, மே - 04, ஜூன், 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14. டெலிபோன்: 0115738005 பக்ஸ்: 0115517944 - 5

E-mail: editorial@sudaroli.com


## இலங்கையின் சாபக்கேடு

''அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நாம் முன்மொழிந்தபோது அரசு அதனை எதிர்த்தது. அதை நடைமுறைப்படுத்தி இருந்தால் போரைத் தடுத்திருக்கலாம். பல்லாயிரம் உயிர்களைப் பலியிட்டிருக்கத் தேவையில்லை; இனங்களுக்கு இடையில் காயங்களையும் வளர்த்திருக்கத் வேண்டியதில்லை. இப்போதோ, 13ஆவது திருத்தத்துக்கும் மேலாகச் சென்று தீர்வு காண்பதற்கு இந்தியாவுடன் இணங்கிப் போயுள்ளது அரசு. இந்தியா முன்வைக்கும் போது மட்டும் ஏன் இது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது? நாம் முன்வைத்தபோது 13ஆவது திருத்தத்தையே எதிர்த்தவர்கள், இப்போது அதையும் தாண்டிச் செல்லப் போகிறார்களாம்.''

இப்படிக் கூறி இருப்பவர் வேறு யாருமல்லர், ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்லதான்.

கடந்த 50 ஆண்டுகளாக இந்த நாட்டின் சாபக்கேடு இதுதான். ஆளும் கட்சியாக இருக்கும் போது தமிழர் பிரச்சினைக்குத் தாம் முன்வைக்கும் அரசியல் தீர்வுத் திட்டத்தை எதிர்க் கட்சியாக வந்ததும் தாமே தூக்கி எறியும் கயமையைச் செய்யும் 'நல்மனம்' கொண்ட சிங்கள அரசியல்வாதிகளைத்தான் நாம் பெற்றிருக்கிறோம்.

இதே ஐக்கிய தேசியக் கட்சி அரசுதான் 2002இல் புலிகளுடன் ஆரம்பித்த சமாதானப் பேச்சில், உள்ளக சுயாட்சியைத் தமிழர்களுக்கு வழங்க இணங்கி இருந்தது. அப்போது அதனை இன்றைய ஜனாதிபதியும் அவரது சுதந்திரக் கட்சியினரும் கடுமையாக எதிர்த்தனர். அன்று ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா அம்மையார், அதனையே காரணமாகக் கொண்டு ரணிலின் அரசைக் கலைத்தார்.

ஆனால், இதே சந்திரிகா 1994ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வேன் என்று சூளுரைத்தார். பின்னர் ரணில் அதனைக் கொடுக்க முன்வந்தபோது, ''சுயாட்சி என்று ஒன்றைக் கேள்விப்பட்டிருக்கிறேன்; அதென்ன உள்ளக சுயாட்சி?'' என்று கேலி பேசினார். அத்தோடு நிற்காமல் சமாதானப் பேச்சைக் குழப்பும் வகையில் ரணிலின் அரசையும் கலைத்தார்.

கடைசியில் பதவியிலிருந்து வெளியேறிச் செல்வதற்கு முன்னர் 2004இல் ஒரு தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தின்முன் வைத்தார் சந்திரிகா. அதில் சுயாட்சியை விட மிகக் குறைந்த அதிகாரங்களே தமிழர் களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஐ.தே.க. அதனை எதிர்த்தது. தீர்வுத் திட்ட நகல்களை நாடாளுமன்றத்துக்குள்ளேயே தீயிட்டு எரித்தது.

பின்னர் ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ அதற்கு முன்னர் காணப்பட்ட எல்லா அரசியல் உடன்பாடுகளையும் தூக்கி எறிந்தார். ஒற்றை ஆட்சியின் கீழ், அதிகாரப் பரவலாக்கம் மட்டுமே செய்யப்படும்; ஒரு சில மாகாணங்களுக்கு மட்டும் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படமாட்டா என்றார்.

ஆனால், இன்றைய உலகச் சூழல் அவரை அந்த நிலைப்பாட்டில் நிலைத்து நிற்க விடுவதாக இல்லை. தமிழர்கள் கேட்பதைக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை, குறைந்தளவு அதிகாரங்களையாவது பகிருங்கள் என்று மஹிந்தவுக்கு வெளி நிர்ப்பந்தங்கள் அதிகரிக்கின்றன. அதனால் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்கும் அப்பால் சென்று ஒரு தீர்வை ஏற்படுத்தத் தயார் என்பது போன்று அரசு சமிக்ஞை காட்டுகிறது.

இது நடக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று ஒரு தீர் வைத் தான் முன்வைப்பார் என்று கடந்த 3 வருடங்களுக்கு மேலாக ஜனாதிபதியும் கூறிக்கொண்டுதான் இருக்கிறார். ஆனால் எதுவும் நடந்தபாடில்லை.

அது வெறும் வாய்வீச்சுத்தான்; உண்மையில் எதுவும் நடக்காது என்று தெரிந்த வரையில் பேசாமல் இருந்த ஐ.தே.க. இப்போது 13ஆவது திருத்தத்துக்கு எதிராகவும் குரல் கொடுக்கத் தொடங்கி இருக்கிறது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தியா சென்றிருந்த போது, வெளியிடப்பட்ட கூட்டறிக்கை யில் 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று, தமிழ்க் கட்சிகளுடன் பேசி தீர்வு ஒன்றைக் காண்பதில் அரசு உறுதியாக இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையிலேயே 13ஆவது திருத்தத்தை எதிர்ப்பதற்கு ஐ.தே.க. முன்வந்துள்ளது. இவ்வளவுக்கும் அக்கட்சியின் தலைவர் ஜே.ஆர்.ஜெவர்த்தனவுக்கும் - இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கை மூலமே இந்த 13ஆவது திருத்தம் வந்தது. சுயலாப அரசியலுக்காக இப்போது அதனை எதிர்க்கவும் ஐ.தே.க. தயாராகிவிட்டது.

இதுதான் இந்த நாட்டின் சாபக்கேடு. வாக்குகளுக்காகவும் அவ்வப்போதைய அரசியல் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காகவும் தீர்வுத் திட்டங்கள் பற்றி சிங்களத் தலைமைகள் பேசும். பின்னர் தாம் முன்வைத்தவற்றைத் தாமே எதிர்க்கும். இதற்கு எப்போது முடிவுவருமோ அன்றுதான் இந்த நாட்டில் நிலையான அமைதி உருவாக முடியும்.



# அடங்க மறுக்கும் குதிரைகளும்

பிரமன்

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்து வந்த உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்தபின்னர் தன்னை நோக்கிவரக்கூடிய அச்சுறுத்தல்களையெல்லாம் முளையிலேயே கிள்ளிவிட அரசு எத்தனித்து வருகின்றது. புலிகள் இயக்கம் முள்ளிவாய்க்காலில் இராணுவரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட பின்னர் , யுத்த வெற்றி என்ற போதையில் சிங்களமக்கள் மூழ்கியிருந்ததால், அரசு மீதான எதிர்மறையான செயற்பாடுகள் இடம்பெறுவது மிகக்குறைவாகவேயிருந்தது.

நிலைமை இப்போதும் அப்படியே தொடர்ந்திருந்தால் அரசும் தன்னிருப்புக் குறித்த கவலைகளை மறந்துவிட்டு, அம்பாந்தோட்டையில் ஏதாவது அபிவிருத்திப் பணிகளில் கவனத்தைக் குவித்திருக்கலாம். ஆனால் காட்சிகளில் சடுதியான மாற்றங்கள். சண்டித்தனத்தோடு கதைகளை உலவவிட்டுக் கொண்டிருந்த ஆட்சியாளர்களை உலகநாடுகளின் கால்களில் வீழ்ந்து கெஞ்சுமளவுக்கு ஐ.நா அறிக்கை இலங்கையின் குற்றங்களை மூடியிருந்த திரையை இழுத்து விட்டிருக்கிறது. போருக்காக வாங்கிய கடன்களின் விஸ்வரூபம் பொருள்களின் விலைகளில் தெரிய ஆரம்பித்திருப்பதால், மக்களிடையே அரசுக்கு எதிரான உணர்வலைகள் தோற்றம் பெறத்தொடங்கியுள்ளன.


இத்தகைய மக்கள் உணர்ச்சிகள் மீளவுமொரு ஜே.வி.பி கிளர்ச்சி போன்ற போராட்டங்களுக்கு வித்திடக்கூடுமோ என்று அதிகாரத்தரப்பு அஞ்சுகிறது. அதற்கான சில சமிக்ஞைகளும் மாணவர்தரப்புகளிடமிருந்து கிளம்பத்தொடங்கின. அதிலும் அரசுக்குத் தலையிடியைக் கொடுக்கும் உதுல் பிரேமரத்ன போன்ற ஜே.வி.பி அமைப்பைச் சேர்ந்தவர்கள் அகில இலங்கைப் பல்கலைக்கழக மாணவர் அமைப்புகளின் தலைமைப் பொறுப்புகளில் இருப்பது ஆபத்தான நிலைமையையே உண்டு பண்ணும் என்பது அரசுக்குத் தெரியும். உதுல் பிரேமரத்ன கைது செய்யப்பட்டு, பின்னர் அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்கக்கூடாது என்னும் நிபந்தனையின் பேரில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும் அவருக்குப் பின்னர் மாணவர் அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றவரும் அரசுக்கு எதிரான திசையிலேயேமாணவர்களைவழி நடத்தினார்.

தென்னிலங்கைப் பல்கலைக்கழங்களில் பயில்கின்ற மாணவர்களில், பெரும்பாலானோர் ஜே.வி.பி அமைப்பு சார்ந்த சிந்தனைகளை உடையவர்களாகவே நீண்டகாலமாக இருந்து வருகின்றனர். மரபார்ந்த கருத்தியல் கையளிப்பாக, சிரேஷ்ட மாணவர்கள் தாம் பல்கலைக்கழகங்களை விட்டு விலகினாலும் தமக்குப் பின்னால் வருகின்ற மாணவர்களுக்கு தாம் நம்பிக்கை கொண்டிருந்த ஜே.வி.பி சித்தாந்தங்களை பரிமாறிவிட்டே செல்வர். எனவே மாணவர்கள் வருடந்தோறும் பல்கலைக்கழகங்களை விட்டு பட்டதாரிகளாக வெளியேறினாலும், இடதுசாரிச் சிந்தனைகளை உள்வாங்கியவர்களாகவே தென்னிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் இருந்து வருகின்றனர். அரசுக்கு எதிரான ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுப்பதில் இவர்களே முன்னிலையில் உள்ளனர்.

வடக்கு, கிழக்கு பகுதிகளிலும் ஏறக்குறைய இதே நிலைதான்.ஆனால் இங்குள்ள பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ்த்தேசியசிந்தனைக்கு உரமூட்டக் கூடிய செயல்களில் ஈடுபடுவது வழமை. 1980களில் -தமிழ்மக்கள் தமக்கான ஆயுதரீதியான போராட்ட வடிவத்தை தேர்ந்தெடுத்த காலப்பகுதியில்- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே புரட்சிகளின் சிந்தனைப் பட்டறையாக விளங்கியது. வெவ்வேறு பெயர்களுடன், வெவ்வேறு சித்தாந்தங்களுடன் தமிழ்மக்களின் விடுதலைக்காக ஆயுதமேந்திய அமைப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் பல்கலைக்கழகத்திலேயே தம் எண்ணங்களை, கொள்கைகளை புடமிட்டுக் கொண்டனர். அதன் பின்னர் வந்த காலங்களிலும் -மிக இறுக்கமான சூழல்களிலும் - யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ்த்தேசிய விடுதலைக்காகத் தம்மாலான பங்களிப்பை ஏதோ ஒருவிதத்தில் வழங்கியே வந்துள்ளனர்.

1996க்குப் பின்னர் யாழ்.குடாநாடு முழுதும் படையினரின் கைகளில் வீழ்ந்த பின்னர் ஒரு அடைக்கப்பட்ட இருள் சூழ்ந்த வெளியானது யாழ்ப்பாணம். அடிக்கடி மனிதர்கள் காணாமல் போயினர். வீதிகளில்

# பயமறியாக் கன்றுகள்




*கட்டிளமைப் பருவத்தின் உச்சத் தருணத்திலேயே - 20 வயதளவிலேயே - பல்கலைக் கழகங்களுக்குள் மாணவர்கள் அனுமதி பெறுகின்றனர். இளவயதுக்கே உரிய துடிப்பு, சாதிக்க வேண்டும் என்ற வெறி, சமூகப் பிரக்ஞை, வெவ்வேறு பகுதிகளில் இருந்து வந்த பிற மாணவர்களின் நட்பு என்பனவெல்லாம் பல்கலை மாணவர்களை வித்தியாசமான இன்னொரு நிலைக்கு இட்டுச் செல்கின்றன. கல்வி பயில்கின்ற காலத்தில் தமது ஆளுமைகளை வெளிப்படுத்தக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை இவர்கள் தவறவிடுவதில்லை. பாடசாலையில் கற்கின்றபோது ஆசிரியர்கள், பெற்றோர் என்போரின் தலையீடுகளும், அதீதமான கட்டுப்பாடுகளும் இவர்களின் உள்ளார்ந்த விருப்பங்களுக்குத் தடைபோட்டிருக்கும். ஆனால் பல்கலைக்கழகம் என்பது இவர்களுக்குச் சுதந்திரமான வெளியாக மாறிப்போகின்றது. முன்னைய கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. போதாக்குறைக்குத் தோள் கொடுப்பதற்குப் பின்னால் ஒரு கூட்டம். எனவே எந்தவிதமான பின்விளைவுகள் பற்றியும் கவலைகொள்ளாமல் நினைத்ததை முடிப்பவர்களாக இவர்கள் உரு வெடுக்கிறார்கள். பல்கலைக்கழகத்தைவிட்டு பட்டதாரிகளாக வெளியேறி நாட் டின் நிர்வாகத்தில் பங்கெடுக்கும் உரிமை எதிர்காலத்தில் கிடைக்க இருப்பதால், நாட்டின் தலைவிதியையே தீர்மானிக்கும் சக்தி தம்மிடம் இருப்பதாக எண்ணிக் கொள்கிறார்கள். அதன்படியே தமது சக்தியை வெளிப்படுத்தும் காரியங்களில் இறங்குகிறார்கள். மாணவர்களின் மனோநிலையைப் பொறுத்து இக் காரியங்கள் நன்மைக்கும் தீமைக்கும் வழிவகுக்கின்றன. பல்கலைக்கழகங்களில் புரட்சிக் காரர்களாக - கலகங்களின் குரலாக - இருந்த மாணவர்கள் பலர் பட்டதாரிகளாகி அரச உத்தியோகங்களில் அமர்ந்ததும் பெட்டிப் பாம்பாகி விடுவதும் தொடர் கதைதான்.*

பயணிக்கும்போது என்னவும் நிகழலாம் என்ற அச்சம். செம்மணி போன்ற புதைகுழிகளின் உருவாக்கம் அசுரகதியில் விரிவடைந்து கொண்டிருந்தது. தினம் தினம் தேடுதல்கள். கைதுகள். பாலியல் வல்லுறவுகள். எல்லாவற்றையும் வெளியில் கொண்டு வரமுடியாதவாறு தணிக்கை என்ற பெயரில் ஊடகங்களின் வாய்களுக்குப் பெரிய பூட்டும் போடப் பட்டிருந்தது.

அரசுக்கு எதிரான செயலகளில் ஈடுபடுவர்கள் அடையாளம் காணப்பட்டால் அடுத்த நாளே அவர்கள் காணாமல் போனோராக மாறிவிடும் அளவுக்கு நிலைமையின் உக்கிரம் இருந்தது. எல்லோரும் தமது உயிர்வாழ்தலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நடக்கின்ற கொடுமைகளை மனதுக்குள் புதைத்துக் கொண்டு மௌனிகளாயினர்.

இவ்வாறான இறுக்கமான சூழலை உடைத்துக் கொண்டு, யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற அடக்குமுறையின் கோரங்களை சர்வதேசத்துக்கு வெளிப் படுத்தும் வகையில் பல்கலை மாணவர்கள் பொங்கு தமிழ் என்னும் நிகழ்வினை நடத்தினார்கள். படை

வதிவிடங்களில் (இராணுவ முகாம்களையே இவ்வாறு வதிவிடம் என மென்மையான மொழியில் அடையாளப்படுத்துகிறது அரசு) தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்கும் திட்டம். உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க இத்திட்டம் பற்றி வாயைத் திறந்ததுமே சகல திசைகளில் இருந்தும் எதிர்ப்புகள் பெருமெடுப்பில் கிளம்பின. ஆனால் எஸ்.பி ஒரு பனங்காட்டு நரி. எந்தவொரு சலசலப்புக்கும் அஞ்சவேயில்லை. தன்நிலையில் சற்றும் அசைந்து கொடுக்கவில்லை. தலைமைத்துவப்பயிற்சி நடந்தே தீரும் எனப் பிடிவாதத்தோடுநின்றார். சொன்னபடி அதை ஆரம்பித்தும் விட்டார்.

தம்மீது முட்டிமோதிக்கொண்டிருக்கும் பல்கலைக் கழக மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்க எஸ்.பியும் , அரசும் இவ்வளவு அக்கறை காட்டுவதேன்? கிட்டத்தட்ட 28 நாள்கள் வரை தொடர்ச்சியாக இடம்பெறவிருக்கும் இந்தப்பயிற்சி முகாம்களில் இயன்றவரைக்கும் மாணவர்களின் மனங்களைத் தம் பக்கம் திருப்புவதே அரசின் நோக்கமாக இருக்கப்போகிறது என ஜே.வி.பி

பட்டிருக்கக்கூடும். ஆனால் இராணுவ முகாம்களில் பல்கலை மாணவர்கள் தங்குவதால் பாலியல்சார் பிரச்சினைகள் மாணவர்களுக்கு ஏற்படக்கூடும் என்ற அச்சமும் பலரிடம் எழுந்துள்ளது.இராணுவ முகாம்களுக்கு அனுப்பப்படும் பல்கலைக்கழக மாணவர்கள் அங்குள்ள படையினரால் பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படலாம்.

நாடு முழுவதிலும் உள்ள இராணுவ முகாம்களில் இதுபோன்ற பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. அத்தகைய சம்பவங்கள் ஏதும் நடந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுன்றி அரசாங்கமுமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் சுஜீவ பண்டாரகூறியுள்ளார். மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் வண.திப்பொட்டு வாவே சிறி சுமங்கல தேரரும் இத்திட்டத்தை எதிர்த்துள்ளார். மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களுக்கு இத்திட்டம் ஊறுவிளைவிக்கும் என அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழ்மாணவர்களும் இந்தப் பயிற்சி நெறிக்காக

# நாணயக் கயிறுகளும்...!

யினரின் அனுமதி இந்நிகழ்வுக்கு மறுக்கப்பட்டிருந்த நிலையிலும், வெற்றிகரமாக நடந்தேறிய பொங்கு தமிழ் என்ற மாணவர்களின் மௌனப்புரட்சி அன்றைய ஆட்சியாளர்களின் முகத்திரையைக் கிழிப்பதில் பெரும் பங்காற்றியது. தொடர்ந்தும் இது போன்ற செயற்பாடுகளில் பல்கலை மாணவர்கள் ஈடுபட்டே வந்துள்ளனர்.

எனவே தென்னிலங்கையிலும் சரி, தமிழர் பகுதிகளிலும் சரி பல்கலைக்கழகங்கள் என்பவை அரசுக்கு எதிரான கூடாரங்களாகவே நோக்கப்பட்டன. எனவே அவற்றைத் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவராவிட்டால் எதிர்காலத்தில் அதிகாரத்தின் அடக்குமுறைக்கு எதிரான கலகங்கள் அங்கேதான் முளைக்கும் என்பது ஆட்சியாளர்களுக்கு நன்கு தெரியும். அதை உறுதிப்படுத்துவது போன்று அநேக சம்பவங்கள் பல்கலைக்கழகங்களில் அண்மைக்காலங்களில் நடந்தேறவும் ஆரம்பித்தன.

முதலில் தன்னுடைய அதிகாரத்தின் சவுக்கை மாணவர்கள் மீது அரசு சுழற்றியது. கிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சூழ பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது இத்தகைய அச்சுறுத்தல் நடவடிக்கையின் ஓர் அங்கம்தான். ஆனாலும் தமக்கு எதிரான அரசின் வெளிப்படையான அடக்குமுறை நடவடிக்கைகளால் மாணவர்கள் இன்னும் அதிகமாக அரசுக்கு எதிரான போக்கினைக் கொண்டவர்களாக மாறினார்களே தவிர, அரசின் வழிக்கு வருவதில் தொடர்ந்தும் முரண்டு பிடிப்பவர்களாகவே இருந்தனர்.

எனவேதான், புதிய உபாயத்தைத் தேடுவதற்கான நிலைக்கு அரசு தள்ளப்பட்டது. அந்த உபாயமே பல்கலைப் புகுமுக மாணவர்களுக்காக இராணுவ

கூக்குரலிட்டு அழுகின்றது. அது அழுவதற்கும் காரணமிருக்கிறது.ஜே.வி.பியினுடைய அடிப்படைக் கட்டமைப்பே பல்கலை மாணவர்களை நம்பித்தான் இருக்கிறது.

இப்போது தலைமைத்துவப்பயிற்சி என்ற போர்வையில் புகுமுக மாணவர்களை- ஜே.வி.பி. அமைப்பின் சித்தாந்தங்களை இதுவரை அறிந்திராதவர்களை- அரசு ஆசை வார்த்தைகள் காட்டி, தன் பக்கமாக வளைத்துப் போட்டால் இன்னும் நாலைந்து வருடங்களில் ஜே.வி.பி என்ற அமைப்பே இருந்த இடம் தெரியாமல் சிதைந்துவிடலாம். இதேவேளை ஐ.தேக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு,ஜே.வி.பி உள்ளிட்ட அரசுக்கு எதிரான கட்சிகள் அரசு மீது சுமத்துகின்ற குற்றாச்சாட்டுகளில் உண்மைகளும் இல்லாமலில்லை.

அரசு சொல்கின்ற எல்லாவற்றுக்கும் தலையாட்டுகின்ற பொம்மைகளாக மாணவர்களை மாற்றுதல் என்பதே இந்தத் தலைமைத்துவப்பயிற்சியின் பிரதான நோக்கமாக இருக்கிறது. எனினும் இந்தப் பயிற்சிக்கு இராணுவ முகாம்கள் ஏன் தெரிவு செய்யப்படவேண்டும்? தலைமைத்துவம் என்பது தனியே ஆயுதமுனைகளூடாகப் பிறப்பெடுக்கும் ஒன்று என அரசு எண்ணுகிறதா என்ற சந்தேகமும் இதனால் நிலவுகின்றது.

இராணுவ முகாம்களில் பல்கலைக்கழக மாணவர்களைத் தங்க வைப்பதன் மூலம் இராணுவத்தினருக்கும் மாணவர்களுக்கும் இடையிலான புரிதலை உண்டுபண்ணி, எதிர்காலத்தில் இவ்விரு தரப்புகளும் முரண்படாதிருக்கவே தலைமைத்துவப் பயிற்சிக்காக இராணுவ வதிவிடங்கள் தெரிவுசெய்யப்

இராணுவமுகாம்களுக்குச் சென்றிருக்கிறார்கள். இதுவரையும் தமிழ் மாணவர்களுக்கு அச்சத்தின் குறியீடாகவே இராணுவமுகாம்கள் இருந்துள்ளன. தமது உறவுகள் தடுத்து வைக்கப்பட்டு, சித்திர வதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டு, புதைக்கப் பட்ட இடங்களாகவே அவர்கள் இராணுவ முகாம் களை அறிந்துவைத்துள்ளார்கள். இப்போதும் அவர்களில் பலரது உறவுகள் இராணுவ முகாம் களில் அடைக்கப்பட்டுள்ளனர்.இத்தகைய நிலையில் அவர்களது சிந்தனையில் குருதி மணத்துக் கொண் டிருக்கும் இடத்தில் எப்படிப் பயிற்சியைப் பெற முடியும்? என்ற கேள்வியும் எழுகின்றது.

இவ்வாறெல்லாம் பயிற்சி கொடுத்து, மூளைச் சலவை செய்வதன் மூலம் வருங்காலத்தில் அரசுக்குச் சார்பானவர்களாக பல்கலை மாணவர்களை மாற்ற எடுக்கப்படும் முயற்சியும் எந்தளவு தூரத்துக்கு பயனளிக்கும் என்பதும் சந்தேகமே.

ஏனெனில் இப்போது அரசு சொல்கின்ற எல்லாவற்றுக்கும் தலையாட்டிவிட்டு வருகின்ற மாணவர்கள் பல்கலைச் சூழலுக்கு வந்ததும் பழைய இயல்புக்கே மாறி விடக்கூடும். ஆயினும் ஒரு குறித்த தொகையினராவது அரசுக்கு விசுவாசமானவர்களாக மாறுவது நிச்சயமான ஒன்று.

அரசுக்கு அது போதும். அவர்களைக் கோடரிக் காம்புகளாக வைத்துக்கொண்டே மாணவர்களின் புரட்சிகளை அது வெகு எளிதாக அடக்கிவிடும்.

எப்போதும் புரட்சிகள் கோடரிக்காம்புகளாலேயே வீழ்த்தப்படுகின்றன. அந்த வரலாறு மீளத் திரும்பலாம். ✱

# தமிழகத் தகிடுதத்தங்கள்




தி.மு.க தலைவரின் மகளும் ராஜ்யசபை எம்.பியுமான கனிமொழி ஸ்பெக்ட்ரம் ஊழலில் சிறைக்கு அனுப்பட்டமை தமிழக, இந்திய அரசியல் வட்டாரங்களில் மட்டுமன்றி முழு உலகிலுமே பரபரப்பாகப் பேசப்படும் விடயமாகிவிட்டது. கொடி கட்டிப் பறந்த கலைஞர் குடும்பம் சிதைந்து சின்னாபின்னமாகும் கதை இப்போது தான் எழுதப்படத் தொடங்கியுள்ளது. கலைஞர், கவிஞர் என்றாலே வறுமைத்தாண்டவம் தான் கண்முன்தோன்றும். இதை மாற்றி, கவிஞனும் கோடி பணக்காரன் ஆவான் என்பதற்கு கருணாநிதி இலக்கணமாக விளங்கினார். அந்தோ பரிதாபம்; கவிஞன் வறியவன் வறியவனே தான் என்பது கடைசியில் நிரூபணமாகி விட்டது. மற்றக் கவிஞர்களையும் விடக் கேவலமான நிலைக்கு இன்று கலைஞர் ஆளாகி உள்ளார். தன் கண்முன்னே தான் பெற்ற பிள்ளை துன்புறுவது என்பது மனிதன் எவனாலும் தாங்க முடியாத அவலமாகும். அதுவே கலைஞருக்கு நேர்ந்துள்ளது. அதுவும் 87 என்ற தள்ளாத வயதில் பொல்லாத வழக்குகள் அவர் குடும்பத்தை விழுங்கி விடும் நிலையில் உள்ளமை மிகவும் பரிதாபமானது.

பிறப்பு எண் 3 ஆக இருப்போர், நல்மனச்சாட்சி உள்ளவர்கள். நேர்மைக்குப் பெயர் பெற்றவர்கள். கலைஞர் கருணாநிதியோ தலைகீழாக நல்மனச்சாட்சி என்பதே என்னவென்று தெரியாத ஒருவராகவே காலம் பூராகவும் வாழ்ந்துள்ளார். 1969 இல் முதலமைச்சர் அண்ணா திடீரென இறந்ததும் இரண்டாவது இடத்தில் தி.மு.க.வில் இருந்தவர் கலைஞரல்ல; நாவலர் நெடுஞ்செழியனே தி.மு.க.வில் இரண்டாவது ஸ்தானம் வகித்தவர். நாவல்லமையில் அண்ணாவை விஞ்சும் வல்லவர் நாவலர். காமராசருக்குச் செய்த துரோகம், எம்.ஜி.ஆருக்கு செய்த அநீதி (அண்ணா இறந்ததும் கலைஞரை முதல்வராக நியமிக்கக் கோரியவர்களில் எம்.ஜீ.ஆரே முக்கியமானவர்) இந்திராகாந்திக்குச் செய்த பழி பாவம், பெண் என்றும் பாராமல் ஜெயலலிதாவின் துகிலை உரிந்த படுபாதகம், வைகோ என்ற நீதிமானை கொலைகாரனாகச் சித்தரித்த கொடுஞ்செயல், கடைசியாக அப்பாவி இலங்கைத் தமிழருக்குச் செய்த அநீதி இவையாவற்றையும் கூட்டிக் கழித்தால் கருணாநிதிக்கு கிடைத்த தண்டனை போதுமானதல்ல. இவ்வளவு துரோகமும் செய்த இவரால் எப்படி இத்தனை வயது வரை உயிர்வாழ முடிகிறது என்று வியந்தவர்கள் பலர். செய்த பாவங்களுக்குத் தண்டனை பெறவே அவரைத் தெய்வம் இவ்விதம் தள்ளாத வயது வரை உயிர் வாழ வைத்திருக்கிறது என்ற பதில் இன்று கிடைத்து விட்டது.

இலங்கையின் அதிபர் ஜே.ஆரும், இவர் போல ஒரு அரசியல் நரியே. அவரும் நெடுங்காலம் வாழ்ந்துதான் முன்பு செய்த தவறுகளை நினைத்து நினைத்து உருகி மனம் வருந்தி இறந்து போனார். யாழ். நூலக எதிர்ப்பு, 1983 ஜூலை என ஈவு இரக்கமற்று நடந்ததன் பலனை ஜே. ஆர்.அனுபவித்தார். அவர் உயிரோடு இருந்தவரை புலிகள் தோற்கடிக்கப்படுவதை அவரால் கண்குளிரக் காணமுடியவில்லை. ''அரசன் அன்று அறுப்பான்; தெய்வம் நின்று அறுக்கும்''.

இலங்கைத் தமிழர் விடயத்தில் கூட கலைஞர் குழப்பிய குட்டையில் மீன்பிடிப்பவராகவே இருந்து வந்துள்ளார். ஜெயலலிதாவுக்கு புலிகளுடன் ஒவ்வாமை இருந்தாலும் அப்பாவித் தமிழ் மக்கள் பற்றி அற்ப இரக்கமாவது உண்டு. பெண் என்பதால் வெளிப்படையாக துணிந்து பேசியும் விடுவார். "புலிகளைக் கொல்; அப்பாவித் தமிழரைக் காப்பாற்று'' எனத் தனது மனதுக்குப்பட்டதை வெளியிடுவதே அவர் சுபாவம். கலைஞரின் மனநிலையோ எவரும் அறியமுடியாத நாடகவடிவம் கொண்டது. உண்மையில் எம்.ஜீ.ஆர் அல்ல நடிகர்; கருணாநிதியே உண்மை நடிகராவார்.

**எஸ்.சுரேந்திரஜித்**

கலைஞர் மகள் சிறை சென்றது தி.மு.கவின் உயிரே போனதற்கு சமனாகும். அடுத்து, மனைவி ராஜாத்தி இந்த நிலைக்கு ஆளானால் கலைஞர் படப்போகும் துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. அண்ணா வளர்த்த கட்சியைத் தன் குடும்பச் சொத்தாக்கிய கலைஞர் அதில் காட்டிய சாதூரியத்தை ஏனைய விடயங்களில் காட்டவில்லை என்றே சொல்லலாம். தி.மு.கவின் பங்காளியாக உள்ள மன்மோகன் அரசின் கீழ் தான் சி.பி.ஐ உள்ளது. இருந்தும் சட்டம் தன் கடமையைச் செவ்வனே செய்தது. ராஜீவ் காந்தியின் போபர்ஸ் ஊழல், ஜெயலலிதாவின் ''பிளெசன்ட் ஸ்டே'' மற்றும் ''தான்சி'' ஊழல் என்பவை இற்றைக்கு 15 முதல் 20 வருடம் முந்தியவை.

இன்று தொழில்நுட்பம் முன்னேறி சட்டம், நீதி நடைமுறையில் வரும் சாத்தியமான நூற்றாண்டில், பழைய கற்காலத்தில் ஊழல் செய்தது போலவே செய்து முடிக்கலாமென சிந்திப்பது சுத்த அபத்தமான சிந்தனையே. அதற்குத் தி.மு.க.வும் கலைஞர் குடும்பமும் இன்று பலியாகினர். தமிழகம் அபிவிருத்தியில் எங்கோ சென்றிருக்க வேண்டியதைத் தடுத்தது தி.மு.கவின் வங்குரோத்து அரசியலே. 1967 இல் தி.மு.க முன்வைத்த ஹிந்தி எதிர்ப்பு என்றோ பிசுபிசுத்து விட்டது.

ஹிந்தி அரசுக்கு அடிமையாவது வேறு, ஹிந்தி மொழிக்கு அடிமையாவது வேறு. இதை உணராது தமிழக வளர்ச்சியைப் பல ஆண்டுகள் பின்தள்ளியது தி.மு.க.வே. இன்று கூட தேர்தலில் தோற்றதும் தி.மு.கவின் திருச்சி குறுநில மன்னர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு தன்னை திருச்சி மேற்கில் தோற்கடித்த அ.தி.மு. க வின் மரியம்பிச்சை மீது லொறியை மோதிக் கொன்றுவிட்டார் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஜெயலலிதா அரசின் ஒரே ஒரு முஸ்லிம் அமைச்சராக கடந்த வாரமே நியமிக்கப்பட்டிருந்த மரியம்பிச்சை இறந்ததால் அவரது தொகுதியில் இடைத்தேர்தல் வரவுள்ளது. அதில் தி.மு.க சார்பில் நேரு தான் போட்டியிடுவார். ஏற்கனவே பல கொலை செய்த அவர் இதையும் செய்திருக்கமாட்டார் என்பதற்கு என்ன நிச்சயம் என்கின்றனர் அ.தி.மு.வினர். இவ்வாறான அட்டூழியங்களை தட்டிக் கேட்காததால் தான் கலைஞர் இன்று இந்த அவலநிலைக்கு உள்ளாகி உள்ளார் என்பது உண்மையிலும் உண்மை. ★

SPOT ADMISSIONS

STUDY IN INDIA

DBA GROUP OF INSTITUTIONS BANGALORE



Date : 11th June 2011
Time : 10.00am-4.00pm
Venue : 4, IBC Road, Colombo 6.

Call for Appointment - 0777-761346

Post Graduate Programs
Master of Business Administration (MBA)
Post Graduate Program in Management (PGPM)
Master's Degree in Pharmacy (M.Pharm)
Master's Degree in Nursing (M.Sc. Nursing)
Master's Degree in Physiotherapy (M.PT)

Under Graduate Programs
Bachelor of Computer Applications (BCA)
Bachelor of Business Management (BBM)
Bachelor of Commerce (B.Com)
Bachelor of Arts (BA.Eco)
Bachelor's Degree in Pharmacy (B.Pharm)
Bachelor's Degree in Nursing (B.Sc. Nursing)
Bachelor's Degree in Physiotherapy (B.PT)
Bachelor of Arts-Hotel Management (BA.Hotel & Hospitality)

Management, IT, Nursing, Pharmacy, Physiotherapy, Hotel and Hospitality Service

FREE AIR TICKET
> Low Course Fee
> Separate Hostel for Boys and Girls
> Modern campus located in central Bangalore
> Placement & Internship Support
> Free Airport Pickup
> No Additional Expenses
> No need for IELTS & Sponsorship
> Free Accommodation for parents & students for 2 days in Bangalore

FLEX Graphic

Scholarship Available

" Various graduate programs from premier foreign Universities in US, UK, Germany and Holland are available."

flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)

Head Office :
4, IBC Road, Colombo 6.
Hotline: 0777-761346
Tel: 2364157, 2506614
E-mail: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk

India Office :
Jain Plaza # 8 1st Floor,
124/63, Pondy Bazaar, T. Nagar,
Chennai - 600 017, India.
Tel: +91 44 4217 8154
Mobile: +91 87 5471 2613

# இந்தியாவுக்கு எதிராக மீண்டும்....



இலங்கை மீது தேவையற்ற விதத்தில் அழுத்தம் கொடுப்பதாகத் தெரிவித்து இந்தியாவுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்போவதாக நாட்டின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி அறைகூவல் விடுத்துள்ளது.

இலங்கை தொடர்பான இந்தியாவின் அணுகுமுறை இலங்கையின் இறையாண்மையை மீறும் செயல் என அந்தக் கட்சி பகிரங்கமாக அறிவித்துள்ளது.

கடந்த 16 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் இந்தியா சென்றிருந்தார். அவர் அங்கு பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் எம்.எஸ்.கிருஷ்ணா, இலங்கை விவகாரங்களைக் கையாளும் மூவரணியினர் ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

வெட்டு ஒன்று துண்டு இரண்டென இந்தியா தனது நிலைப்பாட்டை பீரிஸிடம் தெரிவித்து விட்டது.

ஐ.நா நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக இந்தியாவின் ஆதரவைப் பெறும் நோக்கில் பீரிஸ் மேற்கொண்ட விஜயம், தோல்வியில் முடிந்து விட்டது.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த நியாயமான தீர்வு, மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை, அவசரகாலச் சட்டத்தை நீக்கல் போன்ற விடயங்களில் இலங்கையை பணயம் வைத்துள்ளது இந்தியா. இந்தியாவின் ஆதரவை, உதவியைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காக இந்தியா கூறிய விடயங்கள் எல்லாவற்றையும் 'ஆமாம் சாமி' போட்டு ஏற்றுவிட்டார் பீரிஸ்.

இந்தியா என்ன விரும்பியதோ அவற்றை எல்லாம் பீரிஸ் மூலம் சாதித்து விட்டது. பீரிஸ் முன்னெடுத்த ராஜதந்திர நகர்வு தோல்வியானாலும், இலங்கை தன்னைச் சுதாகரித்துக் கொண்டுள்ளது.

**யாழவன்**

பீரிஸ் விஜயத்தின் இறுதியில் இருநாடுகளும் இணைந்து விடுத்த கூட்டறிக்கையில்; இந்தியா தான் நினைத்ததைச் சாதித்து விட்டது. ராஜதந்திரமாக, இலங்கை மீதான போர்க்குற்றம் குறித்து எதையும் கூறாமல் மௌனம் காத்து வருகிறது இந்தியா.

இந்தியா சாதித்தவற்றுக்கு எதிராக இலங்கை அரசுத் தரப்பிடம் இருந்து எதிர்க் கருத்துக்கள் வெளிவராத நிலையில், பிரதான பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி துள்ளிக் குதிக்கிறது. அதனுடன் சேர்ந்து தேசப்பற்று தேசிய இயக்கமும் ஒத்து ஊதுகின்றது.

இலங்கை வரலாற்றில் காலம் காலமாக அரங்கேறும் காட்சிகள் தான் இப்போதும் அரங்கேறுகின்றன.

தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஒரு தரப்பு தீர்வு காண முயற்சி மேற்கொள்ள, மறுதரப்பு எதிர்த்து எழுவதுதானே கடந்தகால வரலாறு. நாடு மீது போர்க் குற்றம் விழுந்து சர்வதேச மட்டத்தில் செல்லாக்காசாக நாடு மதிக்கப்படும் நிலையில் கூட பேரினவாதிகள் தமது போக்கை மாற்ற மாட்டார்களா? என்ற கேள்வி எழுகின்றது.

இந்தியா இலங்கைக்குத் தெரிவித்துள்ள மூன்று விடயங்களும் தமிழ் மக்களுடன் சம்பந்தப்பட்டவை. இலங்கையில் அமைதிநிலை ஒன்று ஏற்பட வேண்டும் என்ற பேரவாவுடன் இந்தியா தெரிவித்துள்ள கருத்தை மறுதலித்து போராட்டம் நடத்தப்போவதாக பேரினவாதிகள் கூச்சல் போடுகின்றனர்.

இந்தியாவுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக அக்கட்சிகள் அறிவித்துள்ளன.

1971 ஆம் 1981 ஆம் ஆண்டுக் கிளர்ச்சிகளின் போது தம்மை அழிக்க இந்தியா துணை செய்தது என்ற குற்றச்சாட்டில் இந்தியப் பொருட்களை புறக்கணிக்கும் போராட்டத்தை முன்னெடுத்தது ஜே.வி.பி.தான்.

மீண்டும், தமிழர்களின் பிரச்சினைக்கு முடிவு எட்ட இந்தியா முனையும் போது, அந்த நாட்டுக்கு எதிராகப் போராடப் போவதாக இப்போது அறிவித்துள்ளது.

ஐ.நாவுக்கு எதிராகப் போராட்டம், இந்தியாவுக்கு எதிராகப் போராட்டம், சர்வதேசத்துக்கு எதிராகப் போராட்டம் என போராட்டங்களை முன்னெடுக்கும் பேரினவாதிகள், இப்போராட்டங்களுக்கெல்லாம் அடிப்படை என்ன என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

நாட்டைக் குழப்பிக் கொண்டிருக்கும் இந்தப் பேரினவாதிகள் ஆறஅமர இருந்து சிந்தித்து ஆளும் தரப்புகளுடன் ஒன்றிணைந்து நாட்டின் குழப்பத்துக்கு, அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயலவேண்டும்.

சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் குரல் கொடுத்துத்தான் அரசியல் நடத்த வேண்டும் என்ற தங்கள் கொள்கையைத் தூக்கி வீசிவிட்டு, சிறுபான்மை மக்களை அரவணைத்துச் செல்லும் மனப்பாங்கு எப்போது அவர்கள் மனதில் எழுகிறதோ. அப்போதுதான் நாடு அமைதியடையும். பேரினவாதிகளும் நாட்டை முன்னேற்ற உதவமுடியும்.★

ஐ.நா மனித உரிமைப்பேரவை மே மாதம் 30 ஆம் திகதி முதல் தனது வருடாந்த அமர்வை ஆரம்பிக்கின்றது.

இந்த அமர்வு ஆரம்பமாக முன்னரே இலங்கை தொடர்பான பல போர்க்குற்ற ஆதாரங்களை புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் அந்தப் பேரவைக்கு சமர்ப்பித்து விட்டன.

அந்த ஆதாரங்கள் குறித்து பேரவையில் கேள்வி எழுப்பப்படும் போது, அதற்கு இலங்கை பதில் அளிக்க வேண்டிய இக்கட்டுநிலை தோன்றுவது தவிர்க்க முடியாததாகும்.

இந்த நிலையை எதிர்கொள்வதற்காக உயர்மட்டக்குழு ஜெனிவா புறப்பட்டுள்ளது.

அரசின் மனித உரிமைகள் அமைச்சர் சமரசிங்க தலைமையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோர் கொண்ட குழு கூட்டத் தொடரில் பங்கேற்கிறது.

பேரவையின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை போர்க் குற்றம் தொடர்பான விவகாரம் இடம்பெறாத போதும், பேரவையில் இடம்பெறும் உறுப்பினர் ஒருவர் இந்த விவகாரத்தை எழுப்பினால் அது குறித்து விவாதிக்கமுடியும்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையால் கோரிக்கை விடுக்கப்பட்டாலும் இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் பற்றி விசாரணை நடத்தலாம் என்று செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்டின் நெசர்கி கூறியுள்ளார்.

ஐ.நா பாதுகாப்புப் பேரவை, ஐ.நா. மனித உரிமைப் பேரவை, ஐ.நா பொதுச்சபை ஆகிய கிளை அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டாலும் யுத்தக் குற்றச் செயல்கள் பற்றி விசாரணை நடத்தலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் பேரவைகளில் இடம்பெறும் நாடு ஒன்றின் ஊடாக புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் போர்க்குற்ற விவகாரத்தை மனித உரிமைகள் பேரவையில் எழுப்ப முயற்சிகள் எடுத்துள்ளன.

பேரவையில் கூட்டத் தொடர் நிகழ்ச்சி நிரலில், இலங்கை போர்க்குற்ற விவகாரம் இடம்பெறாத போதும் பேரவை உறுப்பினர் ஒருவர் இந்த விவகாரத்தை எழுப்பினால் அதை விவாதிக்க வேண்டிய பொறுப்பு பேரவைக்கு உண்டு என சுட்டிக் காட்டப்படுகின்றது.

இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் வாய்ப்பு இல்லையாயினும், இலங்கை விவகாரம் விவாதத்துக்கு வரும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

அத்தகைய நிலையில் எவ்வாறு செயற்பட வேண்டும், எவ்வகையில் பதில் அளித்து தப்பிப்பிழைக்க வேண்டும் என்பன குறித்து விரிவாக ஆராய்ந்து கொண்டே உயர் மட்டக்குழு ஜெனிவா சென்றுள்ளது.

இலங்கையின் செயற்பாடுகள் தொடர்பாகப் பல்வேறு ஆவணங்கள், அறிக்கைகள் ஆகியவற்றுடன் சென்றுள்ள இந்த உயர்மட்டக்குழு, பல்வேறு எதிர்புக்களுக்கும் முகம் கொடுக்கத்தான் போகிறது.

அமர்வுக்கு முன்னர் தனது நட்பு நாடுகளின் பிரதிநிதிகளுடனும் வேறு நாடுகளின் பிரதிநிதிகளுடனும் இலங்கைக்குழு பேச்சுக்களை நடத்தப்போகிறது.

தமது தரப்பு நியாயங்களை அந்த அந்த நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கி ஆதரவு தேடப்போகிறது இலங்கை உயர்மட்டக்குழு.

இதற்குப் புறம்பாக, ஐ.நாவின் உயர்மட்டத்தினரையும் சந்திக்க இந்தக் குழு முயற்சிகளை எடுக்கவிருக்கிறது.

இதற்கு மறுபுறம், இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க் குற்றம் உட்படப் பல்வேறு விடயங்கள் தொடர்பாகத் தயாரித்த அறிக்கைகள், ஆவணங்களைப் பேரவை அமர்வுக்கு வரும் உறுப்பு நாடுகளிடம் வழங்க புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் தயாராகி வருகின்றன.

ஏட்டிக்குப் போட்டியாக அரச உயர்மட்டக் குழுவினரும் புலம்பெயர் தமிழர் அமைப்பினரும் பேரவை உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தப் போகின்றனர்.

இத்தப் பேச்சுக்களில் விவாதிக்கப்படும் விவரங்களை பேரவையில் இடம் பெறும் நாடுகள் பகிரங்கப்படுத்தப் போகின்றன. நிச்சயம் இந்த விவாதத்துக்குப் பதில் கூற வேண்டிய பொறுப்பு இலங்கை மீது சுமத்தப்படும்.

இந்த நிலையை எவ்வாறு இலங்கை கையாளப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.★

# அரசு – புலம்பெயர் தமிழர் ஐ.நா.வில் மோதல்



# காதல் வாழ்க்கையை நாசமாக்கிவிடும்

நடிகையாக இருப்பது பற்றி பல சமயங்களில் யோசித்திருக்கிறேன். நடிகையாக இருப்பதால் ஒரு சாதாரணப் பெண்ணுக்குக் கிடைக்கக் கூடிய சுதந்திரம் கிடைப்பதில்லை. வீட்டிலும் சரி; வெளியிலும் சரி யாரும் என்னை ஒரு சாதாரணப் பெண்ணாகப் பார்ப்பதில்லை. நடிகையாகத்தான் பார்க்கிறார்கள். அதனாலேயே பொய்முகம் காட்டி பேசுகிறார்கள். நடிகையாவதற்கு முன்பெல்லாம் இப்படியில்லை. சமீபத்தில்தான் இந்த மாற்றங்கள் நிகழ்ந்திருக்கிறது. படப்பிடிப்பின்போது என்னைச் சுற்றி நிறைய பேர் இருந்தாலும் தனிமையில் இருக்கிற உணர்வுதான் எனக்கு வரும்.

அதேபோல் ஒரு பிரச்சினை என்றாலும் நான்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். தொடர்ந்து வெற்றிபெற்ற நடிகையாக இருப்பதற்காக நான்தான் போராடணும். சறுக்கி விழுந்தாலும் நான்தான் பார்த்துக்கணும். என்ன வாழ்க்கை இது? என்று கூட சில நேரம் தோன்றும்... என்று பக்குவப்பட்ட மனதோடு பேசுகிறார் பாவனா.

'சித்திரம் பேசுதடி' படத்தின் மூலம் பரவலான கவனத்தைப் பெற்றவருக்கு அடுத்தடுத்து அமைந்த படங்கள் ஏனோ எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்கவில்லை. ஆனாலும், மலையாளத்திலும், தெலுங்கிலும் அவருக்கான இடம் என்பது இன்னும் அப்படியேதான் இருக்கிறது. அரை செஞ்சுரி படங்களில் நடித்து, முடித்துள்ள பாவானாவிடம் ஒரு சிறப்பு நேர்காணல்.

**கே:-** அரை செஞ்சுரி படங்கள் முடித்ததற்கு வாழ்த்துகள் பாவனா. ஐம்பது படங்களில் நடித்ததிலிருந்து சினிமாவை எந்தளவுக்குப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள்?

ப:- பதினாறு வய்திலேயே சினிமாவுக்கு வந்துட்டேன். அறிவு, பழக்க வழக்கம் எல்லாமே மாறிப்போயிடுச்சு. நல்ல சினிமாவையும், நல்ல புத்தகங்களையும் தேடிப் படித்து வாங்கிப் பார்த்திருக்கிறேன், படித்திருக்கிறேன். சினிமாவில் நடிக்க வருவதற்கு முன்பு ஒரு ஆணும்-பெண்ணும் கட்டிப்பிடிச்சா ஐய்யோன்னு நினைப்பேன்.

சினிமாவுக்கு வந்த பிறகு நடிப்புக்காக கட்டிப் பிடிக்கும்போது அந்த எண்ணம் மாறிவிட்டது. சினிமாவில் கற்கவேண்டிய விடயம் நிறையவே இருக்கிறது. இப்போதெல்லாம் தனியாகவே படப்பிடிப்புக்குப் போக தைரியம் வந்துவிட்டது. நிறைய பொறுமையும், நிதானமும் சினிமாவின் மூலமாகப் பெற்றிருக்கிறேன்.

**கே:-**பெண்ணாகப் பிறந்தது பற்றி எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

ப:-எப்போதாவது என்ன? பலமுறை யோசித்திருக்கிறேன். ஒரு ஆணாகப் பிறந்திருக்கலாம் என்று சில சமயம் வருத்தப்பட்டிருக்கிறேன். என்னுடைய வீட்டில் என் அண்ணனுக்கு அதிகம் சுதந்திரம் இருக்கு. ஆனால் எனக்கு கிடையாது. அண்ணன் எங்கே எண்டாலும் போகலாம். ஸ்கூல் விட்டு லேட்டாகக் கூட வருவான். அவனை யாரும் கேள்வி கேட்கமாட்டார்கள். ஆனால், என்னை மட்டும் கேட்பார்கள்.

அதேபோல சினிமாத் துறையில் பார்த்தால் ஒரு ஆண் நிம்மதியாக இயக்குநராகவோ, ஒளிப்பதிவாளராகவோ, கதாநாயக னாகவோ வேலைபார்க்கலாம். நீண்ட நாளைக்கு கூட அவர்கள் சினிமாவில் நிலைத்து நிற்கலாம். ஆனால், கதாநாயகிகளின் வாழ்க்கை அப்படி இல்லை.

கல்யாணம் ஆனால் அவ்வளவுதான். அதன் பிறகு அம்மா, அக்காவா ஆக்கிவிடுவார்கள். மிகக் குறைந்த காலகட்டத்தில்தான் எங்களை நாங்கள் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியிருக்கு. அதேபோல எங்கேயாவது தனியாகப் போனாலும் பிரச்சினைதான். அதனால்தான் பையனாகப் பிறப்பது நல்ல என்று நினைக்கிறேன்.

**கே:-** பிரச்சினைகள் வரும்போது அதை எப்படி எதிர்கொள்வீர்கள்?

ப:-நமக்கு வாழ்க்கை நிறையப் பாடம் கற்றுக்கொடுத்திருக்கிறது. பிரச்சினைகள் யாருக்குத்தான் இல்லை? சினிமாவுக்கு மட்டும் நான் வராமல் இருந்திருந்தால் நான் என்னவாகி இருப்பேன் என்று தனியாக இருக்கும்போது நினைச்சுப் பார்ப்பேன். ஏதாவது ஒரு கடையில் விற்பனையாளராக இருந்திருப்பேன். பாடசாலை வாழ்க்கை மிகவும் சந்தோஷமாக இருந்தது. பரீட்சையின்போது மட்டும்தான் பயம் வரும். வாழ்க்கை என்று வந்தால் பிரச்சினைதான். அதை எதிர்கொண்டுதான் ஆகவேணும். வேறு வழியில்லை.

எனக்குப் பிரச்சினைகள் ஏற்படும்போது தன்னம்பிக்கையளிக்கும் புத்தகங்களைப் படிப்பேன். அதுதான் நல்ல தோழியாக இருந்து நமக்கு ஆலோசனைகள் சொல்லும். அப்போது மனசுக்கு ஆறுதலாக இருக்கும். அதேமாதிரி நல்ல பாடல்களைக் கேட்பேன்.

**கே:-**காதல் பற்றி என்ன நினைக்கிறீங்க?

ப:-சினிமாவில் காதலிப்பது போல் நடித்திருக்கிறேனே தவிர, காதலைப் பற்றி பெரிதாக எனக்கு எதுவும் தெரியாது. காதலுக்காக வாழ்க்கையை நாசமாக்கமாட்டேன். காதலுக்காக வாழ்க்கையை முடிக்கிறதை எதிர்க்கிறேன். கடைசி வரை போராடி வாழணும். அதுதான் வாழ்க்கை. இன்னொரு ஜென்மம் என்று எதிர்பார்ப்பதை விட இந்த ஜென்மத்திலேயே நாலு பேருக்கு உதவியா வாழ்ந்துவிட்டுப் போகணும். காதல் வாழ்க்கையை மேம்படுத்தவேண்டும். காலை வாரக் கூடாது.



**கே:-** வாழ்க்கைப் பற்றிய கனவு ஏதாவது உண்டா?


ப:-நிறையக் கனவுகள் இருக்கு. இப்போதிருக்கும் இடத்திலிருந்து இன்னும் உயரப் போக வேண்டும் என்று கனவு காண்பேன்.

**கே:-**தற்போது நடித்துக் கொண்டிருக்கும் படங்கள் பற்றி?

ப:-கன்னடத்தில் 'ஜாக்கி' என்ற படத்தில் நடித்திருக்கிறேன். இதையடுத்து அங்கே சுதீப் கூட ஒரு படத்தில் நடிக்க பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது. மலையாளத்தில் ப்ரியதர்ஷன் சார் இயக்கத்தில் 'அரபியும் ஒட்டகமும் பி.மாதவன் நாயரும்' என்ற படத்திலும், குஞ்சாக்கோ போபின் சார் நடிக்கும் 'டாக்டர் லவ்' படத்திலும் நடித்துக் கொண்டிருக்கிறேன் என சந்தோசத்தில் பதிலளித்தார் பாவான.

★

# சண்டையிடுவதில் சாதனை



ஒரு தம்பதி சராசரியாக ஒரு வருடத்துக்கு எத்தனை தடவைகள் தமக்குள் சண்டை பிடித்துக் கொள்கிறார்கள் என்று நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் அதிசயிக்கத்தக்க வகையில் வருடத்துக்கு சராசரியாக 2455 தடவைகள் அவர்கள் முரண்படுகின்றார்கள் என்பது தெரியவந்துள்ளது. இதற்குப் பிரதானமான காரணி ஒருவர் சொல்வதை மற்றவர் கேட்க மறுப்பதே என்பதும் தெரியவந்துள்ளது.

இப்படி கேட்க மறுப்பதால் மட்டும் வருடாந்தம் கிட்டத்தட்ட 112 தடவைகள் சண்டை ஏற்படுகின்றது. ஊதாரித் தனமாக செலவிடுவது, தேவைக்கு அதிகமாகப் பொருட்களைக் கொள்வனவு செய்வது, தேவையில்லாத பொருள்களைக் கொள்வனவு செய்வது, என்பனவும் வருடாந்தம் நூறு தடவைகளுக்கு மேல் சச்சரவை ஏற்படுத்துகின்றது.

இதுதவிர சோம்பேறித்தனம் தம்பதிகளிடையே வருடாந்தம் 105 சண்டைகளை உருவாக்குகின்றது. இவற்றுக்கெல்லாம் அப்பால் குறட்டைவிடும் பழக்கமும் தம்பதிகள் மத்தியில் வருடாந்தம் 102 சண்டைகளுக்குக் காரணமாகி விடுகின்றது.

இரவில் என்ன சாப்பிடலாம் என்பதற்காகத் தம்பதிகள் வருடாந்தம் 92 தடவைகள் சண்டையிட்டுக் கொள்கின்றனர்.

யாராவது ஒருவர் வீட்டுக்குள் சகதியை மிதித்துக் கொண்டு வந்துவிடுவதால் வருடாந்தம் 80 சண்டைகள் வருகின்றன.

வேகமாக வாகனங்களைச் செலுத்துதல், தொலைக்காட்சியில் எந்த நிகழ்ச்சியைப் பார்த்தல், வீட்டில் உள்ள ஒரு பொருளைக் கொண்டுபோய் மேல் மாடியில் வைத்தல் என்பனவற்றுக்காகக் குறைந்த பட்சம் வாரத்துக்கு ஒரு தடவை சண்டையிட்டுக் கொள்கின்றனர்.

உடல் உறவால் ஏற்படும் சண்டை குறைவாகத்தான் இருக்கின்றது. இருந்தாலும் இதற்காக வருடாந்தம் 88 தடவைகள் மோதிக் கொள்கின்றனர்.

பிள்ளைகளை ஒழுங்காக வளர்த்தல் தொடர்பாக வருடாந்தம் 88 தடவைகளும், இவர்களை செல்லம் கொடுத்து கெடுத்தல் தொடர்பாக வருடாந்தம் 79 தடவைகளும் தம்பதிகள் சண்டையிட்டுக் கொள்கின்றனர். ஐ லவ் யு என்ற வார்த்தையை போதியளவு சொல்லத் தவறுகின்றமைக்காகவும் குறைந்த பட்சம் 69 தடவைகள் சண்டையிடுகின்றனர்.

திருமணம் செய்து அல்லது செய்யாமல் தம்பதியாக வாழும் 3000 பேர் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலமே இந்தத் தகவல்கள் தெரியவந்துள்ளன. ★



டானியல் பூரண குணமாகியதையடுத்து ஜோர்ஜும் எமிலியும் கரோலுக்கும் டானியலுக்குமென ஏற்பாடு செய்த விருந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது அவர்கள் அறியாமல் வீட்டுக்குள் புகுந்து கொள்கின்றனர் சுழியன்ஸ். இருட்டில் எமிலியைத் தாக்கிய றொப், எதிர்பாராத விதமாகத் தடுக்கி விழுந்த போது கரோல் அசுரபலத்துடன் றொப்பைத் தாக்கி அவனது கண்களை தனது விரல்களால் தோண்டிக் காயப்படுத்துகிறாள்.

மு.சிவநேசன்
sivanesan@usa.com

கரோலை றொப்பிடமிருந்து பிடுங்கி எறிந்த மைக். துவண்டு விழுந்த றொப்பைக் காவிக் கொண்டு வெளியே ஓடினான். எந்தத் தடயத்தையும் அங்கு விட்டுவைக்க அவன் விரும்பவில்லை. அமெரிக் காவின் புறநகர்ப்பகுதி ஒன்று அது என்பதால் துப்பாக்கியை அவன் பயன்படுத்த முடியாது. வெடிச் சத்தம் கேட்டதும் பொலீஸாரும், குடியிருப்புத் தொழிலாளரும் மொய்த்து விடு வார்கள். உயிருடனோ உடலாகவோ றொப் கிடைத்து விட்டால், தான் தப்பவே இயலாது என்பது மட்டும் உண்மை.

எனவேதான் றொப்பைக் காவியபடி காரை நோக்கி ஓடினான். காரில் அவனைக் கிடத்தி விட்டுத் திரும்பி வருவதா? ஓடிப்போவதா?. . . . .

மூச்சு வாங்கியது. திரும்ப வருவதற்குள் பங்களா இருண்டு கிடந்ததை அவதானித்த தொழிலாளர்கள் பலரும் டோர்ச் லைட்டுகளுடன் அதை நோக்கி வந்தனர்.

ஜோர்ஜ் கொடுத்த பிரண்டிப் பார்ட்டியில் அவர் களின் ஆரவாரமோ அமோகம்.

திரும்பவரும் திட்டத்தைக் கைவிட்டான் மைக். நைஸாக காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான். கார் நகரத்தை விலகிய தனிப் பாதையூடே சென்றது.

வந்த கூட்டத்தை வாசலில் வைத்தே திருப்பி அனுப்பினாள் கரோல். விடயம் வெளிச்சத்துக்கு வருவதை அவள் விரும்பவில்லை.

'பியூசை'த் தேடி எடுத்துப் பொருத்தினாள். வீடு முழுவதும் பளீரென ஒளியில் மிதந்தது. எங் கும் தேடி எமிலியைக் காணாமல் தவித்தாள். ஸ்பிறேயரை எடுத்து ஆராய்ந்தவளுக்கு ஜோர்ஜ் சிறிது நேரத்தில் தெளிந்து விடுவான் என்ற நம்பிக்கை பிறந்தது.

வெளியே வந்தாள். வளவு முழுவதும் தேடினாள். எமிலியைக் கண்டுபிடித்து குண்டுக்கட்டாகத் தூக்கிவந்து வீட்டுக்குள் போட் டாள். முடிச்சுக்களை அவிழ்த்து விட்டாள். வாயில் போட்டிருந்த பிளாஸ்டரை உரித்து எடுத்தாள். எமிலியின் மூச்சுத் திணறல் சற்றுத் தணிந்தது. அவள் இன்னுமும் தெளியவில்லை.

நீண்ட தூரம் காரைச் செலுத்தி வந்தபின் பாதையை விட்டுவிலகி ஒதுக்கான இடத்தில் நிறுத்தினான் மைக். பின் சீற்றில் இருந்த றொப்பின் நிலைமையை ஆராய்ந்தான். நிலைமை திருப்திக ரமாக இருக்கவில்லை.

மனம் மிகவும் களைத்து இருந்தது. காரின் 'டாஷ்போர்ட்டை'த் திறந்து சிகரெட் பெட்டியைத் துளாவினான். கையில் ஏதோ தட்டுப்பட்டது. அவன் இரத்தம் உறைந்து போனது.

அதன் ஸ்பரிசத்திலும் மென்மையிலும் அவன் சக்தி முழுவதும் இறங் கிற்று. என்ன அது. உள்ளே தலையைக் குனிந்து ஆரா ய்ந்தான். கையில் எடுத் துப் பார்த்தான்.

அந்த வெள்ளை ரோஜா மலர் - காட்டு ரோஜா மலர் - எப்படி அங்கே வந்தது? யார் இதை வைத்தார்கள்?

விரக்தியும் வெறுப் பும் மேலிட அதைக் கசக்கி வெளியே வீசி னான். சிகரெட்டைப் பற்ற வைத்தான். தெம்பு பிறக்கவில்லை. மீண் டும் காரைக் கிளப்பி னான். உற்சாகம் இழந்த ஓட்டம். நீண்ட வழிப் பயணம்.

> தனக்கு மட்டுமென்றால் இருப்பெதல்லாம் போதும். இனி டானியலை, கரோலைத் தேடிப்போய் மாட்டிக் கொள்ளக் கூடாது. தான் காயப்பட்டால் துணைக்கு றொப்பில்லை. சிக்கல்கள் சங்கிலித் தொடராக வளர்கின்றனவே.

அவன்போகுமிடம் அந்தப் பண் ணைதான். வேறு இடம் அவனுக்குக் கிடையாது. பலரிடமும் இரகசியங்கள் பகிர்பவனல்ல அவன். அப்படியென்றால் எப்போதோ பிடிபட்டு இருப்பான். ஆனால் போகுமிடம் கரோலுக்குத் தெரியுமே? அவள் சிறையிருந்த இடமாச்சே?

என்றாலும் துணிந்து வரமாட்டாள் என்ற எண் ணம் மேலிட்டது. அவளும் ஒளித்துத்திரிய வேண் டிய நிலைமை வாய்ப்பைத் தந்தது. அவளையும்தான் பொலீஸ் தேடு கிறதே?.

பண்ணைக்கு வந்து சேர்ந்தான் மைக். றொப்பைச் சுமந்து கொண்டு படிகளில் ஏறினான். அவனைக் கட்டிலில் போட்டு ஆராய்ந்தான். பண்ணைக்காரி ஒத்தாசை புரிந்தாள்.

நடந்த விவரம் கேட்டாள். மைக் வாயைத் திறக் கவில்லை. பார்வையால் அவள் வாயை மூடினான். றொப் தேறுவான் என்ற நம்பிக்கை பிறக்கவில்லை. அவனை ஏதோ பார்த்துக் கொள்ளும்படி கூறி விட்டுக் கிளம்பினான்.

அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது தெளி வாக மூளையில் உறைக்க மறுத்தது. எல்லாவற் றையும் கொஞ்சம் ஆறப்போட்டுத் தெளிய வேண் டும்.

றொப் இறந்தால் அப்பிரிவைத் தாங்க முடியுமா? தனித்து வாழ முடியுமா? அவன் சொத்துக்களை என்ன செய்வது?

தானே ஆளலாம். ஆம். இரட்டிப்பாக எல்லாம் தன்கையில் விழுந்ததை உணர்ந்தான். வைரங்கள், உழைத்த டொலர்கள் எல்லாம் காசாகக் கைகளில். ஏதும் பாங்கில், எழுத்தில் என்றெல்லாம் இல்லை.

தனக்கு மட்டுமென்றால் இருப்பதெல்லாம் போதும். இனி டானியலை, கரோலைத் தேடிப் போய் மாட்டிக்கொள்ளக் கூடாது. தான் காயப்பட் டால் கூட துணைக்கு றொப்பில்லை. வரலாறு காணாத தோல்விகள் அடுத்து அடுத்து வருகின்றன. சிக்கல்கள் சங்கிலித் தொடராக வளர்கின்றன.

ஏதோ கடைசியில் ஞானம் பிறந்த மாதிரித்தான். மனது கொஞ்சம் இலேசாக இருந்தது. றொப்பின் நிலைமையை உறுதி செய்த பின் கணக்குப் பார்க் கலாம். இனித் தற்காப்பு உத்திகள் போதும் என நினைத்தான்.

தெளிந்து எழுந்த ஜோர்ஜ், எமிலி இருவருக்கும் நடந்ததை விளக்கினாள் கரோல். அதிர்ச்சியில் இருந்து மீண்ட டானியல் கரோலைப் பாராட்டினான். அவளின் அபார சக்திக்குக் காரணம் அவளின் மனவியாதி என்பது அவர்களுக்கும் புரிந்திருக்கும்.

இனிச் சுழியன்ஸ் இந்தப் பக்கம் வரமாட்டார்கள். நிறையவே சூடு கண்டு விட்டார்கள். கரோல் இல்லாதிருந்தால் டானியலும் டேவிட்டுடன் செத்தி ருப்பான். சுழியன்ஸின் வெற்றிப் பயணம் தொடர்ந் திருக்கும்.

என்றாலும் கரோலின் மனது நிம்மதி காண வில்லை. றொப் இனி அடங்கி இருந்தாலும் மைக் தன்னைத் தேடி வந்தே தீருவான். டானியலைப் பழிவாங்காமல் ஓயமாட் டான். அவனால் தனித்துவம் சாதிக்க இயலும் என்றெல்லாம் அவள் நம்பி னாள்.

இந்த ஏக்கத்துக்குத் தீர்வு? அவள் வெளிப்பட வேண்டும். இனியும் ஒளித்து வாழ முடியாது. வெளிப்பட் டால் மிகவும் நிதான மாக வாழ வேண்டும். மீண்டும் மனநிலை பாதிப்பு என்றால் சொத் துக்களை உரிமை கோர முடியாது. மீண்டும் அவை டிரஸ்ட்டிடம் போய்வி டும்.


யார்யாரோ ஆளுவார்கள். தன்னைச் சமாளிக்கும் மன வலி மையைத், தான் பெற்றாக வேண் டும். வெளிப்பட வேண்டும். டானியலும் தானும் பகிரங்கமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும். மைக்கைக் கண்டு பிடித்து கூண்டில் ஏற்ற வேண்டும். றொப்பிற்குத் தண்டனை போதும்.

ஜோர்ஜ் அவளின் டிரஸ்ட்டிடமும் சட்டத்தரணி களிடமும் ஆலோசனை நடத்தினார். இனி அவள் அடுத்த தவறு இழைக்கும் வரை சொத்துக்களுக்கு உரிமை கோரலாம். அன்றிலிருந்து ஆறு மாதங்கள் சாதாரணமாக நடந்தால் சரி என்றனர் அவர்கள்.

கரோல் அவற்றுக்கு உடன் பட்டாள். எனினும் அவளை வெளிக்கொணர ஜோர்ஜ் தயங் கினார். சுழியன்ஸ் என்ற ஏக்கம் ஒரு புறம். பல மில் லியன்களுக்கு அதிபதியான ஓர் அபலைக்கு சிக் கல்கள் தானாகத் தேடி வரும் என்ற கவலை மறுபுறம்.

ஜோர்ஜ் ஒரு நம்பிக்கையான சட்டத்த ரணியுடன் கரோலின் சொத்துக்களை பராமரிக்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிறுவனத்திடம் வந்தான்.

(இனியும் முள் குத்தும்..)



# வெள்ளை ரோஜா முள்

விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர் - 15



# சொல்லுறதைச் சொல்லிப்போட்டன்

**மடத்தடி மாரிமுத்தர்**

இந்தக் குடிப்பழக்கத்தை அடியோட விட்டுப் போட்டன் எண்டு சொன்ன சாமித்துரை நேத்து மரணவெறியில குளத்தடியில விழுந்து கிடந்தானாம் பாருங்கோ. உடுப்பும் கழண்டு போய்! என்ன கேவலம். ''குடிக்கிற தெண்டாலும் அளவாக் குடிக்கோணும்'' எண்டு அவனுக்குப் புத்தி சொன்ன என்னைச் சொல்லுங்கோ. குடிச்சுப் பழகினவனை உடன விடச் சொல்லப்படாதெண்டு நினைச்சுத்தான் நான் அப்பிடிச் சொன்னனான். ஆனா; அவன் குடிக்கத் தொடங்கினா இம்மை வறுமையில்லாமலெல்லோ குடிக்கிறான். குடி கூடாது! குடி குடியைக் கெடுக்கும்! எண்டெல்லாம் படிச்சுப் படிச்சுச் சொல்லியும் என்ன பிரயோசனம்.

இந்தக் காலத்தில; இந்தப் படிக்கிற பிள்ளையளுமெல்லே குடிச்சுப் போட்டு ஆடுதுகள். இதைக் கட்டுப்படுத்த இந்த வாத்திமாராலையும் முடியயில்லை. எந்தப் பெற்றோராலையும் முடியயில்லை, என்றதை எண்ணிப் பாக்கயிக்கை வெக்கமாக் கிடக்கு.

இந்தக் குடி இருக்குப் பாருங்கோ அது தற்கொலை செய்யிறதுக்குச் சமனான வேலை. குடிச்சுப் பழகினாப் பிறகென்ன அது புலியைப் பிடிச்சமாதிரித் தான். விடவும் ஏலாது. தொடந்து பிடிச்சுக் கொண்டும் இருக்கயேலாது.

சிலபேர். குடிச்சுப்போட்டுத்தான் வேலை செய்யலாம் எண்டு சொல்லுறாங்கள். இந்த வாகன மோட்டுறவங்களுமெல்லோ குடிச்சுப்போட்டுச் சவாரி ஓடி வாறபோற சனத்தை மோதுறதும், மரத்தோடையும் வேலியோடையும் மோதித்தங்களோடு கூட வாறவையையும் கொண்டு தொலைக்கிறாங்கள். தயவு செய்து குடிச்சுப் போட்டு எந்த வாகனமும் ஓடாதயுங்கோ நீங்க சாகிற தெண்டாப் போல மற்ற ஆக்களையும் சேத்துக் கொண்டே போறது. ஒரு கொஞ்ச நேர மயக்கத்துக்காக உங்கட மானம் மரியாதையை இழக்கிறதோட உயிரையும் இழக்கிறதே! குடியாதையுங்கோ எண்டு அதுக்காகத் தான் சொல்லுறன்.



இந்தக் குடியால எத்தின குடும்பம் நடுறோட்டில நிக்கிதுகள். அப்பு ஆத்தையின்ர செய்கையளால எத்தின பிள்ளையள் படிப்பை விட்டுப்போட்டு வீட்டோட கிடக்குதுகள்.

இதுகளப் பாத்தும் பாத்தும் இந்தப் படிக்கிற பொடிபெட்டையளும் இப்ப குடிச்சுப் போட்டுக் கூத்தாடுதுகள். அதுகளுக்குப் புத்தி சொல்ல வேண்டியதுகளே குடிச்சுப் போட்டு நிண்டாப் பிறகென்னத்தப் பண்ணுறது

இந்தக் குடியாலதான் பாருங்கோ ஈரல் கருகுது. கான்சர் வருகுது. சாவும் விரைவா வருகுது எண்டு நான் சொல்ல வேணுமே ஊருலகத்தில நடக்கிற செய்திகளைக் கேக்கிறியள்தானே.

என்னதான் சொன்னாலும் இந்தச் சாராயம், கசிப்பு எல்லாத்தையும் தடை பண்ணினாத்தான் இந்தக் குடியை நிறத்தலாமெண்டும் சிலர் நினைக்கினம் பாருங்கோ அது அப்பிடியில்லை ஒவ்வொருத்தனும் தானா யோசிச்சு குடிக்காம இருக்கவேணும். மனத்தளவில குடிய மறந்தவன்தான் காணும் குடிக்காமல் விடுவான்.

குடியால ஏற்படுற கேடுகள் தெரியாம இங்க யாரும் இருப்பாங்களெண்டு நான் நினைக்கயில்லை வளரும் பிள்ளையளுக்கு அதைப் பழக்காம இருக்க வழி இருக்கா எண்டு ஒருக்காப் பாருங்கோ. என்ன கேவலம் படிச்சவன் அறிஞ்சவன் நாலு பேருக்குப் புத்தி சொல்லுறவன் குடிச்சுப் போட்டு நியாயம் பேசுறதைப் பாக்கயிக்க வேதனையாக் கிடக்கு.

என்னாலையும் குடியாதையெண்டு சொல்லத்தான் தெரியும் ஆனா இந்தப் பிள்ளைகளுக்குப் புத்தி சொல்லுற பெரியவங்க புத்தியச் சொல்லுறதுக்காக மட்டுந்தான் படிச்சமாதிரி இருக்காமப் படிச்சபடி நடந்துகாட்டினா நல்லதெல்லோ? அதுதானே பாருங்கோ வழிகாட்டல் எண்டு சொல்லுறது.

இந்தப் பெரிய பெரிய பள்ளிக்கூடங்களிலை எல்லாம் பிள்ளைகள் குடிச்சுப் போட்டு ஆடுறதும் பாடுறதும் மட்டுமே நடக்குது அடிபிடியுமல்லோ நடக்குது. எல்லாத்துக்குள்ளேயும் இந்த அரசியல் பூந்திட்டுதெண்டால் எதையும் நியாயமாச் சொல்ல ஏலாம லும் செய்ய ஏலாமலுமெல்லோ கிடக்குது.

இந்தக் குடியையும் குடிகாரரையும் பற்றிச் சொல்ல வெளிக்கிட்டாச் சொல்லிகொண்டே போகலாம் பாருங்கோ! அதையெல்லாம சொல்லி அழுகிறதால என்ன பிரயோசனம். நான் ஒரு கதை சொன்னா; குடியைப்பற்றி நீங்க ஆயிரம் கதை சொல்லுவியள்.

உங்களுக்கும் அதைப் பற்றி எல்லாம் தெரியும் ஆனாக் குடியை நிறுத்த என்ன செய்யலாம் எண்டு ஒருக்கா யோசியுங்கோ? அதோடை இந்தச் சின்னஞ் சிறிசுகளக் குடிக்க வேணாம் எண்டு சொல்லுறதுக்கு முதலில நீங்க குடிக்கிறதை நிப்பாட்டுங்கோ! முன்மாதிரியா நடந்து கொள்ளுங்கோ இத்தனைக்கும் நான் குடிச்சிறதை நிறுத்திப் போட்டுத்தான் இவ்வளவையும் இப்ப சொன்னனான் கண்டியளே. ★

## ஆரோக்கியமா வாழ சொக்கிலேட்

சொக்லேட் குழந்தைகளை மட்டுமல்லாது பெரியவர்களைக் கூட மயக்கி வைத்துள்ளது என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் சொக்லேட் சாப்பிட்டால் உடல் எடை கூடிவிடும் என்று பலரும் குறிப்பாக பெண்கள் ஆசைப்பட்டாலும் சொக்லேட் சாப்பிடுவதை மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்வர். ஆனால் அதற்கு அவசியமே இல்லை. சொக்லேட் சாப்பிட்டால் இருதயத்துக்கு நல்லதாம். அதனால் உடல் எடையும் அதிகரிக்காதாம். இதை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர்.விக்டோரியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வைத்தியர் லில்லி ஸ்டோஜன்ஸ்கோவா மற்றும் வைத்தியர் ஜான் அஸ்தோன் ஆகியோர் எழுதிய ஆய்வுக் கட்டுரையில் சொக்லேட் உணவு எந்த அளவுக்கு உடலுக்கு நன்மை விளைவிக்கிறது என்று கூறியுள்ளனர்.



மிகவும் தரமான "டார்க் பிரவுன்" சொக்லேட்டில் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும் மூலக்கூறுகள் உள்ளன. இவை அதிகப்படியாக சேரும் கொழுப்புகளை விரைந்து கரைத்து விடு கின்றன. அத்துடன் விரைவாக பசியெடுப்பதையும் சற்று தள்ளிப்போடுகிறது.

கருஞ்சிவப்பு திராட்சை ரசத்தில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியைக் காட்டிலும் இரு மடங்கு சக்தி சொக்லேட்டில் உள்ளன. பிரதான மூலக்கூறான சொக்லேட்டில் உள்ள கொக்கோவில் உள்ள அல்கலாயிட் எனப்படும் ஒபுரோமின் தசைகளை ஊக்குவித்து உடலுக்கு சக்தியை அளிக்கிறது. ரத்த நாளங்களை விரிவடையச் செய்து ரத்த அழுத்தம் ஏற்படுவதைக் குறைக்கிறது. அத்துடன் உட லில் சேரும் கொழுப்பு அளவைக் குறைக்கிறது. இதன் மூலம் மாரடைப்பு அது சார்ந்த பக்கவாதம் ஏற்படுவதும் குறைகிறது.மேலும் கொக்கோவில் உள்ள இயற்கை மூலப்பொருள் மூளையை சுறுசுறுப் பாக்க உதவுகிறது. இதனால் மனஅழுத்தம் ஏற்படுவது குறைகிறது. சொக்லேட் சாப்பிடுவது நல்லது என்பதற்காக குடும்பத்தினர் சாப்பிடும் அளவுக்கு பேமிலி சொக்லேட்டை வாங்கி சாப்பிடக்கூடாது. சொக்லேட்டுகளிலும் 75 சதவீதம் முதல் 85 சதவீதம் வரை கொக்கோ கலந்திருக்கும். ★

## பெண்ணுக்குள் இருக்கும் அதிசயம்

அழகில் சிறந்தவர்கள், ஆண்களா? பெண்களா?, தாம்பத்திய ஆசை யாருக்கு அதிகம்?, பெண்கள் எந்த விஷயத்தில் சிறப்பாக செயல்படுவார்கள்?, ஆண்கள் எந்த விஷயத்தில் கோட்டை விடுகிறார்கள்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை தெரிந்து கொள்ள ஆர்வமா?

உளவியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்த சில அடிப்படை உண்மைகள் இங்கே...

★பெண்கள் பலதிறன் கொண்டவர்கள். அவர்களால் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைப் பார்க்க முடியும். போனில் பேசிக் கொண்டே அலுவலக வேலையையும் கவனம் சிதறாமல் செய்துவிடக் கூடியவர்கள் பெண்கள். அதற் கேற்ப அவர்களின் மூளையும் வடிவமைந்துள்ளது. ஆனால் ஆண்களால் இப்படி ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்ய முடியாது.

★ஆண்கள் பொய் பேசினால் பெண்கள் உடனே கண்டுபிடித்து விடுவார்கள். ஆண்களின் முகபாவனை, அங்க அசைவுகள், வார்த்தைஉச்சரிப்பு இவற்றை வைத்தே அதை கண்டுபிடிக்கிறார்கள். ஆண்களால் இப்படி கண்டுபிடிக்க முடிவதில்லை. அதனால்தான் அவள் என்னை ஏமாற்றி விட்டாள் என்று தாடி வைத்துக் கொண்டு புலம்பித்திரிகிறார்கள்.

★குழப்பமான நேரங்களில் ஆண்கள் தனியாக உட்கார்ந்து வானத்தை பார்த்து யோசித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் பெண்கள் பிரச்சினைகளை மனதில் போட்டு குழப்பிக் கொள்ளாமல் அன்புக்குரியவர்களிடம் சொல்லிவிட்டு மறந்து விடுவார்கள்.

★ஆண்களுடைய சிந்தனை, செயற்பாடு எல்லாம் மதிப்பு, வெற்றி, தீர்வு பற்றியே இருக்கும். சுயநலவாதிகள். ஆனால் பெண்களுடைய சிந்தனைகள் எல்லாம் குடும்பம், நண்பர்கள், உறவு பற்றியே இருக்கும்.


★உறவுகளுக்குள் ஒரு பிரச்சினை என்றால் பெண்களால் அவர்களுடைய வேலையில் கவனத்தை செலுத்த முடியாது. ஆண்கள் அப்படியில்லை.

★ஒரு ஆண் சந்தோஷமாக இருக்க நல்ல வேலை வேண்டும். கூடுதலாக சந்தோஷமாக நினைக்க மது, மாது ஏதாவது ஒன்று வேண்டும். ஆனால் பெண்களுக்கு நல்ல கணவர், நல்ல உறவு, நல்ல உறவினர்கள், நல்ல பொழுதுபோக்கு, நல்ல சந்தோஷம்... இப்படி எல்லாமே நல்லதாக இருந்தால் மட்டுமே அவர்கள் திருப்தி அடைவார்கள்.

★ பெண்கள் எதையும் சுற்றி வளைத்துதான் பேசுவார்கள். ஆசைகளையும் ஒளிவுமறைவாக வெளிப்படுத்துவார்கள். ஆண்கள் 'ஓப்பின் ரைப்'. நல்லதோ கெட்டதோ விஷயத்தை நேராக போட்டு உடைத் துவிடுவார்கள். ஆசையையும் கொட்டித் தீர்த்து விடுவார்கள்.

★பெண்கள் எதையும் யோசிக்காமல் பேசிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் ஆண்கள் எதையும் யோசிக்காமல் செய்வார்கள். சில ஆண்களும், பெண்களும் இதில் உள்ள எல்லா விஷயங்களுக்கும் விதிவிலக்கானவர்களாகவும் இருப்பார்கள். ★





# கவிதைப்புனல்


## உக்கிப்போன தெருவும் எலும்புகளும்

-துவாரகன்

உக்கிப்போன தெருவில்
எலும்பொன்றைக் கண்டெடுத்தேன்
சுவட்டெச்ச ஆராய்ச்சிக்கு
மூளை தயாரானபோது
காற்றுக் கைகளிலிருந்து
அது நொறுங்கி விழுந்தது

செத்துக் கோதா[illegible]போன
மிருகத்துள் புகு[illegible]
குடைந்து வெளியேறும் பன்றியைப்போல்
தெருவையும் எலும்பையும்
குடைந்துகொண்டிருக்கிறது பதார்த்தம்.

கொஞ்சம் கொஞ்சமாய்க் கொல்லும்
தீராப்பிணிபோல்...
உக்கிப்போகின்றன
தெருக்களும் எலும்புகளும்.



## தவிப்பு

நிச்சயம் மழை வரும்
களிப்பில் ஆடும் மயில்
நனைந்தபின் தவிப்பில்!

- கோ.இளங்கோ.

## சாவுகளால் நிறையும் வெளி

மரங்களில் பூத்திருக்கின்றன
பிணப் பூக்கள்.
வெளிவந்த அறிக்கைகளின் பின்னால்
தேகத்தை
பெற்றோலுக்கிரையாக்கியவனின் கதறல்
ஒலிக்கிறது.

நீள்வானத்தின் பெருநட்சத்திரங்கள்
உடைந்து சிதறியபின்
தியாகங்களைக் கூவி விற்பவர்கள்
தெருக்களில் சாவகாசமாய்
அலைகிறார்கள்.

சித்தம் சிதறிய தாயே சொல்
உன் வானம் பற்றிய கனவில்
இன்னும் நீலம் உலராமல் இருக்கின்றதா?

சாவுகளின் சாகசத் தனங்களை
அவற்றின் நித்தியத்தை
அறைந்தவர்களின் குரல்களின் பின்னால்
மேலெழுந்த
புழுதியில்
எப்போதாவது கண்டிருக்கிறாயா?
உன் பாலகனின் பிஞ்சு முகத்தை.


இன்றோ
இன்னொரு பாலகன்
தன்னுடலைத் தீயுண்ணக் கொடுத்துத்
தியாகியாகிவிட்டான்

கல்லறைகளைக் கிளறி
அவற்றின்மேலாய்
கட்டடங்கள் வளர்ந்துவிட்டன.

காற்றைக் கைகளால் அளையும்
குழந்தைகள்
இன்று அதன் மௌனத்தைக் கண்டு
கதறுகிறார்கள்.

இன்னும் இன்னுமாக
தியாகங்களால் சாவின் வெற்றிடத்தை
நிரப்பக்
காத்திருக்கிறார்கள்
பாலகர்கள்.

- சித்தாந்தன்.



## உனக்கே பெருமை

வீசுகின்ற தென்றல் வாழ்த்தும்
வாசமுள்ள மலர்கள் போற்றும்
எழில் கொஞ்சும் இயற்கைத் தாயின்
பொழில் காவும் பொலிவைக் காண்போம்

விண்வெளியில் மிதந்ததுண்டா?
விண்மீன் போல் மலர்ந்துதுண்டா?
கடலின் ஓசையை இரசித்ததுண்டா
கல்லில் குடியேறிய புல்லினைப் பார்த்தாயா?
கற்களில் புற்களின் குடித்தனம் பார்த்தாயா?
அழகினைத் தேடி அலைந்து மாயாதே
எங்கும் அழகே இயற்கையின் வடிவம்

வயல்வெளிகளிலே நடந்ததன் பசுமை
வண்ணப் பறவையாய்ப் பறந்தெழும் புதுமை
மலையருவி நீர் மண்தொடும் ஓசை
மழைத்துளி குமிழிடும் மனந்தொடும் காட்சி
தட்டும் இன்பம் பார்த்தாயா?
உள்ளத் தூய்மை ஒளிதரும் மாட்சி
உன்னால் இயற்கையை இரசித்திட முடியும்!

புல்வெளி மீதில் அமர்ந்திருந்தாயா?
புதுப்பூவின் வாசம் நுகர்ந்திருந்தாயா?
கவிக்குயில் கூவும் ஓசை கேட்டாயா?
கலாப மயிற்றோகை நாட்டியம் பார்த்தாயா?
செயற்கையின் அழகில் மயங்கிடும் மனிதா
இயற்கையை இரசிப்பது உனக்கே பெருமை!

- ஜீவிதா சிவஞானம்,
*43/1 புகையிரத நிலையம் வீதி,*
மட்டக்களப்பு.

## வர மறுக்கும் இதயம்

நீ செல்லும் இடமெல்லாம்
என்னை உன்னிடம்
இழுத்துக் கொண்டுபோகும்
எனது இதயத்தால்
நான் செல்லும் இடமெல்லாம்
உன்னை என்னிடம்
இழுத்துக் கொண்டு
வரமுடியாமல் இருக்கிறதே!


- துன்னாலை செல்வம்.

## தேடி அலைதல்

நாடக மேடையிலே நான்
நடித்திருந்த வேளை
நயனங்களாகியவள் நீ

வாழ்வுப் போரிலே நான்
வெற்றி பெற்றிருந்த வேளை
வாழ்த்திக் களிப் புற்றவள் நீ

வேதனையிலே நான்
வாழ்ந்திருந்த வேளை
விரதமிருந்தவள் நீ



ஒரு காலிழந்தே நான்
ஊனமுற்றிருந்த வேளை
ஊன்று கோலாகியவள் நீ

இவ்வாறாக- என்
இன்பத்திலும் துன்பத்திலும்
பங்கெடுத்துக் கொண்டவளே
நீ எங்கே... ?
நான் இங்கே...?


- வே.முல்லைத்தீபன்,
ஒட்டுசுட்டான்.



## நிர்வாண ஐஸ்

ஐஸ்வர்யாராய் புதிய படமொன்றில் நிர்வாணமாக நடிக்க உள்ளார். ஹீரோயின் என்ற பெயரில் பிரபல இயக்குநர் மதுர் பந்தர்கர் இயக்கும் படத்தில்தான் அவ்வாறு நடிக்கிறார்.

முன்னதாக இந்தப் படத்திற்கு இயக்குநர் மதுர் பந்தர்கர் கரீனா கபூரைத்தான் ஒப்பந்தம் செய்ய இருந்தார். ஆனால் நிர்வாண காட்சியா.. அய்யய்யோ என்னால முடியாது.. என கரீனா கபூர் ஓட்டம் பிடித்ததால், ஐஸ்வர்யா ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளாராம். முதலில் நிர்வாண காட்சியில் நடிக்கத் தயங்கிய ஐஸ், பின்னர் படத்தின் கதையை முழுமையாக கேட்ட பிறகு, கணவரின் சம்மதத்துடன் நடிக்கச் சம்மதித்துள்ளார். ★



## மீரா முழுக்கு

தொடர் படங்களின் தோல்வி மற்றும் விரைவில் திருமணம் செய்ய இருப்பதால் நடிகை மீரா ஜாஸ்மின், நடிப்பற்கு முழுக்கு போடப் போவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழில் கிட்டத்தட்ட முன்னணி நடிகர்கள் விஜய், அஜீத், மாதவன், விஷால் உள்ளிட்டவர்களுடன் ஜோடி போட்டு நடித்த விட்ட மீரா ஜாஸ்மினுக்கு, சமீபத்திய படங்கள் அனைத்தும் தோல்விகண்டது. மலையாளப் படங்களும் அவருக்குத் தோல்விப் படங்களாக அமைந்தன. இப்படி படங்கள் அனைத்தும் தொடர் தோல்வி அடைவதால் நடிப்பற்கு முழுக்கு போடலாம் என்ற முடிவில் இருக்கிறாராம் மீரா ஜாஸ்மின்.



## இணையும் சுட்டிகள்

வேணு ஸ்ரீராம் இயக்கும் ஓ மை ஃப்ரண்ட் தெலுங்குப் படத்தில் பரத்திற்கு ஜோடியாக நடித்துவருகிறார் ஸ்ருதி ஹாசன். அதில் மற்றொரு ஹீரோயினாக நடிக்கவிருக்கிறார் மாப்பிள்ளை, எங்கேயும் காதல் படங்களில் நடித்த ஹன்சிகா மோத்வானி. மேலும் வெளிவரவிருக்கும் வேலாயுதம், ஒரு கல் ஒரு கண்ணாடி படங்களிலும் ஹன்சிகா நடித்துள்ளார் என்பது குறிப்பிடதக்கது. ★



## தமிழில் வாய்ப்பில்லை

ஆயிரத்தில் ஒருவன் படத்துக்குப் பின் தமிழில் புதிய படங்கள் ஏதும் ரீமாவுக்குக் கிடையாது. அதுமட்டுமின்றி பிற மொழிப் படங்களும் கைவசம் இல்லாததால், தவித்துப் போனார் ரீமா சென். இறுதியில் எந்தப் படமும் இல்லாமலிருந்த ரீமா சென், தெலுங்குப் படத்தயாரிப்பாளர் வி.என். ஆதித்யா இயக்கும் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார். இந்தப் படம் முடிந்த பிறகு மலையாளத்தில் ஒரு படம் நடிக்கவுள்ளார். ★




## திரை விமர்சனம்

கிராமத்துத் திருவிழா சமயம்... அழகர் சாமியின் குதிரை காணாமல் போக, அழகர்சாமியின் குதிரை ஒன்று அதே ஊருக்குள் வந்தால் என்ன ஆகும்?

அப்புக்குட்டி போல ஒரு ஹீரோவை முன்வைத்த ரசனைக்கும் துணிச்சலுக்கும் முதல் பாராட்டுக்கள். விகடனில் தொடர்ச்சியாக வெளிவந்த பாஸ்கர் சக்தியின் சற்றே பெரிய சிறுகதையை அதே பெயரில் படமாக்கி இருக்கிறார் இயக்குநர் சுசீந்திரன்.

ஒரு கிராமம், அதன் வெள்ளந்தி - வில்லங்க மாந்தர்கள், ஒரு குதிரை, ஒரு குதிரைக்காரன்... இவர்களும், இவர்களுக்கு இடையிலான சம்பவங்களும்தான் படம்.

குதிரையைக்
தலைக்கட்டுகள்
வாசிப்பு சுவாரஸ்
இயக்குநரின் சாம
தன்மையான
இளந்தாரிகள், ம
நொந்து நூலாகுப்
சுத்தபத்தம் காக்க
சூரி எனப் படம்
வசீகரம்.
கொடைக்கான
வைத்ததுபோல,
மலையாளக் கோ
பழங்களுக்கு குந்
கோடங்கியின் ர
ஸ்டார் அட்ரா
சக்தியின் கிண்ட
கை தட்ட வைக்
இசையிலும் மலை
இளையராஜா. ஒ
காட்சியாக கிராம
மிதந்து, தவழ்ந்து
அப்புக்குட்டிக்
பதியாததால், அ
உண்டாக்கவில்ல
ஏற்படுவதற்கான
காட்சிகளில் காட்
எண்பதுகளில் நட
ஆனால், இப்போ
இருக்க, ஏன் தெ
ஆங்காங்கே
ஓட்டத்தை ரசிக்க

## தமிழுக்குப் 13

தமிழ் திரைப்படங்களுக்கு இவ்வளவு அதிகமான தேசிய விருதுகள் இதுவரை கிடைத்த தில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மொத்தமுள்ள 36 விருதுகளில் 13 விருதுகள் தமிழ்ப் படங்களுக்குக் கிடைத்துள்ளமை இதுவே முதல்முறை. அதில் 8 விருதுகள் சன் பிக்சர்ஸ் படங்களுக்குக் கிடைத்திருக்கிறது. தமிழ் படங்களுக்கு இத்தனை தேசிய விருதுகள் கிடைக்கக் காரணமாக இருந்த சன் பிக்சர்ஸ் கலாநிதி மாறனுக்கு பல்வேறு திரைத் துறைப் பிரமுகர்கள் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்து வருகின்றனர்.

### விருது பெற்றவர்கள் விவரம்

| | | |
|---|---|---|
| சிறந்த படம் | : | ஆதாமின்டே மகன் அபு (மலையாளம்) |
| சிறந்த நடிகர் | : | தனுஷ் (ஆடுகளம்), சலீம் குமார் (ஆதாமின்டே மகன் அபு) |
| சிறந்த இயக்குனர் | : | வெற்றிமாறன் (ஆடுகளம்) |
| சிறந்த திரைக்கதை | : | வெற்றிமாறன் (ஆடுகளம்) |
| சிறந்த நடன அமைப்பு | : | தினேஷ் (ஒத்த சொல்லால... ஆடுகளம்). |
| சிறந்த எடிட்டிங் | : | கிஷோர் (ஆடுகளம்) |
| சிறந்த பொழுதுபோக்கு படம் | : | தபங் (இந்தி) |
| சமூகப் பிரச்சினை பற்றிய படம் | : | சாம்பியன்ஸ்(மராட்டி). |
| ஒளிப்பதிவு | : | மது அம்பாட் (ஆதாமின்டே மகன் அபு). |
| சிறந்த நடிகை | : | சரண்யா பொன்வண்ணன் (தென்மேற்கு பருவக்காற்று), மித்தாலி (பபு பஞ்ச் பாச்சா, மராட்டி). |
| சிறந்த குணசித்திர நடிகர் | : | தம்பி ராமய்யா (மைனா). |
| சிறந்த பாடலாசிரியர் | : | வைரமுத்து (கள்ளிக்காட்டில் பொறந்த தாயே, தென்மேற்கு பருவக்காற்று). |
| துணை நடிகை | : | சுகுமாரி (நம்ம கிராமம்). |
| தயாரிப்பு வடிவமைப்பு | : | சாபுசிரில் (எந்திரன்) |
| ஸ்பெஷல் எபெக்ட்ஸ் | : | ஸ்ரீனிவாஸ் மோகன் (எந்திரன்). |
| சிறந்த குழந்தைகள் படம் | : | ஹெச்சேகாலு (கன்னடம்). |
| இசை அமைப்பாளர் | : | விஷால் பரத்வாஜ் (இஷ்க்யா), ஐசக் தாமஸ் (ஆதாமின்டே மகன் அபு). |
| ஜூரி விருது | : | வ.ஐ.ச. ஜெயபாலன் (ஆடுகளம்). |

## கதாநாயகனா

கஞ்சா கருப்புக்கு குழந்தை பிறந்த நேர
கதாநாயகனாக மாற்றி இருக்கிறது. இதுவ
நடிகனாக நடித்து வந்த கஞ்சா கருப்பு, மு
வளைகுடா'' என்ற படத்தின் மூலம் கதாந
களமிறங்குகிறார். தனசேகரன் என்பவர் இ
மன்னார் வளைகுடா என்று பெயரிடப்பட்
கஞ்சா கருப்புக்கு மூன்று கதாநாயகிகளா
புதுமுகங்களாம். மீனவர் வாழ்க்கையை
இப்படத்தில் மீனவராக நடிக்கிறார் கஞ்சா
சாதாரண மனிதன் ஒருவர் கோபப்பட்
ஆகும் என்பதே படத்தின் கதை. இப்பட
சில உண்மை சம்பவங்களை மையப்படுத்தி
எடுக்கப்பட இருக்கிறது.



## விருது

தேசிய விருதை
முத்து வாங்கியிரு
யது: தென்மேற்
போது தேசிய வி
காட்டில் பொறந்த
எழுதிய பாடல்.
மேட்டுக்குடி தா
திரைப்படத்தில்
யாக உழைக்கும்
பாடலாக இது எ

## புது விருது!

விஜய் டி.வி. சார்பில் ஆண்டுதோறும் பிரமாண்ட
மான முறையில், கலை நிகழ்ச்சிகளுட
இசை விருதுகள் வழங்கப்படுகிறது. அதே
போல் இந்தாண்டும் 2010ம் ஆண்டுக்கான இசை
விருதுகள் வழங்கப்பட்டன. அதில் சிறந்
இசையமைப்பாளராக ஏ.ஆர்.ரஹ்மான் தேர்
செய்யப்பட்டார். சிறந்த பாடகருக்கான விருது
ணைத்தாண்டி வருவாயா படத்தில் ஹோசா
பாடலுக்காக, விஜய் பிரகாஷ்க்கு வழங்கப்ப



## நிஜப் பட

'கோ' படத்தி
கிராப்பராக
பிறகு போட்
பொழுதுபோ
படப்பிடிப்பு
சுற்றுலா என்
ஜீவா, படப்பி
சுற்றுலா செ
எடுப்பதைப்
கொண்டுள்ள

குதிரையைக் காணோம் என்று தலைவர் தலைமையில் ஊரின் தலைக்கட்டுகள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் காட்சியை, வாசிப்பு சுவாரஸ்யம் குறையாத திரை அனுபவம் ஆக்கியதில் இருக்கிறது இயக்குநரின் சாமர்த்தியம்.

தன்மையான முரட்டுத்தனம் காட்டும் ஊர் தலைவர், நாத்திக இளந்தாரிகள், மலையாளக் கோடங்கியின் உதார், கிராமப் பஞ்சாயத்தில் நொந்து நூலாகும் இன்ஸ்பெக்டர், மாலை போட்டு இருக்கும் சமயமும் சுத்தபத்தம் காக்காத மைனர், உளவு பார்க்க வந்து மினி சாமியார் ஆகும் சூரி எனப் படம் நெடுக அடுக்கப்பட்டு இருக்கும் குட்டிக் கதாபாத்திரங்கள் வசீகரம்.

கொடைக்கானல் ஏரியில் குதிரை ஓட்டிக்கொண்டு இருந்தவரை நடிக்க வைத்ததுபோல, அப்புக் குட்டியிடம் அசல் குதிரைக்கார உடல்மொழி. மலையாளக் கோடங்கி வரவால் வெகுண்டெழுந்து ஊறுகாய் எலுமிச்சம் பழங்களுக்கு குங்குமம் பூசி, மனைவி கையால் பூசை வாங்கும் உள்ளூர் கோடங்கியின் ரவுடிகள் கலகலப்பு.

ஸ்டார் அட்ராக்ஷன் இல்லாத படத்தின் நட்சத்திரக் கவர்ச்சி, பாஸ்கர் சக்தியின் கிண்டல், நக்கல், எள்ளல், கேலி தொனிக்கும் வசனங்கள்தான் கை தட்ட வைக்கின்றன. குதிக்கிற குதிக்கிற... பாடலிலும், பின்னணி இசையிலும் மலை வாசஸ்தல சுற்றுலா போன உணர்வை உண்டாக்குகிறார் இளையராஜா. ஒளிப்பதிவு, அறிமுகம் தேனி ஈஸ்வர். ஜன்னல் வழிக் காட்சியாக கிராமத்தின் உயிர்ப்பைப் பிரதிபலிக்கும் கமரா, அந்தரத்தில் மிதந்து, தவழ்ந்து மலைக் கிராமத்தின் அழகைக் கொள்ளை கொள்கிறது.

அப்புக்குட்டிக்கும் குதிரைக்கும் இடையிலான பிணைப்பு அழுத்தமாகப் பதியாததால், அவர் குதிரைக்காக அழுது புரள்வது அத்தனை தாக்கத்தை உண்டாக்கவில்லை. சரண்யா மோகனுக்கு அப்புக்குட்டி மீது தீராக் காதல் ஏற்படுவதற்கான காரணமும் இல்லை. ஊரில் அதீத வறட்சி என்பதைக் காட்சிகளில் காட்டவே இல்லை. ரொட்டியின் விலையை வைத்து கதை எண்பதுகளில் நடக்கிறதுபோல என்று அனுமானிக்க வேண்டி இருக்கிறது. ஆனால், இப்போதும் இப்படியான கிராமங்களும் மூட நம்பிக்கைகளும் இருக்க, ஏன் தெளிவு இல்லாத எண்பதுகள் தொனி?

ஆங்காங்கே நின்று நிதானித்து வந்தாலும், அழகர்சாமி குதிரையின் ஓட்டத்தை ரசிக்கலாம்.

## யாரும் காதலிக்கவில்லை



இதுவரை எனக்கு யாருமே லவ் லெட்டர் கொடுக்கவில்லை என்று நடிகை ஹனிரோஸ் கூறியுள்ளார். அவர் அளித்துள்ள பேட்டியில், தமிழில் சிங்கம் புலி படத்தில் சின்ன பாத்திரத்தில் நடித்தேன். ஒரு பாடலில் கவர்ச்சியாக வந்தேன். இவ்வளவு கவர்ச்சியாக நடிக்கலாமா என்று கேட்டார்கள். கதைக்கும், காட்சிக்கும் தேவை என்றால் அப்படி நடிப்பதில் தவறு இல்லை. காந்தர்வன் சூட்டிங் முடிந்து விட்டது.

காதல், திருமணம் பற்றிய கேள்விக்குப் பதில் அளித்த ஹனிரோஸ், நான் இப்போ பி.ஏ சமூகவியல் படிக்கின்றேன். இதுவரை யாரும் எனக்கு லவ் லெட்டர் தந்ததே இல்லை. நானும் யாரையும் காதலித்தது இல்லை. ★

## பெரிசுதான் வேணும்



சின்ன ஹீரோக்களுடன் அமலா படத்தில் நடிப்பதில்லை எனச் செய்திகள் பரவுகின்றன. ஆனால் இதை அவர் மறுத்திருக்கிறார். 'இப்போதைக்கு பெரிய படம், பெரிய நடிகர்களுடன் நிறையப் படங்கள் வருகிறது. சின்ன ஹீரோக்கள் நடிக்கும் படக் கதைகள் சரியில்லாதபோது அப்படங்களைத் தவிர்த்து விடுகிறேன். வாய்ப்பு இருக்கிறது என்பதற்காகக் கதையில்லாத படங்களை ஒப்புக்கொண்டு அதில் முடங்க விருப்பமில்லை. இப்போதைக்கு தமிழ், மலையாளத்தில் மட்டுமே கவனம் செலுத்துகிறேன். பிற மொழியிலிருந்து வாய்ப்புகள் வந்தாலும் அது என்னை அடையாளம் காட்டும் படமாக இருக்க வேண்டும்' என்றார். ★

## ...யகனாக கருப்பு



...க்கு குழந்தை பிறந்த நேரம், அவரை
...மாற்றி இருக்கிறது. இதுவரை நகைச்சுவை
... வந்த கஞ்சா கருப்பு, முதன்முறையாக "மன்னார்
...ற படத்தின் மூலம் கதாநாயகனாக
...ர். தனசேகரன் என்பவர் இப்படத்தை இயக்குகிறார்.
...டா என்று பெயரிடப்பட்டுள்ள இப்படத்தில்,
... மூன்று கதாநாயகிகளாம், அதுவும்
... மீனவர் வாழ்க்கையை மையப்படுத்தி உருவாகும்
...வராக நடிக்கிறார் கஞ்சா கருப்பு.
...தன் ஒருவர் கோபப்பட்டால் என்ன
... படத்தின் கதை. இப்படத்தின் கதை
...பவங்களை மையப்படுத்தி கற்பனையாக
...க்கிறது.

## போட்டியில்..




'கோ' படத்தின் மூலம் முதல் இடத்துக்கு வந்த கார்த்திகாவால் முதலிடத்திற்கு முட்டிக் கொண்டிருக்கும் சில நாயகிகளிடையே பீதி கிளம்பியுள்ளதாம். காரணம், 'கோ' படத்தில் கிடைத்த வெற்றி. இவரின் வித்தியாசமான அழகுக்கு, கோ படத்தில் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்திருப்பதாலும், தேவைப்பட்டால் கார்த்திகா கவர்ச்சியாகவும் நடிக்க முடிவு எடுத்திருப்பதாலும் ஹான்சிகா போன்ற புதுமுகங்களுக்குப் பெரும் போட்டியாக மாறியிருக்கிறார் கார்த்திகா.

## விருது நாயகன்



தேசிய விருதை 6முறையாக, கவிஞர் வைரமுத்து வாங்கியிருக்கிறார். அதுபற்றி அவர் கூறியது: தென்மேற்கு பருவக்காற்று படத்தில் தற்போது தேசிய விருது கிடைத்திருக்கும் கள்ளிக் காட்டில் பொறந்த தாயே பாடல் படம் எடுத்த பிறகு எழுதிய பாடல். இதுவரை நடுத்தர மற்றும் மேட்டுக்குடி தாய்களை பற்றிய பாடல்களே திரைப்படத்தில் வந்திருக்கிறது. முதன் முறையாக உழைக்கும் வர்க்கத்தை சேர்ந்த ஒரு தாயின் பாடலாக இது எழுதப்பட்டது. ★




## நிறுத்தம்...?

ரஜினிக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதையொட்டி பல்வேறு வதந்திகள். அவரது உடல்நிலை சார்ந்த வதந்திகளுக்கு அவ்வப்போது விளக்கம் அளித்து வருகிறார் லதா ரஜினிகாந்த். ராணா குறித்த வதந்திகளுக்கு?

ரஜினிக்கு ஏற்பட்ட திடீர் உடல்நலக் குறைவால் ராணா படமே நிறுத்தப்பட்டது என்பதுதான் லேட்டஸ்ட் வதந்தி. ஆனால் இதனைக் கடுமையாக மறுத்திருக்கிறார் படத்தை இயக்கும் ரவிக்குமார். படம் நிறுத்தப்பட்டது என்பதைத் திட்டவட்டமாக மறுத்திருக்கும் ரவிக்குமார், தாய்லாந்தில் படத்துக்கான லொகேஷன் தேடும் பணியில் தீவிரமாக இருப்பதாகவும், லொகேஷன் தேர்வு செய்வதற்காக விரைவில் லண்டன் செல்லவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ரஜினிக்காக படப்படிப்பு தள்ளி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் அவர் மறுத்துள்ளார். ராணா படப்பிடிப்பு திட்டமிட்டிருப்பதே ஜூன் மாதம்தான் எனவும் அவர் தெளிவுப்படுத்தியிருக்கிறார். ★

## ...ருது!



...பில் ஆண்டுதோறும் பிரமாண்ட
... கலை நிகழ்ச்சிகளுடன்
... வழங்கப்படுகிறது. அதே
...ம் 2010ம் ஆண்டுக்கான இசை
...கப்பட்டன. அதில் சிறந்த
...ராக ஏ.ஆர்.ரஹ்மான் தேர்வு
...சிறந்த பாடகருக்கான விருது, விண்
...ணுவாயா படத்தில் ஹோசானா...
...ஜய் பிரகாஷ்க்கு வழங்கப்பட்டது.

## நிஜப் படப்பிடிப்பாளர்



'கோ' படத்தில் பத்திரிகை போட்டோ கிராப்பராக வந்த ஜீவா, அந்த படத்திற்கு பிறகு போட்டோ எடுப்பதைத் தனது பொழுதுபோக்காகக் கொண்டுள்ளாராம். படப்பிடிப்புக்காக வெளியூர், வெளிநாட்டுச் சுற்றுலா என்றால் ஆர்வமாகக் கிளம்பும் ஜீவா, படப்பிடிப்பு இல்லாத நேரத்திலும் சுற்றுலா சென்று போட்டோக்கள் எடுப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டுள்ளாராம்.

## கவர்ச்சி ஆகாது



த்ரிஷா அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில், 'நடிப்புக்கு முக்கியத்துவமுள்ள வேடங்களில் நடிப்பது என முடிவு செய்திருக்கிறேன். வர்த்தகரீதியில் நடிப்பது தவறில்லை. அப்படி நடிக்க நிறையப் புதுமுகங்கள் வந்துவிட்டார்கள். தெலுங்கில் வெங்கடேஷுடன் ஒரு படத்தில் நடிக்கிறேன். இப்படத்தில் நான் நீச்சல் உடை அணிந்து நடிப்பதாகச் சிலர் வதந்தி பரப்பி இருக்கிறார்கள். திரையுல குக்கு வந்து 9 வருடம் ஆகிவிட்டது. இதுவரை அப்படி நடிக்கவில்லை. இனிமேலும் நீச்சல் உடை அணிந்து நடிக்க மாட்டேன்" எனத் தெரிவித்துள்ளார்.

# வெளிக்கிட்டிட்டன்

சிறுகதை



இந்த வீட்ட விட்டுட்டுப் போறதுக்கு எனக்கு எப்பவும் மனசு இடங்கொடுத்ததில்லை. இதை வெறுங்கல்லு மண் கொண்டு கட்டின வீடெண்டு மட்டும் சொல்லேலுமே.... என்ர உழைப்பு...

மனுசியின்ர உயிர்மூச்சு....

குஞ்சு குருமானிகளின்ர சிரிப்புச் சத்தம்.... எல்லாந்தான்...

எனக்கேதோ கொஞ்சநாளாய் செத்துப்போன என்ர மனிசி ராசாத்தியின்ர நினைப்புத்தான்.

அவளிருந்தால்....

அதுக்கு மேல நினைக்கேலாமல் வெறும் முகட்டையே பார்த்துக் கொண்டிருந்தன்.

என்னில பெலன் குறைச்சாப் பிறகு வெளியில இருக்கிற கொட்டிலில விடத்தான் மூத்தவளுக்கு விருப்பம். நாலைஞ்சு நாகரீகமான சனம் வந்து போற இடமெண்டு அவளுக்கு நினைப்பு. நான் இந்த விசயத்தில பிடிவாதமா நிண்டுட்டன். பெரிய அறைக்குப் பக்கத்தில நான் போட்ட ஒத் தாப்பில தான் என்ர கட்டிலை போட்டிருக் கனும்.

பேரப்பிள்ளையளோட எண்டாலும் கதைக்கலாமெண்டா அதுகள் கிட்டவே வருகுதுகளில்ல.

''அப்புவுக்கு பக்கத்தில போகேலாமக் கிடக்கு... ஒரு கெட்ட நாத்தம் வீசுது'' எண்டு மூத்த பேரப் பெட்டை தாயோட சிணுங்குவாள். கடைக் குட்டியை இழுத்து வச்சு கொஞ்சினா,

''அப்புவுக்கு வருத்தமல்லோ

தொந்தரவு செய்யாதை.... உனக் கும் வருத்தம் வந்திடும்'' எண்டு நிக்கிற ஆரோ வொண்டு தூக்கிக் கொண்டு போகிடும். அது களுக் கும் எங்கே நேரம் கிடைக்கிது?.

பள்ளிக்கூடம், ரியூசன், அது இதெண்டு ஓடித்திரிய பொழுது சரியாப்போச்சு. இந்தக் கிழவனைத் திரும்பிப் பாக்க அதுகளுக்கு எங்கை நேரம்?.

நான் வந்துபோற வெய்யிலையும், சுத்தித்திரியிற காத்தையும் புதினம் பார்த்துக் கொண்டேயிருப்பன். வெயி லும் காத்தும் என்ர கண்ணுக்கு பழைய சங்கதிகள் பலதையும் கொண்டு வந்து முன்னால நிப்பாட்டும்.

என்ர சம்பவங்களைப் பாத்து அதுகளுக்குப் பின்னால என்ர மனசை ஓட விட்டுப் பாத்திருப்பன். என்ர மனிசியோடை என்ர பாட்டுக்குக் கதைச்சுக் கொண்டிருப்பன்; அழுது கொண்டிருப்பன். மூத்தவள் அழுதுகுழறி எல்லா ரையும் கூப்பிட்டுப் போட்டாள்.

''ஐயா அசையாமல் கண்டபாட்டுக்குப் பினாத்திரா... தட்டி அருட்டினாலும் அசையிறா வில்லை....

எனக்குப் பயமாக்கிடக்கு...

நெருங்கியிட்டுது போல கிடக்கு... அதுவரைக்குமெண்டாலும் எல்லாரும் கூட இருங்கோவன்...''

அவளின்ர பயத்துக்காக எல்லாரும் அஞ்சு நாள் காத்திருந்து களைச்சுப் போய்.. திரும்பிப் போட்டுதுகள்.

எனக்குத் தெரியும் ... நான் இந்த வீட்ட விட்டுப் போறதுக்கான காலம் இன்னும் வரேல்ல எண்டு தான் நினைக்கிறன். எனக்கு வீட்டை விட்டு வெளிக்கிடுறதுக்கு கொஞ்சமெண்டாலும் விருப்ப மில்லை.

ஆனா இப்ப மூண்டு வருஷமா ஒரே கிடையில கிடந்து கொஞ்சம் அலுத்துத்தான் போட்டுது... பாக்கிறதுகளுக்கும் அலுத்துப் போயிருக்கும்.

''ம்... என்ன செய்யிறது..

நல்ல இருட்டு, நித்திரை வரேல்ல. முழிச்சுப் பாத்துக் கொண்டேயிருந்தன்.

ஆரோ கூப்பிடுற மாதிரியிருந்தது; எனக்குப் பழக்கமான குரல்தான்.

மெதுவா எழும்பினன், பக்கத்தில கைக்கொட்டன் இருந்துது. ஆனா எடுக்கேல்ல. நிண்டன்... தலைசுத்துற மாதிரி இருந்தது.

வரச்சொல்லி அந்தக் குரல் இப்பவும் கூப்பிடுது... சரியாப் பிடிபடேல்ல ஆரெண்டு.

என்னால நிமிந்து நிக்கேலாது...

மெதுவாக நடக்கத் தொடங்கினன்; முன்னாலே யாரோ போற அசுமாத்தம் தெரிஞ்சுது.. அதைப் பிடிச்சுக் கொண்டு அப்பிடியே நடந்தன். எங்கை போனன், எப்பிடிப் போனன். எண்டு எனக்கே தெரிய இல்லை.

> எனக்குத் தெரியும்... நான் இந்த வீட்டை விட்டுப் போறதுக்கான காலம் இன்னும் வரேல்ல எண்டு தான் நினைக்கிறன். எனக்கு வீட்டை விட்டு வெளிக் கிடுறதுக்கு கொஞ்ச மெண்டாலும் விருப்பமில்லை. ஆனா, இப்ப மூண்டு வருஷமா ஒரே கிடையில கிடந்து கொஞ்சம் அலுத்துத்தான் போட்டுது...

படலையைத் திறந்து கொண்டு மண்டான் பக்கத்தால இறங்கி விதானையாற்ற தென்னங் காணிய கடந்து குடுகுடு வெண்டு நடந்து போறது எனக்கே தெரியுது.

இதாற்ற வீடு...? பிடிபடேல்ல.

தட்டி சாத்தியிருந்தது.

தட்டியைத் தள்ளிக் கொண்டு போனன்.. அப்பிடியே கவிண்டு தட்டிக்கு மேலே விழுந்து போனன்.

முழங்காலளவுக்கு முள்ளுக்கம்பி குறுக்காயிருந்து கீறியும் போட்டுது. மாடு கத்துற சத்தத்துக்கு லாம்பு வெளிச்சமொண்டு வீட்டுக் குள்ளால வெளிக்கிட்டு வந்துது.

''ஆரது...''

நான் குந்தியபடி யிருந்தன்.

லாம்பை முகத்துக்குக் கிட்ட பிடிச்சபடி

''அட.. சீனியப்புவே.. என்ன நித்திரையில வெளிக்கிட்டியளே''

என்னால வாய் திறந்து பேச முடியேல்லை, முழிச்சபடி குந்தியிருந்தன்.

விடியக்காலம முழிக்கேக் குள்ள மூத்தவளின்ர குரல் கேட்டுது. ஆரோடையோ கதைச் சுக் கொண்டிருக்கிறாள்.

''எங்கட ஐயாவ ராத்திரி ஏதோ வந்து கையைப் பிடிச்சும் கொண்டெல்லே போட்டுது''

''ம்... விசயம் கேள்விப் பட்டு பக்கத்தில இருக்கிற துகள் பாக்க வந்திருக்குதுகள்.

''பிள்ளை... இப்பிடியான நேரத்திலதான் பேய் பிசாசுகள் வந்து இவையளைக் கூட்டிக் கொண்டு போறதெண்டு சொல்லுறவை... கவனமாப் பார்க்க வேணும் ...''

வந்த ஆரோவொண்டு தனக்குத் தெரிஞ்ச கதையைச் சொல்லத் தொடங்கீட்டுது.

''கதையைக் கேளுங்கோ... பிறகு ஈசனெல்லோ தங்கட வீட்டுக்குப் பின்னால ஐயா விழுந்து கிடக்கிறதைப் பாத்துப் போட்டு தூக்கிக் கொண்டு வந்து விட்டவன்.

நான் ஏதோ புதினங் கேக்கிற மாதிரியே கேட்டுக் கொண்டு படுத்திருக்கிறன். வயிறு நல்லாய்ப் பசிக்குது.

பக்கத்தில கஞ்சி வச்சிட்டுப் போயிருக்கிறாள். ஆனா எனக்குக் கஞ்சி கொஞ்சநாளாய்ப் பிடிக்காமல் போட்டுது.

''பிள்ளை என்னெண்டு இந்த மனுசன் இருட்டுக்குள்ள குடு குடெண்டு போச்சுது.... குளங்கள் குட்டைகள் இருக்கிற இடம்....''

இன்னொண்டு நல்லாக் கரிசனை பட்டுது.

''நாளைக்கு ஐயாவை நல்லாய்ப் பாக்கேல்ல எண்டு கதைவரும். தம்பியாக்கள் சொல்லுவாங்கள், இவள்தான் சாகவிட்டுட்டாள் எண்டு''

மூத்தவளுக்கு அவளின்ர கவலை.

உதுகளைக் கேட்கப் பிடிக்காமல் அப்பிடியே கண்ணை மூடினன். தூங்கிப் போனான்.

இடியன் சத்தத்துக்கு கொக்குகள் பறக்கேக்குள்ள மனம் படக்கெண்டு அடிக்கும். அப்பிடித்தான் இப்ப அடிக்குது.

முந்தி மண்டான் காட்டுக்கு கொக்கு வேட்டைக்குப் போறனான். தனியவும் போவன்.., அவன் சின்னாம்பியோடையும் போவன்.

கொக்கு வேட்டைக்குப் போகோணும் போலவே கிடக்கு.

மண்டானுக்குள்ள, முழங்காலளவு தண்ணிக்குள்ள, கொக்கைக் கலைக்காமல் மெதுவா நடந்து கண்டல் வேருகளின்ர இடைவெளிக்குள்ள மறைஞ்சிருப்பன்.

கொக்குகளில்லாட்டி கொக்குகள் வருமட்டும் காத்திருப்பன்; கையில வெடிமருந்து அடைச்ச இடியன் எப்பவும் துணைக்கிருக்கும்

வெத்திலையைப் போட்டுக் காத்திருந்தா, கொக்குகள் கூட்டமா வந்து அங்காலயிருக்கிற பொற்பத்தையில இருக்குங்கள். மனம் சிலிர்த்திச்சு...

மூச்சு விடக்கூடாது...

கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருக்க வேணும், எந்தச் சத்தஞ் சல்லாடியும் காட்டக்கூடாது.

அதுக்குப் பிறகு மெதுவா இடி யனை எடுத்துக் குறிபார்க்க வேணும்... மூச்ச நல்லா இழுத்து...

உடம்பு ஒருக்கா துடிச்சிச்சுது.

மெதுவா அமத்தினன்... வெடிச் சத்தில் காற்று அதிர்ந்திச்சுது. என்ர உடம்பு பேந்து மொருக்கா துடிச்சிச்சுது.

கொக்குகள் எல்லாம் பறந்து போகுது

''ஐயோ.... என்ர ஐயா''

மூத்தவளின்ர அலறல் எங்கயோ தூரத்தில கேக்குது.

''ஐயோ எங்களை விட்டுப் போட்டியளே'' அவளின் அலறல் இன்னும் நல்ல காரமாய்க் கேக்க என்ர உடம்பு ஒருக்கா தூக்கிப் போட்டுது.

இதோ, நான் வீட்டைவிட்டு வெளிக்கிட்டிட்டன்.★

ந.மயூரரூபன்

# நம்பிக்கை மீதான கற்பனை

## வெற்றுச் சொல்லின் பொருள்

மனித வாழ்வின் இயக்க சக்தி நம்பிக்கை எனச் சொல்வார்கள். அந்த வேதத்திலிருந்தே அனைத்தும் ஊற்றுப் பெறுவதாகவும், வேர் கொள்வ தாகவும் கூறப்படுகின்றது. தமது ஒவ் வொரு எண்ணம் மீதும் இலட்சியம் மீதும் வைக்கும் கட்டுக்களற்ற நம்பிக்கையினால் மட்டுமே அதனை சாதிக்க முடியும் என்ற கொள்கை படித்தவர்கள் தொட்டு பாமரர்கள் வரைக்குமானவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

* கடவுள் போல கண்ணுக்குப் புலப்படாத ஒரு வெற்றுச் சொல்லுக்கு ஏன் இவ்வளவு மதிப்பு?
* வாழ்க்கையில் நாம் நம்புகின்றபடியேதான் எல்லாம் நடக்கின்றதோ?
* நம் நம்பிக்கையுடன் நாம் நம்புகின்றபடியே தான் எல்லாம் நடக்கின்றதா? நம்பிக்கையுடன் உயிராக இருக்கும் இலட்சியங்கள் எல்லாம் ஒரு பிசகும் இன்றி நிறைவேறி விடுகின்றனவா?

அடிப்படையில் எந்தச் சொற்களுக்கும் உருவ மில்லை. இயற்கையில் கண்ட பொருளை பார்த்து முதல் மனிதன் என்ன பெயர் சுட்டி அழைத்தானோ அதுவே அப்பொருளின் பெயராகியது. ஆரம்ப மனிதன் தன் வேட்டையாடலுக்கும், உணவு சேகரிப்புக்கும் பாதுகாப்புக்கும் காரணமாக இருந்த கல்லை கடவுளாக்கினான். கல் கடவுளாகி இன்றும் நிலைக் கிறார்.

நாம் நினைப்பவைகள் எப்போதும் நடப்பதில்லை. நடந்தவைகளைத்தான் மீள நினைத்து மீண்டும் நடக்க வேண்டுமென நம்புகின்றோம். சரியான முன்னனுபவக் கற்றல், திட்ட மிடல் அறிவுப் பயன்பாடு இன்றி வெறும் நம் பிக்கை மட்டும் நாம் நினைப்பதை அடைய வழி சமைப்பதில்லை.

இலட்சியம் என்ற ஒன்று ஒருபோதும் இருந்ததில்லை. மனித உளவரனை குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு நேர்த்தியாக கட்டமைப்பதற்காக உருவாக்கிக் கடத்தப்பட்ட சொல்தான் இலட்சியம். அது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் மாறிக் கொண்டேயிருக்கும். தான் ஓர் ஆசிரியராக வரவேண்டும் என முன்பள்ளியில் இலட்சியம் கூறும் பிள்ளை வளர்ந்து ஆசிரியரான பின்னர், ஆசிரியராவது என்ற தன் இலட்சியம் நோக்கி பயணிக்க தொடங்கிவிடும்.

இப்படித்தான் நம் எல்லாச் சிந்தனைகள், செயல்களும் மீதான நம்பிக்கையும் இயக்க மும் அது ஒரு சொல் மட்டுமே. அந்தச் சொல் நம் எண்ணத்தைச் சிருஷ்டிக்கிறது.



ஸ்பாட்டன் - கிரேக்க போர் வீரன்

- ஜெரா -

## நம்பிக்கையும்

கொஞ்சக் காலத்திற்கு முன்னர், தன் பெயரால் வானைப் பிளந்த ஒரு மனிதர் நம் மத்தியில் இருந்தார். அவரிடம் ஒவ்வொரு தமிழனதும், சிங்களவனினதும் தலை விதியைத் தீர்மானிக்கும் சக்தியை இத்தே சத்தவர் வழங்கியிருந் தனர். 25இற்கு மேற் பட்ட வருடங்கள், தமிழினத்தின் விடுதலைக் காக அவர் மேற் கொண்டிருந்த இலட் சியம் மற்றும் தியா கம் போன்றவைகள் இவ் அந்தஸ்தைவழங் கின. இது சில இடங் களில் அவராலும் அவர் சார்ந்தவர்க ளாலும் துஷ்பிரயோகிக்கப் பட்டிருந் தாலும், இலட்சியம் மீதான அதீத நம் பிக்கைகளும், சாகசங்களும் super man (விசேட மனிதன்) சக்தியை அளித்தன. இதனால் சில சனங்களுக்கு கடவுளாக வும் சில சனங்களுக்கு விரோதியாக வும் மாறியிருந்தார். பலர் துரோகத்தனத்தை அள்ளிப் பூசிக்கொண்டனர். வளர்த்த கடாவே மார்பில் பாய்ந்த சந்தர்ப்பங்களும் நிறையவே ஏற்பட்டன. அந்த எல்லாச் சந்தர்ப்பங்களையும் முடிவுக்கு கொண்டுவர ரவையேற்றம் செய்யப்பட்ட துப்பாக்கிகள் தயாராகியிருந்தன. காரியமாற்றி வென்றுமிருந்தன. ஆனாலும் அவரைத் தமிழர்கள் உள்ளூர நேசித்தார்கள். நம்பினார்கள். ஏனெனில் அவரின் லட்சியமும், உழைப்பும் எல்லோருக்குமானதாய் இருந்தது. ஆதலால் மக்கள் இறுதிவரை தம் உயிரைப் பலிகொடுக்கவும் தயாராயிருந்தனர்.

அதற்காக அதிக அதிக பலி கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்த ஓர் ஆண்டின் இம்மாதத்தில் தான் அது நடந்தது. ஒரு துண்டு நிலத்தில் தன் சன அரண்களுக்கு மத்தியில் எதிர் படை களால் சுற்றிவளைக்கப்பட்டார். துடித்து விழும் சாவுகளும், தொடர்ச்சியான பின்வாங்கல்களும் சனங்கள் அவர் மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழக்கச் செய்தன. தன்னிருப்பை தக்க வைப்பதற்காகத் தன் குடும்பம் உட்பட பலவற்றை இழந்திருந்த போதும், கடைசி வரை களத்தில் நின்று போராடி மடிவது என்ற இலட்சியத்தோடு நின்ற வரை, தளபதிகள் மனம் மாற்றியதால் சனங்கள் உடைப்பிற்காக காத் திருந்த இரவொன்றில், இராணுவ வேலிகளைத் தகர்த்தெறிந்து கொண்டு ஒரு படைய ணியுடன் மணலாற்றுக் காட்டுக்குள் நுழைந்தாராம். அதன்பின் அவர் பற்றிய கதைகளில்லை. தமிழகத்திலும், புலம் பெயர் நாடுகளிலும் இன்னும் உயி ரோடு இருப்பதாக சொல்லுகிறார்கள். இருக்கிறார், தக்க சந்தர்ப்பத்தில் வெளிப்படுவார் என்ற நம்பிக்கையை விதைக் கின்றனர். கடவுளாக நினைத் தவர்கள் இதனை நம்புகின்றனர். 'இப்படிப் பல தடவை கள் ஏற்கனவே கொல லப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறார்', 'கட்டாயம் இறுதி நேரத்தில் அமெரிக்கா காப்பாற்றியிருக்கும்', 'இன்னும் இருக்கிறார்', 'அப்படி ஒரு முடிவெடுத்திருக்க மாட்டார்' எனப் பல நம்பிக்கைகளை முடிச்சவிழ்க்கின்றனர்.

அந்த நம்பிக்கைகள் வெறும் நம்பிக்கைகளாகவே இன்னும் நீள்கின்றன. ✱

## நம்பிக்கை இன்மையும்...

வெள்ளைக் கொடியுடன் மற்றைய தன் சகாக் களை சரணடையச் செய்துவிட்டு அவருடன் இருந்த முக்கியமானவர்களோடு சிதறிப்போயினராம் என்று ஒரு இறுதிக் கதை உலவுகிறது. ஆனால் இதை அரசு காட்டிய ஆதாரம் பொய்யாக்கியது.

கடற்கரை ஒன்றில் காவு தடி ஒன்றின் மீது அச்சுக் குலையாத வரியுடையோடும், எப்போதும் போல் சுத்தமாக மழித்த முகத்தோடும், அவரது சடலம் தொலைக்காட்சிகளில் காட்டப்பட்டன. கண்கள் மூடப்படாமல் அகலத் திறந்திருந்தன. தலையைப் பிளந்திருந்தது காயம். சிலவேளைகளில் பெரிய கொட்டன்களினால் அடிக்கப்பட்டு அந்தக் காயம் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற கற்பனையை படத்தைப் பார்த்த பலரும் பேசி யிருந்தனர். அதை இணையத் தளங்களில் பார்த்தபோது, பழங் குடி மக்கள் பற்றிய ஒரு படம் நினைவுக்கு வந் தது. (படத்தின் பெயர் நினைவில்லை) மிகக் கஷ்டப்பட்டு வேட்டையாடிய மிருகமொன்றை நடுவில் வைத்துக்கொண்டு ஆடுவர், பாடுவர், கூக் குரலிடுவர் மக்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் வெறி கொண்டு அந்த மிருகத்துக்கு அடி, உதை, தாக்குதல் களை நடத்துவர்.

எந்த ஆடையுமின்றி அவரின் நிர்வாணப் படங் களும் வெளியாகியிருந்தன. இதனை மனிதத் தன் மையுள்ளவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. மிக உயரிய இடத்தில் வைத்துப் பார்க்கப்பட்ட ஒருவரை நிர்வாணமாய்ப் பார்க்க கொடூரமாய்த்தானிருந்தது.

ஆனால் இந்தச் சடலம் அவருடையதல்ல. ஊட றுப்புத் தாக்குதலில் பலியான அவரின் சாயலுடைய புலனாய்வுப் போராளியினுடையது எனச் சில ஊட கங்கள் தெரிவித்திருக்கின்றன. இவை எதையும் ஏற் காத அரசாங்கமும், புத்திஜீவிகளும், அவருக்கு எதி ரானவர்களும் 'செத்துவிட்டார்கள்.', தப்பித்திருக்கக் கூடாது என நிறுவி வருகின்றனர். இருந்தாலும் இனி யொன்றும் செய்ய முடியாது. ''வாழும் வரை வீரனாக இருந்தவர், கோழையாகத் தப்பித்திருக் ககூடாது'' எனப் பல காவியத் தனங்களை அவிழ்த்து விடுகின்றனர். அரசு எழுத்து மூலமாக, உத்தியோக பூர்வமாக அல்லாமல் வாய்மூலமான அறிவிப்பில் மரணத்தை உறுதி செய்திருக்கிறது.

அவரின் மரணத்தில் அதிகம் சந்தோஷப்பட் டதும், பாதிக்கப்பட்டதும் கூடி இருந்து குழி பறித்தவர்கள்தான். அவர்கள் இணையத் தளங்களிலும், புலம்பெயர் எழுத்துலகிலும் தமது சந்தோஷங்களைப் பகிர்ந்து வருகின்றனர். அவரின் மரணத்துக்கு பின்னர் சுதந்திர வெளியொன்று கிடைத்திருப்பதாக நம்பு கின்றனர். அவர்களது அரசியல் புலம் புதிய தளங் களை நோக்கித் தன்னை விஸ்தீரணப்படுத்திக் கொள்கிறது. உடைந்து கிடக்கும் தமிழ் புலம்பெயர் அரசியலில் இவ்வகையும் தன்னைப் பெரும் சக்தியாக பதிவு செய்து கொண் டிருக்கிறது. ✱

## மூளைக்கு வேலை தரும்

## மாயச் சதுரம்

### கணிதப் புதிர் - 18

| | | | | |
|---|---|---|---|---|
| 75 | 40 | 05 | 120 | 85 |
| 80 | 70 | 35 | 20 | 115 |
| 110 | 100 | 65 | 30 | 25 |
| 15 | 45 | 95 | 60 | 50 |
| 105 | 10 | 125 | 90 | 55 |


இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கூட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 325 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

**கணிதப் புதிர் - 17 இன் சரியான விடை**

| | | | | |
|---|---|---|---|---|
| 46 | 70 | 98 | 8 | 36 |
| 42 | 48 | 74 | 82 | 12 |
| 16 | 24 | 50 | 78 | 86 |
| 90 | 20 | 28 | 54 | 62 |
| 66 | 94 | 4 | 32 | 58 |




## தவறான தூக்கம் மூளையில் பாதிப்பை ஏற்படுத்தும்



நாம் தூங்கக்கூடிய நேரம் வாழ்க்கையின் பிந்திய கால கட்டத்தில் மனநல விடயத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

தூங்க கூடிய நேரம் மிகக் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ இருப்பின் நமது மூளை 7 ஆண்டுகள் கூடுதலாக மூப்படைகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

6-8 மணி நேரத்திற்கு குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ தூங்கும் போது மூளையின் செயல்பாடுகளில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

மூளை பாதிப்படைதல் காரணமாக உடல் நலமும் முன் கூட்டியே மரணமும் ஏற்படலாம் என அவர்கள் எச்சரித்து உள்ளனர்.

நடுத்தர வயதுக்குப் பின்னரான பிந்தைய 5 ஆண்டு காலத்தில் தூக்க நேரம் குறித்து லண்டன் பல்கலைகழக ஆய்வாளர்கள் ஆய்வு செய்த போது பிந்திய வாழ்க்கையில் மூளைத்திறன் செயல்பாட்டில் பிரச்சனைகள் ஏற்படுகிறது எனக் கண்ட றிந்தனர்.

பரிந்துரைக்கப்பட்ட தூக்க நேரத்திற்கு மேல் தூங்கியவர்களில் 7-8 சதவீதத்தினர் குறுகிய வார்த்தையை நினைவில் வைத்திருப்பது உட்பட பல்வேறு மூளைத்திறன் குறைபாடுகளை எதிர்கொள்கின்றனர்.

தூக்க நேரம் குறைவாக உள்ள 25 சதவீத பெண்களும், 18 சதவீத ஆண்களும் கூடுதலான வார்த்தைகளை அறியும் திறனில் பாதிக்கப்படுகிறார்கள்.★

## ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்ள

ஆங்கிலத்தில் நன்கு படித்து முதன்மையான வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தாலும் தொடர்ச்சியாக ஆங்கிலம் பேசவராமால் பலர் இருக்கின்றனர்.

இவர்களுக்கு ஆங்கில மொழியை அசத்தலாக தினமும் வீடியோவுடன் சொல்லி கொடுக்க ஒரு தளம் உள்ளது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை தொடர்ச்சியாக ஆங்கிலம் பேச வேண்டும் என்ற ஆசை இருக்கும்.

ஆனால் அவர்களுக்குத் தனியாக ஆங்கிலம் கற்றுக்கொள்ள நேரம் இருக்காது. இப்படி ஆங்கிலம் கற்றுக்கொள்ள விருப்பம் உள்ள அனைவருக்கும் உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது. ஆங்கிலத்தை சொல்லிக் கொடுக்கப் பல இணையத்தளங்கள் இருக்கிறதே இத்தளத்தில் அப்படி என்ன சிறப்பு இருக்கிறது என்று எண்ணும் அனைவருக்கும் பதிலாக இத்தளம் ஆங்கிலத்தை வேடிக்கையாகத் தினமும் வீடியோவுடன் சொல்லி நம்மை அசத்துகிறது.

இந்த வீடியோக்களை தினமும் நமக்கு நேரம் கிடைக்கும் போது பார்த்தாலே போதும். ஆங்கில அறிவு வளரவும் சில வாரங்களில் நாமும் ஆங்கிலத்தை எந்தப் பிழையும், எந்த தடையும் இல்லாமல் தொடர்ச்சியாக பேசலாம். ஒவ்வொரு ஆங்கில வார்த்தையும் எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதில் தொடங்கி ஒவ்வொருத்துறை சம்பந்தப்பட்ட வீடியோ கோப்புகளை காட்டி நம் ஆங்கில அறிவை வளர்க் கிறது. ஆங்கிலம் கற்றுகொள்ள விரும்பும் நபர்கள் முதல் தொடர்ச்சியாக ஆங்கிலம் பேச விரும்பும் அனை வருக்கும் இந்ததளம் பயனுள்ள தாக இருக்கும்.★




**இளஞ்சுடரின் முதலாவது அங்கத்தவர்**



பெயர்: சி. இராம் கீர்த்தனன்
முகவரி: 25/7, 1ஆம் ஒழுங்கை,
மக்கோ வீதி, இலிங்க
நகர், திருகோணமலை.

## காகமும் வடையும்

(கதைப்பாடல்)


வடை சுட்டு வடை சுட்டு வந்தாள்- அந்த
வயதானவள் வழியே வரும்போது
இடையிலே ஒரு வடை தன்னை- காகம்
எடுத்துமே வந்தோர் மரத்தில் இருக்க,

பசியால் அலைந்ததோர் நரியும்- வந்து
பரிதாபமாய் மேலே காக்கையைப் பார்த்து
இசையோடு பாடுவாயாமே- எங்கே
இப்போதோர் பாட்டினைப் பாடென்று கேட்க

காகா என்றே காகம் கத்த- வடை
காகத்தை விட்டே நரியிடம் போக
ஆகா பறிபோயிற்றந்தோ- நரி
அதனை எடுத்துப் போய்ச் சாப்பிட்டதங்கே!

ஆரியக் கூத்தாடினாலும்- பிறர்
ஆயிரம் சொல்லி மயக்கிய போதும்
காரியத்தில் கண்ணை வைப்பாய்- இந்தக்
கதையினாலே ஒரு பாடம் படிப்பாய்! (வடை)

## நேர்கோட்டு வழியே பயணிக்கும் திமிங்கலம்



ஹம்ப்பெக் எனப்படும் திமிங்கில வகைகள் கடலில் இடம் பெயர்வதற்காக சுமார் 10 ஆயிரம் மைல்கள் வரை வழி தவறாமல் நேர்கோட்டு வழியில் பயணிக்கின்றன. அதற்குக் காரணம் அவை சூரிய, சந்திர மற்றும் நட்சத்திரங்களின் நிலைகளைப் பின்பற்றுவதே என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இது தொடர்பாக ஆராய்ச்சி நடத்திய விஞ்ஞானிகளுக்குப் பல சுவாரஸ்யமான தகவல்கள் கிடைத்துள்ளன.

விஞ்ஞானிகளின் கருத்தின்படி, இவ்வகைத் திமிங்கிலங்கள் சூரியனின் நிலை, புவியின் ஈர்ப்புச் சக்தி மற்றும் நட்சத்திரங்களின் உதவியுடனேயே சுமார் 10 ஆயிரம் மைல்கள் வரை மிகத்துல்லியமாகப் பயணித்து இடம்பெயர்வதாகத் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவை தமது நேர்கோட்டுப் பாதையில் இருந்து 5 பாகைக்கும் குறைவாகவே வளைவதாகவும் சீரற்றகால நிலை மற்றும் கடலில் ஏற்படும் மாற்றங்களிலும் அதன் பாதையிலிருந்து விலகுவதில்லை என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.★

## இளஞ்சுடர் அங்கத்தவராகுங்கள்

மாணவர்களே இது உங் கள் பக்கம். இதில் உங் கள் ஆக்கங்களை வெளியிடு வதன் மூலம் உங்கள் திறமை களை வெளிப்படுத்துங்கள். பக்கத்தில் உள்ள படிவங்கள் மூன்றை நிரப்பி உங்கள் பாஸ்போட் அளவான புகைப் படத்துடன் இளஞ்சுடருக்கு அனுப்பி வையுங்கள். பதிவு செய்யப்படும் அங்கத்தவரின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## இளஞ்சுடர் விண்ணப்பப் படிவம்

பெயர்:- ..................................................
பிறந்த திகதி:-..........................................
வகுப்பு:-....................................
பாடசாலை:-.......................................
சொந்த முகவரி:-..........................................
கையொப்பம்:-...............................................

மேற்படி மாணவர் எங்கள் பாடசாலையில் கல்வி கற்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

அதிபர்/ ஆசிரியர்

**அனுப்பவேண்டிய முகவரி**
'இளஞ்சுடர்', சுடர் ஒளி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

.............................
கையொப்பம்

# ஒவ்வாமையின் ஒருவகை வெளிப்பாடே ஆஸ்த்மா



**கேள்வி:** வயது41. பெண். எனக்கு முட்டு வருத்தம் (Asthma) இருக்கிறது. கடந்த மூன்று வருடங்களாக அது தீவிரமாக, அடிக்கடி ஏற்படுகிறது. (Ventolin) வென்தொலின் குளிசை பாவிக்கிறேன். இருந்தும் முட்டு வரும் வேளைகளில் மிகுந்த சிரமப்படுகிறேன். இதிலிருந்து நிவாரணம் பெற மருத்துவ ஆலோசனை தருவீர்களா?

**பதில்:**Asthma பற்றி சில வாரங்களுக்கு முன்பும் இப்பகுதியில் விளக்கம் அளித்திருந்தேன். ஆனாலும் இப்போதெல்லாம் நிறையப்பேர் ஆஸ்த்மா (Asthma) வினால் அவஸ்தைப்படுவதாலும், அதன் சிகிச்சை முறை தொடர்பில் பல தரப்பட்ட கருத்துக்கள், நிலவி வருவதாலும் உங்கள் கேள்விக்கான பதிலை மீண்டுமொரு முறை வேறு கோணத்தில் ஆராய்வோம்.

ஆஸ்த்மா என்பது ஒரு Autoimmune disease. ஒருவனுக்கு ஆஸ்த்மா ஏற்படக் காரணியாக இருக்கும் விடயம் வேறொருவருக்கு அப்படி அமையாது. ஒருவருக்கு சாதாரணமான ஒரு காரணம் இன்னொருவருக்கு ஆஸ்த்மாவாக காரணமாகிவிடும். சாதாரண வார்த்தைகளில் சொல்வ தாயின் அல்லது உங்களுக்கு விளங்கிக் கொள்ள வசதியாக குறிப்பிடுவதாயின் ஆஸ்த்மாவும் ஒருவகை ஒவ்வாமையின் Allergy வெளிப்பாடேயாகும். இது சாதாரணமாக தும்மல் மூக்கடைப்புடன் ஆரம்பிக்கும். சிலருக்கு கண்களில் கடியும் ஏற்படலாம். வேறு சிலருக்கு உடற்பாகங்களில் குறிப்பாக கைகளில் கடி ஏற்படும். கத்தரிக்காய், தக்காளி, இறால், நண்டு, அன்னாசி போன்றவற்றை உண்ணும்போது இத்தகைய நிலைகளை எதிர் கொள்ள வேண்டி ஏற்படலாம்.

மேலும் அனேகம் பேருக்கு தூசி, குளிர்ந்த காலநிலை, பனி போன்றவற்றோடு சிலருக்கு அதிகளவு வியர்வை ஏற்படும் சமயங்களில் ஆஸ்த்மா தொல்லையைக் கொடுக்கும். எமக்கு எப்படியான காரணத்தால் ஏற்படுகிறதென அனுபவத்தின் உய்த்துணர்ந்து அத்தகைய நிலைகளை தவிர்த்துக் கொள்வதன் மூலம் ஆஸ்த்மா ஏற்படுவதைத் தடுத்துவிட முடியும்.

இயலாத பட்சத்தில் பலவகை மருந்துகள் தற்காலத்தில் பாவனைக்கு வந்துள்ளன. குறிப்பாக தும்மல், கண்கடி இருந்தால் Periactin என்னும் மருந்தையோ அன்றேல் Sodium Chromoglycate எனும் மருந்தையோ பாவிக்கலாம் (வராமல் தடுப்பதற்கு). இதில் Sodium Chromoglycate inhaler ஆக உண்டு.

Ventolin குளிசை போன்ற பல மருந்துகள் இருந்தாலும், அவற்றின் பக்க விளைவுகள் காரணமாக அவற்றின் பாவனையை (குளிசையாக) மருத்துவ உலகம் மட்டுப்படுத்தி வருகின்றது. ஆனால் Inbaler எனும் முறை மூலம் நல்லபயனுள்ள சிகிச்சை அளிக்க முடியும். இதனைச் சாதாரண பொதுமக்கள் 'பம்ப்' (Pump) என அழைக்கிறார்கள்.

எம்மிற் பலர் இது ஆபத்தான முறையெனவும், இப்பாவனை வருத்தத்தைக் கூட்டி விடும் எனவும் தவறாகக் கற்பனை செய்து வைத்துள்ளனர். உண்மையில் நோ ஏற்பட்டால் தைலம் தடவுவது போல், ஆஸ்த்மா ஏற்படக் காரணமான மூச்சுக்குழாய் மற்றும் வாதனாளிக் குழாய்ச் சுவர்களில் நேரடியாக மருந்திடுவதன் மூலம் இந்தச் சிகிச்சை முறை பலனளிக்கிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உள்ளிழுக்கப்படும் மருந்தானது. உடலினுள் எடுக்கப்படுவதில்லை. (Only local application) அதனால் பக்க விளைவுகள் மிகமிகக் குறைவு. அவற்றில் இரண்டு வகை உண்டு.

Beclomethazone எனப்படுவது ஒன்று. Ventolin எனப்படுவது மற்றொன்று. Beclom ethazone ஆஸ்த்மா நோய்ப் பாதிப்பு வராமல் தடுப்பதற்கு உபயோகப்படுகிறது. எனவே ஆஸ்த்மா நோய் உள்ளவர்கள் இதனைத் தினமும் உபயோகப்படுத்த வேண்டும் Asthma attach வந்தால் அந்த வேளைகளில் Ventolin பயன்படுத்த வேண்டும்.

தாங்கள் Ventolin குளிசை பாவிப்பதாகவே குறிப்பிட்டுள்ளீர்கள். எனவே வைத்தியரிடம் ஆலோசித்து Beelonethazoue inhaler பாவிப்பது பற்றித் தீர்மானியுங்கள்.

இறுதியாக ஒரு ஆலோசனை, All wheezen are not asthmateis என்று சொல்லுவோம். எனவே தகுந்த மருத்துவ ஆலோசனை பெற்று தங்களுக்கு Tuberculosis இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஆஸ்த்மா நோயைப் பூரணமாக இல்லாமல் செய்யமுடியாது. ஆனால் கட்டுப்படுத்த முடியும். சில வேளைகளில் தானாகவே வலுவிழந்து இருந்து பின் மீண்டும் தோன்றலாம். அல்லது இன் னொரு வடிவமான 'எக்ஸிமா' வாக வெளிப் படலாம். எனவே விழிப்பாக இருங்கள். சரியான சிகிச்சை தொடர்ந்து எடுங்கள். ✱

**இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.**

**இலவச மருத்துவ ஆலோசனை**

**I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,**
**361,கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**II.) சுடர்ஒளி,**
**85,ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு-14.**

## புற்றுநோய்க்கு மருந்து திராட்சை



'கடவுளின்கனி' என்று செல்லமாக அழைக்கப்படும் பெருமையுடையது கொடி முந்திரி எனப்படும் திராட்சைப்பழம். திராட்சைப் பழத்தில் எண்ணற்ற சத்துக்கள் அடங்கியுள்ளன.

ஊட்டச்சத்து நிறைந்த பழங்களுள் ஒன்றான திராட்சையில் விற்றமின்கள் பி1, பி2, பி6, பி12 மற்றும் விற்றமின் சி சத்துக்கள் உள்ளன. இவை தவிர பொஸ்பரஸ், இரும்புச் சத்தும் அதிக அளவில் காணப்படுகின்றன.

இப்பழத்தை சாப்பிட்டால் பித்தம் தணியும், உடல் வறட்சியை நீக்கும். இரத்தத்தை சுத்தப்படுத்தி புதிய ரத்தத்தை ஊறவைக்கும் ஆற்றல் இதற்கு உண்டு. நரம்புகளுக்கு வலுவூட்டுகிறது. அதனால் மூளையும், இதயமும் வலிமை பெறும்.

கல்லீரலின் பலவீனத்தால் உணவு செரிமானமாகாத தொல்லையை நீக்கும். சிறுகுழந்தைகளுக்கு பல்முளைக்கும் காலங்களில் மலச்சிக்கல் உண்டாகும். ஒரு சில குழந்தைகளுக்கு வலிப்பு நோயும், உண்டாகும். இதற்கு திராட்சைச் சாறு அருமருந்தாகிறது.

ஜலதோஷத்தினால் ஏற்படும் நீர்வடிதல், இருமல், தும்மல் போன்றவற்றை திராட்சை பழச்சாறு குணப்படுத்துகிறது. மார்புச்சளியை போக்குகிறது. நுரையீரலைப் பாதுகாக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.

ரத்த சோகைக்கும் காமாலை நோய்க்கும் கூட இது சிறந்த மருந்தாகிறது. குடல் மற்றும் உடல்புண்ணையும் ஆற்றும் தன்மை கொண்டது. களைப்பைப் போக்கி ஆழ்ந்த உறக்கத்தைத் தரும். அஜீரணம், பசியின்மை, வயிறு உப்புதல் போன்றவற்றுக்கு திராட்சை சிறந்த மருந்து.


சிறிய அளவில் எடுத்துக் கொள்ளப்படும் சிவப்பு வையினுக்கு புற்றுநோயை எதிர்க்கும் ஆற்றலும், இதயத்தை வலுப்படுத்தும் ஆற்றலும் உண்டு. திராட்சைப் பழத்தின் தோலில் இருந்து பெறப்படும் resveratrol என்னும் வேதிப்பொருள் சிவப்பு வைனில் அடர்ந்து காணப்படுகிறது. நாளும் சிறிதளவு சிவப்பு வையின் சாப்பிடுவதை வல்லுநர்கள் ஆதரிக்கிறார்கள். அதிகம் சளிப்பிடித்திருக்கும் போதும், ஆஸ்த்மா நோயுள்ளவர்களும், வாத உடம்புக்குள்ளானவர்களும் அதிக அளவில் திராட்சைப் பழத்தை சாப்பிடக் கூடாது என்பது மருத்துவர்களின் அறிவுரை. ★

## கோப்பி அருந்துங்கள்

கோப்பி குடிப்பதன் மூலம் பெண்களுக்கு தீவிர மார்புப் புற்றுநோயை கணிசமான அளவுக்குத் தடுத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று இது சம்பந்தமாக நடத்தப்பட்ட ஆய்வுகளில் யோசனை தெரிவிக் கப்பட்டுள்ளது.

சூடானபானங்களை வழமையாக அருந்துகின்றவர்களுக்கு இந்த நோயின் பாதிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. குறிப்பாக ஒரு நாளைக்கு ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் கோப்பி அருந்துவது சிறந்தது. மார்புப் புற்றுநோய் பெரும்பாலும் மருந்துகளால் குணப்படுத்த முடியாதது.

கெமோதெரபி(chemotherapy) சிகிச்சைதான் அதற்குரிய மிகச் சிறந்த தெரிவு. கோப்பி அருந்தும் பெண்கள் அந்தப் பழக்கம் அற்ற பெண்களை விட மிகவும் குறைந்த அளவிலேயே மார்புப்புற்றுநோய்க்கு ஆளாகின்றனர் என்று ஸ்டொக்ஹோமின் கரோலின்ஸ்கா நிறுவன ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.




இதில் 6000 பெண்கள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இதில் ஐந்து கப் அல்லது அதற்கு மேற்பட்ட அளவு கோப்பி அருந்தும் பெண்களுக்கு மார்புப் புற்று நோய் ஏற்படும் ஆபத்து 57 சதவீதம் குறைவாகவே இருந்தது. ★




## பனி விடுதி

சுக்கஜ்ஜர்வியில் ஒரு ஹோட்டல் முழுக்க முழுக்க பனிக்கட்டிகளைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இது ஆர்டிக் கடல் பகுதியிலிருந்து 200 கி.மீ தொலைவிலுள்ள லாப்லாந்தில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆற்றங்கரை அருகில் இருப்பதால் குளிர்மையான ஆர்க்டிக் கால நிலை நிலவுகிறது.

ஒவ்வொரு குளிர்காலத்தின் போதும் இவ்வாறான பனிக்கட்டிகளாலான விடுதிகள் அமைக்கப்படுவது வழமை.





## கடலுக்கடியிலும்...

இந்த நட்சத்திர அந்தஸ்து கொண்ட ஹைடி ரோபாலிஸ் ஹோட்டல் துபாயில் உள்ளது. இது உலகின் முதன் முதலில் கடலுக்கு அடியில் உருவக்கப்பட்டதாகும். சுமார் 300 ஹெக்டேயர் பரப்பும் 66 அடி உயரமும் கொண்டது. 2006 ஆம் ஆண்டு இதன் கட்டடப்பணிகள் தொடங்கப்பட்டன.

ஹைடிரோபாலிஸசை வடிவமைத்தவர் Joachim Hauser ஆவார். ஹைடிரோபாலிஸ்ன் மேற்ப்பகுதியில் திரையரங்கம் மற்றும் உணவகமும் உள்ளது.



## அருங் கடலகம்


உலகின் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்வது அருங்காட்சியகங்கள் ஆகும். ஏனெனில் அங்குதான் தமது மூதாதையரின் அரும்பொருட் செல்வங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவில் அதற்கும் ஒரு புது முயற்சியைத் தொடங்கியிருக்கிறார்கள். காண்கின்னில் கடலுக்கடியில் அமைக்கப்பட்ட இந்த அருங்காட்சியகம் மெக்சிகோவின் வட பகுதியில் அமைந்துள்ளது.

இதன் வடிவம் எண் 7 போல காணப்படுகிறது. காண்கின் மெக்சிகோவின் மிகப்பெரிய சுற்றுலா பகுதியாகும் இங்கு 146 ஹோட்டல்களும் அதில் 28,808 அறைகளும் உள்ளன.



## வீட்டுக் குடை


பாறைகளில் மக்கள் வீடுகள் அமைத்து வாழ்ந்து வாருகிறார்கள். என்ன உங்களால் நம்ப முடியவில்லையா! உண்மைதான். கொரிமி என்றழைக்கப்படும் பாறை நகரம் துருக்கியில் உள்ளது. கொரிமி துருக்கியின் வரலாற்று பாரம்பரியமிக்க இடமாகத் திகழ்கிறது. துருக்கிய மக்களுக்குத் தமது பண்டைய வாழ்க்கை முறைகளை விட்டுவர விருப்பமில்லையோ!



## வெயில் சக்தி

சுடும் வெயிலில் சுற்றுப்புரச் சூழலில் நேரத்தை செலவிடுபவர்களுக்கு ஒரு புதிய கண்டுபிடிப்பு வந்திருக்கிறது. சூரிய சக்தி (சோலார்) நாற்காலி சூரிய ஒளியைப் பெற்றுக்கொள்ள உதவியாகின்றது.

சூரிய ஒளியில் அமர்ந்துகொண்டு உங்கள் மின்னணுவியல் சாதனங்களை மின்னூட்டம் (சார்ஜ்) செய்துகொள்ளவும் முடியும். இதனைக்கொண்டு மடிக்கணனி போன்றவற்றைக் கூட சார்ஜ் ஏற்றிக்கொள்ளலாம்




## மணற்சிற்பம்


பண்டைய காலத்தில் கற்கலில் மட்டுமே சிற்பங்களைச் செதுக்கினார். தற்காலத்தில் பனிக் கட்டிகள், மணல் போன்றவற்றிலும் சிற்பங்கள் செதுக்குவதனை காணமுடிகிறது. அண்மையில் மணலினால் ஆக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான சிற்பங்களை இணையத் தளம் ஒன்றில் வெளியாகியிருந்தது.












## தலை கோலம்

முன்பெல்லாம் தலை முடி நரைத்தால் அதற்குக் கறுப்பு நிற சாயம் (dye) பூசுவதை நாம் அறிவோம். ஆனால் தற்போது விரும்பிய வர்ணங்களில் தலை முடிக்கு வண்ணம் தீட்டிக் கொள்ள முடியும். அதற்கான அழகு சாதனப் பொருட்களும் விதம் விதமாக நாளாந்தம் உற்பத்தியாகிக்கொண்டே போகின்றது. இந்த அழகுபடுத்தலில் அபாயங்கள் இருப்பினும் யாரும் அதைக் கைவிடுவதாக இல்லை.





# கனவுகளை விழுங்கிய கிணறு

**சுபா**- குண்டுகள், ரவைகள் மத்தியிலும் காப்பாற்றப்பட்டவள். இறுதி யுத்தத்துக்குள் அகப்பட்ட மக்கள் எமக்கு எமகண்டம் முள்ளிவாய்க்காலில் முடிந்துவிட்டது என்று அடிக்கடி கூறுவார்கள். அதுபோலத்தான் இவளுக்கும் எமகண்டம் கடந்துவிட்டதாகக் கருதினர். ஆனால் அப்படி நடக்கவில்லை. எதிர்காலக்கனவுடன் இருந்த அந்த சிறுமியைப் பின்தொடர்ந்திருக்கிறது மரணம். அடிப்படைவசதிகள் பற்றியும், அபிவிருத்திபற்றியும் இல்லாததைப் புனையும் ஆட்சியாளர்களது அலட்சியத்தாலேயே இந்த மரணம் சம்பவித்திருக்கிறது.

கடந்த 21ஆம் திகதி வவுனியா கந்தன்குளம் கிராமத்தைச் சேர்ந்த பத்து வயதுச் சிறுமியான இராஜா சுபா குடிநீர் பெறுவதற்காக இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பூவரசம்குளம் கிராமத்துக்குச் சென்று கிணற்றில் குடிநீரை அள்ளியபோது தவறி கிணற்றில் விழுந்து பரிதாபமாக மரணமடைந்தாள்.

20 வருடங்களின் பின்னர் கந்தன்குளம் கிராமத்தில் கடந்த மாதம் மீள்குடியேற்றம் இடம்பெற்றது. 45 வரையான குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் குடியேறினர். இவர்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படாத நிலையில் கோடை காலத்தின் ஆரம்பம் அவர்களை குடிதண்ணீருக்காக அலைய வைத்திருக்கின்றது.

தொழில்வாய்ப்புக்கள் எவையும் இல்லை, இருப்பிட வசதியில்லை, பாடசாலை,மருத்துவமனை,சந்தை போன்ற அடிப்படைக் கட்டுமானங்களும் கேள்விக் குறியாகவே தென்படுகின்றன. குறிப்பாக மனித வாழ்வுக்கு ஒவ்வாத இடமாகவே இந்தக் கிராமம் தென்படுகிறது.

**செந்தில்குமார்**

அந்தச் சிறுமியின் கனவுகள் கிணற்றில் சிதைந்து போக, எஞ்சியிருக்கும் மக்கள் இன்னமும் குடிதண்ணீருக்காக அலைந்து கொண்டே இருக்கின்றனர். இவர்கள் தமது தாகத்தைத் தீர்க்க இன்னும் எத்தனை உயிர்களைப் பலிகொடுக்க வேண்டுமோ? என்று ஏங்குகின்றனர்.

கடமைக்காகக் காரியத்தை நிறைவேற்றி வெளியுலகுக்கு எல்லாம் சுமுகமாக முடிந்து விட்டது என்று காட்ட எண்ணும் அரசு, தொடரும் இறப்புக்களுக்குக் காரணமானவற்றை கண்டும் காணாமலுமே இருக்கின்றது.

வன்னியில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு இரண்டு வருடங்கள் எட்டும் தறுவாயில் அங்கு எந்தவொரு மாற்றத்தையும் இனங்காணமுடியாதுள்ளது. சில வசதி படைத்த மக்கள் மட்டும் தம்மால் இயன்ற பலத்துடன் வாழ்வியல் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு வாழ்கின்றனர். ஏனைய மக்களுக்கு விடியும் ஒவ்வொரு பொழுதும் போராட்டமாகவே புலர்கின்றது. அவர்களின் உழைப்பெல்லாம் அடிப்படைக் கட்டுமானத்துக்குக் கூடப் போதாது. வெறும் உணவுத் தேவையுடன் நிறைவடைந்து போக எஞ்சியவற்றுக்கு எவரையோ எதிர்பார்த்தபடியே காத்திருக்கின்றனர்.

இப்போது அவர்களுக்கு அரசியல் தென்படுவதில்லை. வெறும் வாழ்க்கைக்கான போராட்டத்தையே தொடங்கியுள்ளனர் வன்னி மக்கள்.

இலங்கைக்கு எதிராக,அரசுக்கு எதிராக எவராவது தப்புக் கதை கூறிவிட்டால்,குற்றம் சுமத்தி விட்டால், அதனை விலக்கிக் கொள்ள, மாற்றிநிறுவ விரைந்து செயற்படும் அரச தரப்பினர், மக்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளைத் தீர்ப்பது குறித்து எந்த முயற்சியும் எடுப்பதில்லை.

வன்னிமக்களைப் பயன்படுத்தியே ஐ.நா அறிக்கையை பொய்ப்பிக்க முயலும் அரசு, அவர்களது வாழ்வியலுக்கான அடிப்படைகளை எற்படுத்திக் கொடுக்க வேண்டும். எனினும் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற விடயங்களில் அரசு அக்கறை செலுத்துவதே இல்லை.

இறுதி யுத்தத்தில் தங்கள் உறவுகளை இழந்தவர்கள்,சொத்துக்களை இழந்தவர்கள், கனவுகளை இழந்தவர்கள், துன்பங்களுடன் அகதி முகாம்களுக்குள் நுழைந்தனர். அப்போதும் துரத்தியது துன்பம். எஞ்சியிருந்த உறவுகளில் சிலர் தடுப்பு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இப்போது நிலைகுலைந்து போனது ஒவ்வொரு குடும்பமும்.

மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டு, படிப்படியாக மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டபோது அவர்களை மேலும் பிரச்சினைகள் சூழ்ந்துகொண்டன. இயற்கையும் அவர்களைத் துரத்தத் தொடங்கியது. தறப்பாள் கொட்டில்கள் வெள்ளத்தில் நிலைபெயர்ந்து போக மீண்டும் மக்கள் அனாதைகளாக்கப்பட்டனர். இப்போது கொளுத்தும் வெயில். சுபா யாருக்கும் துரோகம் செய்யவில்லை. இவள் பள்ளிக் குழந்தை. இப்போது கிணற்றில் மாண்டுவிட்டாள். இது மட்டும்தான் செய்தியல்ல, அரசுக்கும்; அவர்களைச் சார்ந்தவர்களுக்கும்; ஏன் தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுக்கக்கூடியவர்களுக்கும். சுபா சொல்லிவிட்டுச்சென்ற செய்தி - ''என்னைப் போல இன்னும் பலர் மாண்டு போகப் போகிறார்கள். அவர்களையாவது உங்கள் மனச்சாட்சியின் பக்கம் நின்று காப்பாற்றுங்கள்'' என்பதுதான்.

பேச்சளவில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட பின்னர் தான் மீள்குடியேற்றம் நடைபெறுகின்றது என்ற அரசின் வாக்குறுதி பொய்த்து விட்டது. அதுமட்டுமல்ல வன்னிப்பகுதியில் பெரும்பாலான இடங்களில் மீள்குடியேற்றம் பூர்த்தியாகிவிட்டது. குறிப்பாக வவுனியா,கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்கள் தவிர எல்லா இடங்களிலும் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுவிட்டனர் என அறிக்கையிடும் அரச சேவை நிர்வாகிகளுக்கு சுபாவின் இறப்புச்செய்தி, 'நீங்கள் எங்களை நடுத்தெருவில் விட்டுள்ளீர்கள். நாங்கள் நாளுக்கு நாள் செத்துக் கொண்டிருக்கிறோம்' என்பதுதான்.

சுபாவின் மரணத்தை ஒரு சாதாரண சிறுமியின் மரணமாகப் பார்க்க முடியாது. தமிழ்ச் சமூகம் இப்போது எதிர்நோக்கும் வாழ்வியல் நெருக்கடியுடன் கூடிய, மனித வர்க்கத்துக்கு எதிரான பழிதீர்ப்பாகவே பார்க்கவேண்டும். இந்த வரிகள் நாக்கில் உறைத்தால் இனியும் ஏற்படக்கூடிய சுபாபோன்ற சிறுமியரின், தமிழ் மக்களின் உயிரைப் பாதுகாக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லாத சந்தர்ப்பத்தில் குடும்பங்கள் கூட ஒன்றாக இணைந்து தற்கொலை செய்யும் நிலை ஏற்படலாம். அதன்பின் ஓடி ஒளிப்பதில் பயனேதும் கிட்டாது. மக்களுக்காகவே அபிவிருத்தி, மக்களுக்காகவே அரசு, மக்களுக்காகவே நாடு. மனித வாழ்வுக்கே உழைப்பு. இந்த எல்லைகள் எங்களையும் ஏற்குமா?✸

# புதியவகை நுணுக்குக் காட்டி

எமது கண்களுக்குப் புலப்படாத விடயங்களைத் தெளிவாகக் காணக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதானவை. அவ்வாறான ஓர் வாய்ப்பை சுவிட்சர்லாந்து ஆய்வாளர் ஒருவர் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். சுவிட்சர்லாந்து ஆய்வாளர் 'மார்டின் ஒயிக்கிரிலி'னால் கண்டுபிடிக்கப்பட்ட இலத்திரனியல் நுணுக்குக்காட்டிக் கருவியின் ஊடாக நமது கண்களுக்குத் தெரியாத மகரந்தப் பொடிகளைத் தெளிவாகப் பார்க்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மைக்ரோநட் என்னும் தொழில்நுட்பத்தின் உதவியுடன் மிகத் துல்லியமாக வளியில் காணப்படும் துகள்களைப் பார்க்க முடியும்.

நாம் அனைவருமே காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருக்கின்றோம், காய்ச்சல் நோயை நமக்கு ஏற்படுத்தும் பிரதான எதிரிகளை நாம் நேரில் பார்த்தது கிடையாது.

எனினும், தற்போது அந்தச் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது, எம்மைத் தாக்கி எமக்குக் காய்ச்சலை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளை நாம் கண்ணால் பார்க்க முடியும்.

மலர் இதழ்களுக்கு இடையில் காணப்படும் மகரந்தப் பொடிகள் மிகவும் துல்லியமான முறையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

மகரந்தப் பொடிகள் அல்லது தூசிகள் மிகவும் மோசமானவை. தூசிகளில் காணப்படும் நுண்ணங்கிகள் எமது உடலுக்குள் புகுந்து கொள்வதனால் ஒவ்வாமை, சளித்தொல்லை, உடல் வீக்கங்கள் ஏற்படு வதற்கு ஏதுவாகின்றன. இந்த நோய்கள் சில வேளைகளில் உயிராபத்தைக் கூட ஏற்படுத்தும்.

ஸ்கேனிங் முறையிலான இந்த நுணுக்குக் காட்டி படங்கள் வண்ணமயமான கோலங்களைக் காட்டி நிற்கின்றன.

இதற்கு முன்னர் எவரும் பார்த்திராத நிறங்களில் மகரந்தப் பொடிகளை இந்த நுணுக்குக்காட்டி தொழில்நுட்பம் வெளிக்கொணர்ந்துள்ளது.✸



# பெருகும் ஆதரவு

பாகிஸ்தான் அணியின் புதிய தலைவரான மிஸ்பா உல் ஹக்குக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபையிடமிருந்தும், கிரிக்கெட் வீரர்களிடமிருந்தும் ஆதரவு அலை தேடிவரத் தொடங்கியுள்ளது. ஆரம்பத்தில் மேற்கிந்தியாவுடனான டெஸ்ட் போட்டியில் அணித் தலைவராகச் செயற்பட்ட மிஸ்பா, முதற்போட்டியில் தோற்றிருந்தாலும் இரண்டாவது போட்டியில் அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றிருந்தார். இந்நிலையில் அணியின் உள்விவகாரங்களில் பயிற்சியாளர் வக்கார்யூனிஸ் தலையிடுவதாக அப்ரிடி குற்றம் சாட்டினார். இதனை அடுத்து ஒரு நாள் போட்டிக்கான தலைமைப் பொறுப்பிலிருந்து அப்ரிடி நீக்கப்பட்டு அந்தப் பொறுப்பும் மிஸ்பாவுக்குக் கிடைத்தது.

''எந்த விஷயத்திலும் அவசரப்படாது நிதானமாக முடிவை எடுத்தல், எல்லா வீரர்களோடும் நட்புப் பாராட்டுதல், மெருகேறிவரும் துடுப்பாட்டத் திறன் என்பனவெல்லாம் கொண்டுள்ள மிஸ்பா உண்மையிலேயே மிகச் சிறந்த அணித் தலைவர் தான்'' என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர்கள் கருத்துக் கூறியுள்ளனர். ✱

# கின்னஸில் கிப்ஸன்



பார்னி கிப்ஸன் என்ற 15 வயதுச் சிறுவன் இங்கிலாந்தில் முதல் தர கிரிக்கெட்டில் விளையாடுவதற்குத் தகுதி பெற்றுள்ளான். இதனால் இளம் வயதிலேயே முதற்தரப் போட்டிகளில் இடம்பிடித்த வீரர் என்ற கின்னஸ் சாதனையை கிப்ஸன் படைத்துள்ளான். விக்கெட் காப்பாளராகப் பாடசாலை மட்டப் போட்டிகளில் கலக்கிய கிப்ஸன், பிராந்திய அணிகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட வயதெல்லை உடையோருக்கான போட்டிகளிலும் பங்கேற்றார். இப்போட்டிகளில் எதிரணி வீரர்களின் விக்கெட்டுக்களை வீழ்த்துவதில் கிப்ஸனின் திறமை வெளிப்பட்டதால் இப்போது அவர் ஜோர்க்ஸயர் அணிக்காக முதற்தரப் போட்டிக்குத் தேர்வாகியுள்ளார்.

மார்ச் மாதம் 31 ஆம் திகதி 15 வயதையடைந்த கிப்ஸன், சார்ள்ஸ் யங்க் என்பவரின் 144 வருடச் சாதனையை முறியடித்துள்ளான். சார்ள்ஸ் யங்க் 16 வயதில் தான் முதற்தரப் போட்டியில் பங்கேற்றார்.

கிப்ஸனின் ஜோர்க்ஸயர் அணியின் பயிற்றுவிப்பாளர் தெரிவிக்கையில், 14 வயதுக்கு கீழ்ப்பட்ட அணியிலும் கிப்ஸன் சிறப்பாக விளையாடியுள்ளார். நாம் எமது சிறு வயது வீரனுக்குச் சந்தர்ப்பம் வழங்க ஆவலாய் உள்ளோம் - என்று கூறினார். ✱




# நேரம் சரியில்லை

சேர்பியாவின் டென்னிஸ் புயல் அன்னா இவானோவிக் பிரெஞ்ச் ஓப்பின் முன்னாள் சம்பியன். தன்னுடைய அசரடிக்கும் திறமை யாலும் அழகாலும் ரசிகர்களை கவர்ந்தவர் இவர். ஆனால் அம்மணிக்கு இம்முறை நேரம் சரியில்லை. 2011க்கான பிரெஞ்ச் ஓப்பின் போட்டிகளில் பங்கேற்ற இவானோவிக் முதல் சுற்றிலேயே மண் கௌவி தொடரிலிருந்தே வெளியேறிவிட்டார். ஜொகனா லார்சன் என்ற வீராங்கனையிடம் 7:6 என்ற ரீதியில் முதல் செற்றைக் கோட்டைவிட்ட இவானோவிக் இரண்டாவது சுற்றில் சூறாவளியாக மாறினார். 0:6 என்ற ரீதியில் இரண்டாவது செற்றை தன்வசமாக்கினார். ஆனால் இறுதிச் செற்றில் மீண்டும் ஜொகனாவின் கை ஓங்கியதால் வேறுவழியின்றி இவானோவிக் தொடரி லிருந்து முதல் சுற்றிலேயே வெளியேறியே செல்லும் பரிதாபம் ஏற்பட்டுவிட்டது. ✱

# இரண்டாவது ஓய்வு

போர்முலா- 1 கார் பந்தயங்கள் என்றாலே எல்லோருக்கும் ஞாபகத்துக்கு வருபவர் மைக்கல் ஷுமேக்கர்தான். தன்னுடைய அசாத்தியமான கார் ஓட்டுதலால் ஏழு முறை போர்முலா- 1 கார் பந்தயங்களில் சம்பியனானவர். இவரது அந்தச் சாதனை இன்னமும் முறியடிக்கப்படாமல் இருக்கின்றது. கார்ப் பந்தயங்களில் இருந்து ஓய்வு பெற்றிருந்த ஷுமேக்கர் மீண்டும் 2007 ஆம் ஆண்டு பந்தயங்களில் கலந்து கொள்ள ஆரம்பித்தார். எனினும் முன்னரைப்போல அவரால் இலகு வான வெற்றிகளைப் பெற முடியவில்லை. எனவே அவர் தனது நிரந்தர ஓய்வு பெறுவதற்கான விருப்பத்தை அறிவித்துள்ளார்.

"இளைய தலைமுறையினரின் திறமையோடு என்னால் போட்டியிட முடியாது. அவர் களுக்கு வழிவிட்டு, அவர்களின் வெற்றிகளுக்கு களம் அமைப்பதே எங்களைப் போன்ற மூத்தவர்களின் பணியாக இருக்க வேண்டும். எனவேதான் மீண்டும் ஓய்வு பெறும் முடிவை எடுத்துள்ளேன்'' என்று ஷுமேக்கர் தெரிவித்துள்ளார். ★




# சுடர் ஒளி வாசகர்களுக்கு...

சுடர் ஒளி வாரமலருக்கு தமது ஆக்கங்களை அனுப்பிவைக்க விரும்பும் வாசகர்கள் கீழ்க் காணும் முகவரிகளுக்கு அனுப்பிவைக்கலாம்.

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**சுடர் ஒளி வாரமலர்**
**85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு - 14.**

தகுதியான ஆக்கங்கள் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரிக்கப்படும்.

# மாணவப் பத்திரிகையாளராக விரும்புகிறீர்களா?

நீங்கள் துடிதுடிப்புள்ள சமூக நோக்குக் கொண்டவரா?

உங்களுடைய சிந்தனைகளை எழுத்துவடிவில் மக்களிடம் கொண்டுசெல்ல உங்களுக்கு ஒரு அரிய வாய்ப்பைச் சுடரொளி வழங்கவுள்ளது. நீங்களும் சுடர் ஒளியின் மாணவப் பத்திரிகையாளர் குழுவில் இணைந்து கொள்ளுங்கள். உங்கள் பிரதேச பிரச்சினைகள் தொடர்பாக 200 சொற்களுக்கு உட்பட்ட ஆக்கம் ஒன்றை எழுதி உங்கள் சுயவிபரங்களுடன் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு எமக்கு அனுப்பிவையுங்கள். வயதெல்லை 16 தொடக்கம் 26 வரை. அனுப்பும் கடித உறையில் இடது பக்க மூலையில் சுடர் ஒளி மாணவப் பத்திரிகையாளர் எனத் தலைப்பிட்டு அனுப்பி வைக்கவேண்டும். (கிழக்கு மாகாண விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை உண்டு).

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

**சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,**
**561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# தொழிலாளர்களைக் காட்டிக் கொடுக்காதீர்கள்!



தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தத்தில் கையெ முத்திடும் தொழிற்சங்கங்கள் தமது பாட்டன் வீட்டுச் சொத்தையா பகிர்ந்து கொடுக்கப் போகிறார்கள்?

தமது கோரிக்கையை வெளிப்படையாகத் தெரி விக்காமல் இரகசியம் காப்பதாகக் கூறுவது வெறும் பம்மாத்து. உண்மையாகவே தொழிலாளர் மீது அக் கறை கொண்டவர்களாக இருந்தால் இவர்கள் ஏனைய தொழிற்சங்கங்களின் கருத்துகளை ஏற்காவிட்டா லும், அதில் நியாயம் இருக்கின்றதா என்பதையா வது கேட்டு அறிந்து தங்களின் கோரிக்கையை முன் வைத்திருக்கலாம்.

ஆனால் முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைப் பது போல், இந்த மூன்று தொழிற் சங்கங்களும் நாட கமாடுவதுதான் மக்கள் மத்தியில் பெரும் சந்தே கத்தை எழுப்பி உள்ளது.

கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பம் இடும் தொழிற் சங்கங்களான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழில் சங்கக் கூட்டுக் கமிட்டி ஆகிய மூன்றும் தமக் குள் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தி விட்டன. ஆனால் பயனுள்ள எந்தக் காரியமும் நடைபெறவில்லை. துரைமார் சம்மேளனம் இழுத்தடித்துக் கொண்டே செல்கின்றது.

இன்று முடிந்து விடும், நாளை முடித்து விடு வோம், நியாயமான சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுத்து விடுவோம். 15 ஆம் திகதிக்கு முன் சம் பள உயர்வு கிடைக்கும் என்று மீசையை முறுக்கிக் காட்டுகின்றார்களேயன்றி, உருப்படியாக எதையும் செய்துள்ளதாகத் தெரியவில்லை.

**இரா.புத்திரசிகாமணி**

நாம் பல தடவைகள் பேசி விட்டோம். நாங்கள் முன்வைத் துள்ள அடிப்படைச் சம்பள உயர்வுக் கோரிக்கை இதுதான். ஆனால் முதலா ளிமார் ஒப்புக் கொள்ள மறுக்கின்றனர். வாருங்கள், எல்லோரும் ஒன்றிணைந்து நியாயமான ஒரு கோரிக் கையை முன்வைப்போம் என்று வெளிப்படையா கக் கூறினால், மலையகத்தில் உள்ள அனைத்துத் தொழிற்சங்கங்களும் ஆதரவு வழங்கவும் ஒன்றி ணைந்து போராட்டம் நடத்தவும் தயாராக இருக்கின் றன.

ஆனால் கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் இந்த மூன்று தொழிற்சங்கங்களும் மூன்று விதமாகக் கருத்துக் கூறுகின்றன. அவையும் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டதாகவே காணப்படுகின்றன. கையொப்பம் இடும் உதிரிக் கட்சிகளான இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியும் பெயரளவில் மட்டும் தானா? தமது ஆலோசனைகளை முன்வைத்து வலியுறுத்தும் துணிவும் திறமையும் இல்லாதவையா? இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 'வீட்டோ' அதிகாரத்திற் குக் கட்டுப்பட்டு ஆமாம்சாமி போடும், ஆதரவு ஊது குழல்கள் தானா இவை என்றும் கேட்கத் தோன்றுகிறது.

இச்சேவைக்கான நியாயமும் ஆதரவும் உண்டு. சென்ற முறை இந்த இரண்டு பக்கவாத்தியங்க ளுக்கும் தெரியாமலே ஆறுமுகன் தொண்டமான் கையெழுத்தைப் போட்டுவிட்டார். பின்னர் இவர் கள் பின் கதவால் போய் சத்தம் போடாமல் ஒப்பம் வைத்தவர்கள் தான். கறுப்புப் பட்டியயைக் கட்டிக் கொண்டு ஒப்பம் வைத்ததாகவும் கூறிய கதையை மக்கள் மறந்து விடவில்லை.

இப்பொழுதாவது, இ.தொ.கா. கேட்டுள்ள சம்பள உயர்வு எவ்வளவு என்பது இந்த இரு சங்கங்களுக் கும் தெரியுமா? அதுவும் சந்தேகமே.

இன்று மற்றுமொரு வேடிக்கையும் இடம் பெறு கிறது. அதாவது ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுதது போல், 'சில தோட்டக் கம்பனிகள் பாரிய நட்டத்தில் இயங்குகின்றன. அவை எப்படிச் சம்பள உயர்வைக் கொடுக்க முடியும்?' என்று இந்த தொழிற் சங்கங்கள் ஒப்பாரி வைக்கின்றன.

இந்தக் கம்பனிகள் கோடி கோடியாக இலாபம் ஈட் டும் போது அதைத் தொழிலாளர்களிடம் கூறி பங்கு போட்டுக் கொடுத்தார்களா?

இப்பொழுது இந்த கம்பனிகளுக்காக தொழிற் சங்க கருங்காலிகள் கண்ணீர் வடிப்பது தான் வேத னையாக இருக்கின்றது. , இலாப மீட்டும் தோட்டக் கம்பனிகள் அனைத்தும் ஒரே குரலில் பேசுகின்றன. ஆனால் தொழிற்சங்கத் தலைவர்களை நீங்கள் மட் டும் கூட்டு ஒப்பந்தத்தில் ஒப்பம் இடாத சங்கங்கள் என்று ஓரம் கட்டுகீன்றீர்கள். அது உங்களுடைய சுய நலமும், நான் என்ற ஆணவமும், திமிரும் தானே?.

முதலாளிமார் ஒன்றுபட்டுச் செயல்படுவது போல் ஏன் தொழிற்சங்கங்களும் ஒன்றுபட முடியாது?.

இம்முறை உங்களுடைய சுய இலாபத்திற்காக அப்பாவிகளை, தோட்டத் தொழிலாளர்களைக் காட் டிக் கொடுத்து விடாதீர்கள். அவர்கள் வடிக்கும் கண் ணீர் உங்களை அழித்துவிடும்.✱

# வாசக நெஞ்சங்கள் பேசுகின்றன...



**இதயமுள்ளவர்களாய் வாழ்வோம்**

கடந்த மார்ச் 13 - 19 சுடர் ஒளி வாரமலரில் வெளி யாகியிருந்த பூச்சியப் படுகொலை என்ற கட்டுரையில் திவ்வியா பற்றிய தனது உள்ளக்குமுறல்களை கட்டுரையாளர் வெளிப்படுத்தியிருந்தார்.

அவளின் கள்ளம் கபடம் அற்ற அன்பு உள் ளத்தை பிரிந்து இழந்து எங்ஙனம் கட்டுரையாளர் வாடினாரோ,அதே போல் தான் நானும் இழந்து துடித்தேன். அவளின் சிரிப்பு, அன்பு கலந்த அந்த வார்த்தை, அவளின் கலையார்வம், துடிப்பான செயற்பாடு எல்லாம் என் உள்ளத்தில் நிலையாய் நின்று வாட்டுகின்றன அவளை O/L வகுப்பில் தமிழ்பாடம் கற்பித்த போது கண்டு கொண்டேன். அது மட்டுமல்ல அவளது குடும்பத்தினர் அனை வரும் எனது நீண்டகால உறவுகள். அவளின் பெரி யப்பாவின் பாடசாலை சகபாடி நான்.

அவளின் தாயின் அன்பையும், தந்தையின் உபசரிப்பையும், மதிப்புக் கலந்த வார்த்தைகளையும் மறக்க இயலாது. அவளின் தம்பி, தங்கை,மற்றும் பெற்றோர் எல்லோருமே கடந்த முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் போது பங்கருக்குள் ஷெல் விழுந்து குடும்பமாக மடிந்து போனார்கள் என அறிந்து மிகவும் வேதனைப்பட்டேன். அவர்கள் மட்டுமா? இப்படியாக எத்தனை மக்கள் மடிந்தார்கள். கட்டுரையாளரின் அந்த உள்ளக் குமுறல் என்னை ஈர்த்தபடியால் இந்த மடலை வரைந்தேன். உள்ளம் என்பது உணர்வின் வடிகால். வாழும் வரை இதயம் உள்ளவர்களாக வாழ்வோம்.

**இ. தவராசா (ரமணன்)**
**1 ஆம் வட்டாரம்**
**அம்மன்கோவில் வீதி.**
**முள்ளியவளை.**

**ஆன்மீகத் தகவல்களும் அவசியமே.**

அழகிய அட்டையுடன் கூடிய ஜனரஞ்சகப் பத்திரிகையாக வெளி வரும் சுடர்ஒளி வார மலரின் பக்கங்கள் அனைத்துமே அபாரம். சுடர்ஒளியின் வரவு வார இறுதியில் எம்மை அளவற்ற மகிழ்வுக்குள் ஆழ்த்துகின்றது.

எனினும் வாழ்க்கையின் முழுமைக்குத் தேவை யான ஆன்மீகம் தொடர்பான ஆக்கங்கள் எதனை யும் காணவில்லையே ஏன்? அதனையும் சேர்த்துக் கொள்ளுங்கள். சுடர்ஒளி வாரமலரும் முழுமை பெறும்.

**க.தவமலர்.**
**பூந்தோட்டம், வவுனியா.**

**விளையாட்டுத் தகவல்களையும் சேர்க்கவும்.**

விளையாட்டுப்பகுதியை சிலவாரங்களாக பார்க்க முடியவில்லை. எங்கே தொலைத்தீர்கள்? எம் போன்ற இளைஞர்கள் இன்றைய காலகட்டத்தில் விளை யாட்டுப்பகுதி குறித்த தகவல்களை ஆர்வத்துடன் எதிர்பார்ப்பதை நீங்கள் அறிவீர்கள். குறிப்பாக தற் போது நடைபெற்று வரும் ஐ.பி.எல் கிறிக்கெற் தொடர் பற்றி சுடர்ஒளி வாரமலரில் எதுவித செய்திகளையும் காணவில்லையே?

**க.ரூபன்**
**உவர்மலை.திருகோணமலை.**




# ராசி பலன்

**29. 05. 2011 - 04 . 06. 2011**




**அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

கொடுத்து சிவந்த கைகளை உடைய நீங்கள் இலவசமாக யாரிடமும் எதையும் பெற மாட்டீர்கள். குடும்பத்தாருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். பிள்ளைகளின் தனித்திறமைகளைக் கண்டறிவீர்கள். குடும்பத்தில் அனுசரித்து போவீர்கள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். குலதெய்வக் கோவிலுக்குச் சென்று வருவீர்கள். அரசு காரியங்கள் தடைப்பட்டு முடியும். வேலையாட்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்பார்த்திருந்தபடி பணம் வரும். உத்தியோகத்தில் எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வாரமிது.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

மனிதநேயம் அதிகமுள்ள நீங்கள், எதிரிக்கு உதவும் குணம் கொண்டவர்கள். அரைகுறையாக நின்றுபோன கட்டிட வேலைகளை இனி விரைந்து முடிப்பீர்கள். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் அனுகூலமும் உண்டு. மனைவியின் உடல் நலம் பாதிக்கும்.கல்யாணப் பேச்சு வார்த்தை சுமுகமாக முடியும். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடன்பிறந்தவர்களால் கவலைகள் வரக்கூடும். பெற்றோரின் ஆலோசனையின்றி எந்த முடிவுகளும் எடுக்க வேண்டாம். வேற்று மதத்தவர் உதவுவார். ரகசியங்களை காக்க வேண்டிய வாரமிது.



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திரு வாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் குணமுடைய நீங்கள், யாரையும் தூக்கி எறிந்து பேசமாட்டீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். தடைப்பட்ட வேலைகள் முடியும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும்.புது முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்பார்த்திருந்தபடி பணம் வரும். மகளுக்கு நல்ல வரன் அமையும். புது வேலை கிடைக்கும். சகாக்களைப் பற்றிக் குறைகூற வேண்டாம். திறமைகள் வெளிப்படும். இங்கிதமான பேச்சால் உயரும் வாரமிது.



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

ஈரப் பார்வையால் எல்லோரையும் தன் வசம் ஈர்க்கும் நீங்கள் எப்போதும் இதயத்திலிருந்து பேசுவீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. புது வேலை கிடைக்கும். பேச்சிலே கம்பீரம் பறக்கும். மகளுக்கு எதிர்பார்த்த இடத்தில் உயர்கல்வி அமையும். தாய்வழி உறவினர்களால் மகிழ்ச்சியுண்டு. பழைய சொந்தங்களின் சந்திப்பதால் மனநிறைவு கூடும். வியாபாரத்தில் புதிய திட்டங்களால் லாபத்தைப் பெருக்குவீர்கள். கடையை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள். மனஉறுதியால் வெல்லும் வாரமிது.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

உடுத்தும் உடையையும், உள்ளிருக்கும் மனசையும் வெள்ளையாக வைத்துக் கொள்ளும் நீங்கள் சாதிக்கப் பிறந்தவர்கள். அப்பாவின் உடல்நிலை சீராகும். அரசு காரியங்கள் உடனே முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பர். பிள்ளைகளின் வருங்காலம் குறித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். வழக்கு வெற்றியடையும். சகோதரிக்கு நல்ல விதத்தில் திருமணம் முடியும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். அனுபவமிக்க புது வேலையாட்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். நல்லவர்களின் நட்பாலும், அனுபவ அறிவாலும் வெற்றி பெறும் வாரமிது.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

மற்றவர்களின் மனம் நோகாதபடி பேசும் நீங்கள் தனக்கென்று எதையும் எடுத்து வைத்துக் கொள்ள மாட்டீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் நண்பர்களாவார்கள். குடும்பத் தாரின் ஆதரவுப் பெருகும். பிள்ளைகள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். மனைவியின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். தந்தையின் உடல் நலம் பாதிக்கும். அயல்நாடு செல்ல வாய்ப்பு வரும். வேலையாட்களிடம் தொழில் சம்பந்தமான ரகசியங்களை சொல்ல வேண்டாம். அலைச்சல் இருந்தாலும் கடின உழைப்பால் கரை ஏறும் வாரமிது.



**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

சமூக விழிப்புணர்வு கொண்ட நீங்கள், அடித்தட்டு மக்களை அரும்பாடுபட்டு முன்னேற்றுவீர்கள். சேமிக்கத் தொடங்குவீர்கள். மூத்த சகோதர வகையில் மகிழ்ச்சியுண்டு. உறவினர்கள் சிலர் உங்களின் அதிரடியான வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படுவார்கள். அவர்களிடம் அளவாகப் பழகுவது நல்லது. கல்யாணப் பேச்சு வார்த்தை சுமுகமாக முடியும். மறைமுகமாக செயல்பட்டவர்களை இனம் கண்டு ஒதுக்குவீர்கள். உத்தியோகத்தில் பாராட்டை பெறுவீர்கள். பெரிய நிறுவனங்களிலிருந்தும் புதிய வாய்ப்புகள் தேடி வரும். போராடி வெற்றி பெறும் வாரமிது.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

வாதம் விவாதத்தை விரும்பாத நீங்கள், எடுத்த வேலையை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். பெரிய பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். பிள்ளைகளிடம் உங்களின் எண்ணங்களைத் திணிக்க வேண்டாம். பூர்வீக சொத்துப் பிரச்சினை முடிவுக்கு வரும். சொத்துப் பிரச்சனைகளை சுமுகமாக தீர்ப்பீர்கள். தாய்வழி உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பற்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். சில நேரங்களில் மௌனம் தேவைப்படும் வாரமிது.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

எல்லோரும் நல்லவர்களே என நினைக்கும் நீங்கள் உங்களைச் சுற்றியிருப்பவர்கள் சுகமாய் வாழ பாடுபடுவீர்கள் நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். நல்ல வரன் அமையும். பால்ய நண்பர்களை சந்திப்பீர்கள். நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள்.. சம்பளப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். உங்களின் படைப்புகளுக்கு பாராட்டுக் காணப்படும் வாரமிது.



**உத்ராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

பொதுவாக சட்ட திட்டங்களை மதிக்கும் நீங்கள் நியாயவாதிகளைக் காப்பாற்ற குறுக்கு வழியில் சில நேரங்களில் யோசிப்பீர்கள். பழைய சொந்தபந்தங்களைச் சந்திப்பீர்கள். புது முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்பார்த்திருந்தபடி பணம் வரும். பூர்வீகச் சொத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள். பங்குதாரர்களிடம் மனஸ்தாபங்கள் வந்து போகும். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களை அனுசரித்து போங்கள். திட்டமிடுதல் மூலம் சாதிக்கும் வாரமிது.



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

பிறந்த மண்ணையும், பேசும் மொழியையும் வணங்கும் நீங்கள் தன்மானம் மிக்கவர்கள். அரசால் ஆதாயமடைவீர்கள். குடும்பத்தில் அனுசரித்து போவீர்கள். வீட்டில் நல்லது நடக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பழைய கடனைத் தீர்கக உதவிகள் கிடைக்கும். நட்பு வட்டம் விரியும். நண்பர்கள், உறவினர்கள் மதிப்பார்கள். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை கொடுத்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல்கள் விலகும். வாக்குச் சாதுர்யத்தால் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளும் வாரமிது.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

எதையும் ஆழமாக யோசிப்பதுடன், பல விஷயங்களை அடிமனதிலேயே பதுக்கி வைப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிள்ளைகளின் போக்கில் அக்கறை செலுத்துவீர்கள். அவர்களின் உயர்கல்வி நல்ல விதத்தில் அமையும். உடன்பிறந்தவர்கள் உதவுவார்கள். அடகு வைத்திருந்த ஆபரணங்களை மீட்பீர்கள். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பார்கள். உழைப்பால் உயரும் வாரமிது.

## ஜாதகச் சிரிப்பு



**பெண்:** இந்த ஜாதகத்தைப் பார்த்துப் பலன் சொல்லுங்கோ.

**ஜோதிடர்:**(பார்த்துவிட்டு) இந்த ஜாதகத்தின்படி உங்கள் மகனுக்கு இன்னும் ஒரு மாதத்தில் கால் முறியும் அபாயம் உண்டு.

**பெண்:**நல்லது மேலே சொல்லுங்கள்.

**ஜோதிடர்:** ஒரு வருடத்துக்குள் கணவரின் உயிருக்கு ஆபத்து நிகழலாம்.




**பெண்:** அப்படியா? ரொம்ப சந்தோஷம்.

**ஜோதிடர்:**நான் மிகவும் துக்கமான பலனைச் சொல்லும் போது சந்தோஷப்படுகிறீர்களே ஏன்?

**பெண்:** நான் உங்களுக்குக் காட்டியது என்னுடைய ஜாதகத்தை அல்ல. பக்கத்து வீட்டுக்காரியின் ஜாதகத்தை தான்.

ஒவ்வொருவரும் தத்தமது ஜாதகங்களில் அமையப் பெற்றுள்ள யோகங்களை நன்கறிந்து அக்கால கட்டங்களில் எத்தகைய முன்னேற்றங்களை அடைய இயலும் என்பதை முற்கூட்டியே அறிந்து செயல்படுவது வாழ்க்கையை வளமாக்க உதவும். பல்வேறு யோகங்கள் தமது ஜாதகங்களில் அமையப் பெற்றவர்கள் வாழ்க்கையில் முன்னேறத் துடித்துக் கொண்டிருப்பர். அவர்களுக்கு தெய்வத்தால் படைப்பின் ரகசியமாகத் தமக்கு வழங்கப்பட்டுள்ள வியாழ வட்டம் என்னும் ஒரு குறிப்பிட்ட 12 ஆண்டு கால உயர்வின் உச்சக் கால எல்லையை தெரிந்து கொள்ளாது விட்டால் பற் பல வாய்ப்புக்களை இழக்க வேண்டியிருக்கும். இதனால் 12 வருடங்களுக்கு இருக்க வேண்டிய அவர்களின் அதிஷ்டம் ஓரிரண்டு வருடங்கள் மட்டுமே அவர்களுக்கு துணை செய்யக்கூடிய நிலைமை ஏற்படலாம்.




## அதிஷ்ட காலம்

அதாவது மேடம், இடபம், கடகம், கன்னி, மகரம் ஆகிய ஐந்து இராசிகளில் ஏதாவது ஒன்றில் ராகு நிற்க, அந்த ராசிக்கு 1, 4, 7, 10 ஆகிய நான்கு கேந்திரங்களிலும் கிரகங்கள் அமைந்திருந்தால் 'பர்வதயோகம்' என்ற அமைப்பு ஏற்பட்டு அந்த ஜாதகர் சகல யோகங்களையும் அனுபவிப்பார். இதே போன்று ஒவ்வொருவருடைய ஜாதகத்திலும் அரச வாழ்வு, புகழ், செல்வம் என்பவற்றைத் தந்திட கிரகமாலிகா யோகம் உதவும். அதே போல அவர்களுக்கு ஓர் அரசனுக்குச் சமமான வாழ்வினைத் தந்து நிற்பது சக்கரவர்த்தி யோகம் ஆகும். குரு சந்திர யோகம் ஒருவருக்கு வாழ்வில் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கக் கூடியது.

இதைவிட தேனு யோகம், சாரத யோகம், அமலா யோகம், கவிதா யோகம், ஸ்ரீநாத யோகம், வல்லகி யோகம்என்பனவும் வாழ்க்கையைச் சிறப்பாக்க உதவும். திரிகிரக உச்சயோகம் உண்டானால் அவர்களுக்கு வெளிநாட்டுப் பயணம் நிச்சயம். இதைவிட வாழ்க்கையில் சிறந்து விளங்கி உலகம் முழுதும் போற்றும்படியாக வாழ்வதற்கு சிவராஜயோகம், ஜகத்குரு யோகம் போன்ற அற்புத யோகங்களும் ஜாதகங்களில் அமைவதுண்டு. எனவே நல்லவற்றை நல்கக்கூடிய யோக காலங்களை அறிந்து செயற்படுவதே வாழ்வை வளமாக்க உதவும்.★

## சொற்சிலம்பம் - போட்டி இல: 471




### மேலிருந்து கீழ்

01. ஒன்றாகிய தன்மை.
02. பூச்சரம்/ பிற்பகலுக்குப் பின்னர் வருவது.
03. புதிய தகவல்/ புதுமையான செய்தி.
04. பாடல்/ புலவன்.
05. வலது குறைந்தவன்.
06. குத்துவது இப்படி.
09. காந்திஜியின் கடைசி வார்த்தை.
10. இவன் புரட்சிக் கவிஞன்.
12. பிழை/ தவறு/ தப்பு.
13. பன்னிரண்டு அங்குலம்.
14. மகன்.
16. நெஞ்சு.
18. ஓர் அரிசி வகை.
19. விருந்தினன்.
20. தாண்டு.

### இடமிருந்து வலம்

01. செருக்கு/ வலி.
04. பாக்கு தரும் தரு.
07. இது அறுபத்தி நான்கு.
08. ஆந்திரா, கர்நாடகம். ஆகியவற்றுக்குத் தெற்கான பிரதேசம்.
10. பருகுவதற்கு உரியன.
11. ஒரு பருப்பு வகை.
13. இதற்கும் உண்டோ அடைக்கும் தாள்?
15. பாண்டிய மன்னரின் பெயர் வகை.
16. நிலவடுக்குக்கு மேல் இருப்பது.
17. அன்பு கொண்ட அடிமை.
19. மிக/ கூட.
20. சுவாசத்துடன் தொடர்பான நோய்.
21. முதுமை அடைய.
22. இணக்கம் காணப்பட்டது/ ஒப்பந்தம்.
23. சாப்பிடு.

அனுப்புபவர் பெயர்:........................................................

விலாசம்:..............................................................

..............................................................

கையொப்பம்:..........................................................

## சொற்சிலம்பம் போட்டி இல. 471

*சொற்சிலம்பம் 471 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு ஜூன் 12 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்ற வர்களின் பெயர்கள் ஜூன் 19 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண் ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரிய வர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார் கள்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## சொற்சிலம்பம் போட்டி இல.468 விடைகள்

### மேலிருந்து கீழ்

01.ஆபத்பாந்தவன். 02.சீனி. 03.வாகடம் 04.தடம். 05.பல. 08.உதரம். 09.புகழ். 10.பெரியண்ணன். 13.பாரி. 15.ரதி. 16.பிறன். 17.எண்ண. 19.உண்.

### இடமிருந்து வலம்

01.ஆசீர்வாதப்பர். 06.பனி. 07.கட. 08.உடம்பு. 11.பாரதம். 12.கவரி. 13.பாழ். 14.தரம்பிரி. 17.எண். 18.வதி. 19.உண்ண. 20.சின்னண்ணன்.

## போட்டி இல. 468 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — **ஆ.கா.ஸ்ரீதரன்,** இல.24-5/3, மாதவ்ஹரவத்தை ஒழுங்கை, கொழும்பு - 6.

**2 ஆம் பரிசு** — **கே.இராஜகோபால்,** அடைக்கலம் தோட்டம், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

**3 ஆம் பரிசு** — **க.கமால்தீன்,** புன்னக்குடா வீதி, ஏறாவூர் -3.

## பாராட்டுப் பெறுவோர்

**(1) தே.விமலதாசன்,**
இல.5, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
**(2) அனுக்ஷி சஞ்சோ,**
இல.122/3, ரோகினிறோட், கொழும்பு - 6.
**(3) எஸ்.என்.மணி,**
106, மஹிந்த மாவத்தை,
நுவரெலியா.
**(4) ராஜினி புண்ணியமூர்த்தி,**
இல.36, புகையிரத நிலையவீதி,
மட்டக்களப்பு.
**(5) திருமதி தயானுஷாராஜ்குமார்,**
குருமனை, தென்னிந்தியத் திருச்சபை,
உடுவில்.
**(6) ஜீவிதா சிவஞானம்,**
இல.43/1, புகையிரத நிலையவீதி,
மட்டக்களப்பு.
**(7) எம்.சி.ஜேசுதாசன்,**
இயேசுவின் இல்லம்,
155/7, ஜெம்பொட்டாவீதி, கொழும்பு -13.
**(8) பா.லசந்தன்,**
C/O, திருமதி அப்பாத்துரை, பேக்காலைலேன்,
உடுப்பிட்டி.
**(9) சி.புஸ்பராணி,**
இல.43/5 பிள்ளையார் கோயில் வீதி - 2,
கல்லடி, வேலூர், மட்டக்களப்பு.
**(10) திருமதி கோமளா சுசீலன்,**
பூவத்தோட்டம், இமையாணன், கிழக்கு.





**தா.பேரின்பநாதன்,**
**யாழ்ப்பாணம்.**

*கேள்வி:* இந்தக்கால சின்னஞ் சிறுசுகள் ஒருகையில் போத்தலும் மறு கையில் சிகரட்டுமாக அலைகின்றன. இவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது.

*பதில்:* இவர்களுக்கெல்லாம் எதிர்காலத்தை விடவும் 'எரிகாலம்'தான் அண்மித்திருப்பதாகத் தெரிகிறது.

**கே.சரவணமுத்து,**
**வவுனியா.**

*கேள்வி:* அடிக்கடி சாப்பிட்டால்...?

*பதில்:*அவலத்தைச் சந்திக்க நேரிடும். கவனம்.

**த.இளங்குமரன்,**
**கிளிநொச்சி.**

*கேள்வி:* நாட்டில் இனப் பிரச்சினை தீர்ந்தால்தான் திருமணம் செய்து கொள்வதாக உறுதி பூண்டிருக்கிறேன்.

*பதில்:* கடல் வற்றிக் கருவாடு தின்னலாம் என்று குடல் வற்றிச் செத்த தாம் கொக்கு. உமக்காக அனுதாபப்படு கிறேன்.

**செ.புனிதவதி,**
**மன்னார்.**

*கேள்வி:* பெண்களின் பொன்னகை; புன்னகை - வேறுபாடு கூறுங்கள் பித்தா?

*பதில்:*பொன்னகையை ஆபத்துக்கு அடகு வைக்கலாம். புன்னகை ஆட வனையே அடகு வைத்துவிடும்.

**எஸ்.பிரியந்தன்,**
**கொழும்பு -6.**

*கேள்வி:* கடைச்சாப்பாடு சுவையாக இருக்கிறதே?

*பதில்:* இருக்கலாம் அதிலும் நண் பனின் செலவில் கிடைக்கும்போது அது சுவையோ சுவை.

**பி.வேல்முருகன்,**
**திருநெல்வேலி.**

*கேள்வி:* கன்னி - கண்ணி, இவற்றில் எது பொல்லாதது?

*பதில்:* கண்ணி வெடியில் அகப் பட்டால் ஒருகால் போனாலும் மற்றக் காலாவது தப்பும். கன்னியரின் பார் வையில் சிக்கிவிட்டால் இருக்கிற ஒரே இதயத்தையும் முழுமையாகவல்லவா இழக்க நேர்ந்து விடுகிறது.

**பொ.கனகசபை,**
**மட்டக்களப்பு.**

*கேள்வி:* புகழ் எப்படிப்பட்டது பித்தரே?

*பதில்:* புகழ் எம்மைத் தேடி வந்தால் நிலைக்கும். நாமாகப் புகழைத் தேடிச் சென்றால் அது நீண்டநாள் நிலைக்காது.

**ஐ.ஜசிந்தா,**
**கல்முனை.**

*கேள்வி:* எனது கணவர் வேறொரு பெண்ணைக் கூட்டிக் கொண்டு தனி யாகச் சென்று விட்டார்... கவலையாக இருக்கிறது பித்தரே.

*பதில்:* இருக்காதா பின்னே! இனி மேல் நீர்தான் சமைக்க வேண்டும். நீர்தான் உடுப்புத் துவைக்க வேண்டு மல்லவா?

**க.அங்கையர்கண்ணி,**
**கிளிநொச்சி.**

*கேள்வி:*எனக்கு மினிபஸ் நடத் துநர் ஒருவரைத் திருமணம் பேசுகிறார் கள். செய்து கொள்ளலாமா பித்தரே!

*பதில்:* பிரச்சினை இல்லை. ஆனால் என்ன, உம்மை ஒருபோதும் வாசற் படியில் நிற்க விட மாட்டார். உள்ளே போகும்படி நச்சரித்துக்கொண்டே யிருப்பார். பழக்கதோஷம் அப்படி.

**ப.அரியராசா,**
**கல்கிசை.**

*கேள்வி:* யாழ்பாணத்துக்கு நாங்கள் ரயிலில் போகும் காலம் எப்போது வரும் பித்தரே?

*பதில்:* தண்டவாளம் போடும் காலம் வந்த பின்னால்...

**கே.குழந்தைவேலு,**
**புத்தூர்.**

*கேள்வி:* திருமணத்தின்போது அம்மி மிதிப்பது ஏன் பித்தரே?

*பதில்:* அது வாழ்க்கை என்ற மிதி பாட்டின் தொடக்கவிழா.

**ப.பிரமீனா,**
**கொட்டாஞ்சேனை.**

*கேள்வி:* எனது மகனின் கையெழுத்து தெளிவில்லாமல் கிறுக்கலாக இருக் கிறதே பித்தரே!

*பதில்:* அதனைத் திருத்த ஏன் முயற் சிக்கிறீர். ஒருவேளை எதிர்காலத்தில் அவன் ஒரு டாக்டராக வரக்கூடும்.

**க.அருந்ததி,**
**மன்னார்.**

*கேள்வி:* ஒருவர் என்னைக் காதலிக் கிறார். அவரைப் பற்றி யாரிடம் கேட்ட றியலாம்?

*பதில்:* அவர் முன்னர் காதலித்த பெண்களில் ஒருவரே அதற்குப் பொருத் தமான ஆள். முயற்சித்துப் பாரும்.



# சிறுவர் சுடர்



## பாட்டி



பாட்டி எங்கள் பாட்டி - என்மேல்
பாசமுள்ள பாட்டி
நீட்டிக் கையை ஆட்டி - பழைய
நீதிக் கவிசொல் பாட்டி
அனுபவம் சேர் வடிவம் - முதுமை
அறிவில் ஒளிரும் உருவம்
கனிவும் கனவும் சேர்த்து - கதைகள்
கலந்துரைக்கும் பாட்டி
பல் இல்லாத பாட்டி - உரலில்
பாக்கு இடிக்கும் பாட்டி
சொல்லில் இனிமை கூட்டி - நொடிகள்
சொல்லும் அழகுப் பாட்டி.

- செ.மகேந்திரன்.

## ஏமாற்ற முயற்சி செய்யாதே

முதலாளியம்மா ஒரு சேவல் வளர்த்து வந்தாள். அது விடியற்காலை நான்கு மணிக்குத் தவறாமல் கூவிக் கொண்டிருந்தது.

அதன் குரல் கேட்டதும் அவள் தன் வேலைக்காரிகளை எழுப்பி விடுவாள். அவர்களும் முணுமுணுத்துக் கொண்டே வேலை செய்வார்கள்.

''இந்தச் சேவல் இருப்பதனால்தானே நாம் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டி உள்ளது. இதைக் கொன்று விட்டால் பொழுது விடிந்த பிறகு எழுந்திருக்கலாமே'' என்றாள் ஒரு வேலைக்காரி.

''முதலாளியம்மாவுக்குத் தெரியாமல் இதைச் செய்ய வேண்டும்'' என்றாள் இன்னொருத்தி.

எல்லோரும் சேர்ந்து அந்தச் சேவலைக் கொன்று புதைத்தார்கள்.

அவர்களின் மகிழ்ச்சி நீடிக்கவில்லை.


சேவல் கூவாததால் நேரம் தெரியாத முதலாளியம்மா அவர்களை நள்ளிரவிலேயே எழுப்பிவிட்டாள்.

''சேவல் இருக்கும் போதாவது காலை நான்கு மணிக்கு எழுந்தோம். இப்பொழுது நள்ளிரவு நேரத்திலேயே எழ வேண்டி உள்ளதே, ஏமாற்ற முயன்றதற்கு இந்தத் தண்டனை தேவைதான்'' என்று அவர்கள் அழுது புலம்பினார்கள். ★




## சண்டை செய்யாதீர்

1



ஓர் எருமையும் ஒரு குதிரையும் சண்டை செய்தன. எருமை கொம்புகளால் குதிரையைப் பலமாகத் தாக்கியது.

2




காயமடைந்த குதிரை ஒரு மனிதனிடம் சென்று முறையிட்டது. அதனைக் கேட்ட மனிதன் எருமையைப் பிடித்துவரச் சென்றான்.

3



எருமையைக் கயிற்றால் கட்டி வீட்டுக்குக் கொண்டு வந்தான். அதேபோல் குதிரையையும் வீட்டுக்குக் கொண்டு வந்து தனித் தனியாகக் கட்டிப் போட்டான்.


4



தங்கள் சுதந்திரம் மனிதனிடம் செய்த முறைப்பாட்டினால் தங்களுக்கு இல்லாமல் போனதை எண்ணி அவை கவலைப்பட்டன. மனிதனோ எருமையைப் பாலுக்காகவும் குதிரையைத் தனது சவாரிக்காகவும் வைத்துக்கொண்டான்.

**எமக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளை நாமே தீர்த்துக்கொள்ளவேண்டும். வழக்காட முயற்சித்தால் இருவரது சுதந்திரமும் இல்லாமல் போகும்.**

## குறும்புக்காரன் குட்டீஸ்



# ரயில் வேட்டை

## உண்மைச் சம்பவம்



ரயில் கடத்தல் இடம்பெற்ற தினத்துக்கு அடுத்த நாள், அதாவது மார்கழி மாதம் 03 ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் முக்கியமான பாதுகாப்புத் துறை அதிகாரிகளும், அதிரடி நடவடிக்கைகளில் துணிச்சலாக செயற்படவென நன்கு பயிற்றப்பட்ட கொமாண்டோ படையணியினரும் பெய்லின் நகரை நோக்கி தமது வாகனங்களில் சென்றனர். பெயி லின் நகரம், குறிப்பிட்ட அந்த ரயில், கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து சுமார் 15 கிலோ மீற்றர் தொலைவில் இருந்தது.

பெய்லின் நகரத்துக்கு வந்து சேர்ந்ததும் நகர மண்டபக் கட்டிடம் மீட்புக்குழுவினரின் நடவடிக்கைகளுக்கான தலைமையகமாக மாற்றப்பட்டது. அடுத்த நாள்களில் அங்கிருந்தவாறே ரயில் பயணிகளை மீட்டெடுக்கும் பணிகளை மேற்கொள்ளுமாறு அவர்கள் கட்டளையிடப்பட்டிருந்தனர். அவர்களுடன் மேலதிகமாக வெடி மருந்து நிபுணர்கள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் மனோதத்துவ நிபுணர்கள் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

அம் மீட்புக் குழுவினருக்கு முக்கிய நான்கு விடயங்களை அவதானமாகப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. பயங்கரவாதிகளுடன் எந்த வித சலுகை விவகாரங்களையும் பேசக் கூடாது. பயங்கரவாதிகள் கேட்டுக் கொண்டால் அன்றி அவர்களுக்கு எதனையும் வழங்கக் கூடாது. பணயக் கைதிகள் தாம் மீட்புப் பணியாளர்களால் மீட்டெடுக்கப்படக் கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்கத் தூண்டுதல் அளித்தல் வேண்டும். பயங்கரவாதிகளுடன் பணயக்கைதிகள் சுமுகமான நட்பைப் பேண தூண்டுதல் அளித்தல் வேண்டும், என்பவையே குறிப்பிட்ட அந்த நான்கு அறிவுறுத்தல்கள் ஆகும்.

கொள்கை அடிப்படையில் இவை சிறந்த தீர்மானங்களாக இருக்கலாம். ஆனால் நடைமுறைக்கு இவை சிக்கல் மிகுந்ததாகும். அதுமட்டுமன்றி பயங்கரவாதிகளின் குறிப்பிட்ட கடத்தலுக்கான உள்நோக்கம் என்னவென்பது அதுவரை அதிகாரிகளுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஒருவாறு அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட போது கடத்தல்காரர்கள் ஒரு பஸ் வண்டி, ஒரு உலங்கு வானூர்தி என்பவற்றை தமக்கு வழங்கி ஆகவேண்டும் என நிபந்தனை விதித்தனர். மேற்கொண்டு அவர்களுடன் விவாதிக்கவென ஒரு துணிச்சல் மிக்க காவல்துறை அதிகாரி ரயிலை நெருங்க முற்பட்டபோது, அவரை சுட்டுக் கொன்று விடுவதாக பயங்கரவாதிகள் எச்சரித்தனர்.

அன்றைய தினம் பிற்பகல்வேளை பயங்கரவாதிகள் தமது கோரிக்கையை வலியுறுத்தவும், தாம் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாக நிரூபிக்கவும் பணயக்கைதிகளில் ஒருவரை சுட்டுக் கொண்டு விடுவதெனத் தீர்மானித்தனர். பயங்கரவாதிகளில் ஒருவன் முதலில் பைபிளில் இருந்து ''உயிர் வாழ ஒரு நேரம் இருக்கிறது. சாவதற்கும் ஒரு நேரம் இருக்கிறது'' என்ற வாசகத்தை உரத்துக் கூறினான். அதனைத் தொடர்ந்து அந்த ஏழு பயங்கரவாதிகளும் தத்தமது முகமூடிகளை விலக் கிக் கொண்டு ரயில் பெட்டிகளுக்குள் நடந்தார்கள். உட்காந்திருந்த பணயக்கைதிகள் ஒவ்வொரு வரையும் நோட்டமிட்டார்கள். இறுதியில் வீடு, நிலம் வாங்கி விற்கும் தொழிலைச் செய்யும் 34 வயதான றொபேர்ட் என்பவனை தமது முதல் பலிக்காக தெரிவு செய்தனர். முன்னர் ஜன்னல் கண்ணாடிகளில் காகிதங்களை ஒட்டி மறைப்பு ஏற்படுத்துமாறு அவர்கள் உத்தர விட்ட வேளை அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்களுடன் தர்க்கம் புரிந்தவர் களில் றொபேர்ட்டும் ஒருவன். அவனை இழுத்து வந்து ரயில் பெட்டியின் வாசலில் நிறுத்தினார்கள். தன்னை அவர்கள் கொல்லப் போகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்ட றொபேர்ட் ''நான் எனது கடைசிப் பிரார்த்தனையை செய்து கொள்ளலாமா?'' என்று கேட்டான். அதற்கு அனுமதித்த பயங்கரவாதிகள் அவனது பிரார்த்தனை முடிந்ததும் தமது கைகளில் இருந்த துப்பாக்கிகளை ஒரே சமயத்தில் இயக்கி றொபேர்ட் மீது வேட்டுக்களைத் தீர்த்தனர். அவர்களுக்கு துப்பாக்கியைப் பயன்படுத்திய முன் அனுபவம் இல்லாதிருந்ததன் காரணமாகவோ, அல்லது அவர்களது பதற்றத்தின் காரணமாகவோ துப்பாக்கி குண்டுகளின் தாக்குதலில் இருந்து அதிஷ்டவசமாக றொபேர்ட் தப்பித்துக் கொண்டான்.

உண்மையில் அவர்கள் தமது துப்பாக்கிகளின் குறியை அழுத்திய போதே றொபேர்ட் தான் நின்ற இடத்திலிருந்து வெளியே குதித்துவிட்டான். கீழே மழைத்தண்ணீர் வழிந்தோடுவதற்காக கட்டப்பட்டிருந்த சாக்கடையில் செத்தவனைப் போல் அவன் விழுந்து கிடந்தான். அவன் தமது துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்து விட்டதாக எண்ணிய பயங்கரவாதிகள் திரும்பி ஏனைய பயணிகளை நோக்கி வந்தனர். தன்மீதான அவர்களது பார்வை விலகியதும் றொபேர்ட் தட்டுத்தடுமாறி தான் விழுந்த இடத்திலிருந்து எழுந்து மறைந்து மறைந்து அங்கிருந்து தப்பியோடிச் சென்று விட்டான்.

பயங்கரவாதிகள் தமது இரண்டாவது பலிக்காக 22 வயதே நிரம்பிய இளைஞனான பட்னர் என்பவனைத் தேர்ந்தெடுத்தனர். றொபேர்ட்டைப் போன்று இவன் அதிஷ் டசாலியாக இருக்கவில்லை. அவர்கள் அவனை ரயில் பெட்டியின் வாசலில் நிறுத்தினார்கள். ஏழு பேரும் சேர்ந்து இரக்கமின்றி அவனைச் சுட்டுத் தள்ளினர். ரயில் பாதையின் அருகில் இருந்த சரளைக் கற்கள் மீது விழுந்த பட்னர் பரிதாபகரமாக உயிர்துறந்தான்.

**2**

**கொலன்ட் நாட்டின் வட பகுதியில் வைத்து சுதந்திரம் வேண்டிப் போராடும் பயங்கரவாதக் குழுவொன்றினால் பயணிகள் ரயிலொன்று கடத்தப்படுகிறது. பயணிகளை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ள அப்பயங்கரவாதிகளிடமிருந்து பயணிகளை மீட்டெடுக் கும் திட்டமொன்றை வகுத்துக் கொண்ட டச்சு அரசு, தனது மீட்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கிறது.**

கண்முன்னால் இடம்பெற்ற இச்சம்பவத்தைக் கண்ணுற்ற ஏனைய பணயக்கைதிகள் பயத்தினால் அலறினார்கள்; அழுதார்கள்; ஒரு சிலர் நினைவிழந்தார்கள். பயங்கரவாதிகள் அடுத்து தம்மில் எவரைப் பலியெடுக்கப் போகிறார்களோ என்ற அச்சம் அவர்கள் அனைவரையும் தொற்றிக் கொண்டது.

இது ஒருபுறமிருக்க, மறுபுறம் குளிர் அவர்களை வாட்டத் தொடங்கியது. 40 வயதான துணிச்சல் மிக்க சான்ஸ் என்பவன்தான் நம்பிக்கையைத் தளர விடாது ஏனைய பணயக்கைதிகளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறித் தேற்றினான். அவன் ஓரளவுக்கு பயங்கரவாதிகளுடன் சினேகபூர்வமாக பேசமுயன்றதுடன் அவர்களுடன் ஒத்துழைக்கவும் தயாராக இருப்பதாகக் காட்டிக் கொண்டான். இதனால் அவன் மீது நம்பிக்கை கொண்ட பயங்கரவாதிகள் மற்றைய பணயக்கைதிகளைப் போல் அவனைக் கட்டுப் படுத்தாமல் ஓரளவு சுதந்திரமாக உலவ அனுமதித்திருந்தனர்.

ஜெகன்

(தொடரும்)


# தேள்கள் ஏன் ஒளிர்கின்றன?..

இருண்ட சூழ்நிலையில் தேள்களிலிருந்து புற ஊதாக் கதிர்வீச்சுகள் ஒளிர்ந்தால் பார்ப்பவரை திகிலடையச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. பூரண பௌர்ணமி தினங்களில் இயற்கைக்கு மாறான வகையில் நியோன் நீல நிற கதிர்கள் தேள்களின் உடற்பாகங்களில் இருந்து ஒளிர்கின்றன.

தேள்களின் எலும்புப் பகுதிகளில் புரதப் பொருளின் மீது புற ஊதாக் கதிர்கள் தாக்குறுவதனால் இவ்வாறு மனிதக் கண்களுக்கு அவை ஒளி வீசுவதாகத் தோன்றுகின்றது. தேள்கள் தொடர்பான ஆய்வாளர்கள் இந்த வினாவிற்கு விடைகாண நீண்ட காலத்தைச் செலவிட்ட னர்.ஏனைய தேள்களை இனம் காண்பதற்கு இவ்வாறு ஒளிர் வதாக ஒரு சாராரும், பாலைவனங்களில் தேள்களை இனம் காண்பதற்கு இவ்வாறு ஒளிர்வதாக மற்றொரு சாராரும் தெரிவிக்கின்றனர்.

இரையை ஏமாற்றும் நோக்கில் இவ்வாறு ஒளிர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சூரிய ஒளியிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக இந்த ஒளிமாற்றச் செயற்பாடு நிகழ்வதாகவும் சுட்டிக் காட்டப்படு கிறது.

தேள்கள் எவ்வாறு ஒளிர்கின்றன என்பது தொடர்பில் கலிபோர்னிய பல்கலைக்கழக கார்ல் குலுக் தலைமையிலான குழுவினர் ஆய்வுகளை நடத்தி வருகின்றனர்.தேள்கள் இரவு நேரப்பிராணிகளாக வர்ணிக்கப்படுகின்றன. தேள்கள் வெப்பத்தையும், சூரியஒளியினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களையும் விரும்புவதில்லை. புற ஊதாக் கதிர் தாக்கத்தை தேள்கள் தவிர்த்துக் கொள்கின்றன. தேள்களின் மீது புற ஊதாக் கதிர்கள் விழும் அளவிற்கு ஏற்ப அவற்றின் செயற்பாடுகளில் மாற்றம் ஏற்படுவதாக அண்மைய ஆய்வுகள் குறிப் பிடுகின்றன. புற ஊதாக் கதிர் வீச்சு அதிகமாகக் காணப்படும் போது தேள்களின் செயற் பாடுகள் குறை வாகக் காணப்படுகின்றது.




பூரண பௌர்ணமி தினங்களில் புற ஊதாக்கதிர் தாக்கம் அதிகமாகக் காணப்பட்ட போதி லும் இரை தேடுவதற்காக தேள்கள் வெளியே வருவதாகவும் இதனால் அவை ஒளிர்வதாகவும் கார்ல் குலுக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், பூரண பௌர்ணமி தினங்களில் தேள்கள் வெளியே செல் வதற்கு அதிக நாட்டம் காட்டுவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். பௌர்ணமி தினங்களில் தேள்கள் எவ்வாறு ஒளிர் கின்றன என்ற கேள்விக்கு பதில் கிடைக்கப் பெற் றுள்ளது.

கொடிய விஷமுடைய தேள்கள் இரவு நேரங்களில் ஒளிர்க் கதிர்களை வீசிக் கொண்டு வீடுகளில் நகர்ந்தால் இலகுவில் அவற்றைத் தாக்க முடியும் என்பது மனிதர்களைப் பொறுத்தமட்டில் ஓர் ஆறுதலான விடய மாகவே கருதப்படுகின்றது. ★



# தங்கப் பறவை



# கற்றுக்கொடுத்தல்

அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தைச் சேர்ந்த ஜோன்ஹெல்லி என்ற இச் சிறுவன் தனது செல்லப்பிராணியான 'பிறிடோ' என்ற குரங்குக்குட்டிக்குத் தன்னுடைய சைக்கிளை ஓடுவதற்குத் தினமும் பயிற்சி அளித்து வருகிறான். ஆரம்பத்தில் குரங்கு சைக்கிளைச் செலுத்துவதற்கு சிரமப்பட்டாலும் ஹெல்லியின் பக்குவமான பயிற்சியால் இப்போது 'பிறிடோ'
சிறுவர்களைப் போல இலாவகமாக வீதிகளில் சைக்கிளை ஓட்டிச் செல்கிறது. படத்தில், சைக்கிளில் உள்ள ஒலி எழுப்பும் பொத்தானை எப்படி அழுத்துவது என்று 'பிறிடோ' வுக்குச் சொல்லிக்கொடுக்கிறான் ஹெல்லி.



மேலே படத்தில் காணப்படுவது தங்கத்தால் உட்புறம் வடிவமைக்கப்பட்ட விமானமும் அதனுள் தகதகத்துக்கொண்டிருக்கும் தங்கக் குளியல் அறையையும் தான். இதற்குச் சொந்தக்காரர் உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவரும், புரூனே நாட்டின் மன்னருமான சுல்தான் ஹச்சனால் போல்கயாஹ் தான். இவர் வெளிநாட்டு விஜயங்கள் மேற்கொள்ளும்போது மட்டுமே இந்த விமானம் பறப்பில் ஈடுபடும். மற்றைய நேரங்களில் எல்லாம் பலத்த பாதுகாப்போடு விமான நிலையத்தில் நித்திரை கொள்வதுதான் இந்த விமானத்தின் பொழுதுபோக்கு. 747 மில்லியன் டொலர் பணத்தைக் கொட்டி விசேடமாக வடிவமைக்கப்பட்ட இந்த விமானத்தின் குளியல் அறை மட்டுமல்லாது இருக்கைகள், தளபாடங்கள் என்பனவும் தங்கமுலாம் பூசப்பட்டு மின்னுகின்றன. இதைவிட இவர் தங்க மாளிகை ஒன்றையும் வைத்துள்ளார். இந்த மாளிகையில் உள்ள மொத்தம் 1788 அறைகளின் உள்ளமைப்பு தங்கத்தாலும், வைரத்தாலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்குள்ள 257 குளியலறைகள் தங்கத்தாலும்,வெள்ளியாலும் இழைக்கப்பட்டுள்ளன.



# செல்வந்த ஓவியங்கள்

பொதுவாக ஓவியங்கள் சாதாரண வர்ணங்களாலேயே வரையப்படுவதுண்டு. ஆனால் பெடஸ்கினோ மைக்கேல் என்ற ஓவியக் கலைஞர் தன்னுடைய படைப்புகளை தங்கம், எண்ணெய், முத்துக்கள், மெழுகு போன்றவற்றைப் பயன்படுத்தி உருவாக்கி வருகிறார். பல பிராந்திய மற்றும் சர்வதேச ஓவியக் கண்காட்சிகளில் இவரது ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டு பலரதும் கவனத்தை ஈர்த்தன. ஏனைய படைப்புகளை விடவும் இவரது ஓவியங்கள் அதிக விலை கொடுத்தும் வாங்கப்பட்டன. மெழுகாலும் தங்கத்தாலும் வரையப்படும் ஓவியங்கள் பெரும்பாலும் அழகிய இளவரசிகளின் கதைகளையும், தொலைந்துபோன நகரங்களின் வரலாற்றையும் சொல்வனவாக இருப்பது மைக்கேலின் ஓவியங்களில் உள்ள இன்னொரு சிறப்பு அம்சமாகும். அத்தோடு இவரது ஓவிய மூலப் பொருள்களின் மட்டுப்பாடு காரணமாக குறித்த சில வர்ணங்களே அதிகமாகப் பயன்படுத்தப் படுகின்றன.







பேருவளையில்
பரம்பரை
**மாந்திரீகம்**

அரபு, உருது, மலையாள மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவானாலும்,
சகல இனத்தவர்களுக்கும் செய்து கொடுக்கப்படும்.

செய்வினை, சூனியம், ஸிஹ்ர், ஜின், சைத்தான், பேய், பிசாசு போன்ற சகல பிரச்சினைகளிலிருந்தும் சுகாத்தியம் பெறவும், பகைவர்களின் தீங்கில் இருந்தும் வியாபார ஸ்தலம், வீடு, தோட்டம் ஆகியவைகளை பாதுகாத்துக் கொள்ளவும் காவல்பாடு செய்து கொடுக்கப்படும்.

- ஆண் பெண் திருமணத் தடை நீங்கி உடன் திருமணம் நிறைவேறுதல்.
- பிரிந்த கணவன் மனைவி இணைந்து வாழ வழி வகுத்தல்.
- விரும்பியவர்களின் அன்பைப் பெறுதல்.
- புத்திர பாக்கியமின்மை.
- குடும்பத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தல்.
- மது பாவனை, போதைப்பொருள் பாவனை போன்ற தீய காரியங்களிலிருந்து அகற்றுதல்.
- தொழில் முன்னேற்றம் அடையச்செய்தல்.
- செய்வினை, சூனியத்தால் ஏற்பட்ட சகல வியாதிகளிலிருந்தும் சுகாத்தியம் பெறுதல்.

உங்கள் பிரச்சினை எதுவானாலும் நேரில் சந்திக்கவும்

இரகசியம் பேணப்படும்

தீய காரியங்களுக்காக செய்து கொடுக்கப்பட மாட்டாது.
வெளி நாட்டில் இருப்பவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்
தொலைபேசி 0094 34 2276932 – 0094 775 963949

பெரும் தொழில் அதிபர்கள், அரசியல்வாதிகள் முதல் VIP க்கள் வரை சந்தித்துப் பயனடைகிறார்கள்.
நீங்களும் சந்தித்து பயனடையுங்கள்.

வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில்
காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை சந்திக்கலாம்.

கலாநிதி, தேசமானிய, தேசபந்து
**A.H.M.A. நவ்பர் ஹாஜியார் J.P**
இல. 69, பழைய றோட்,
(ஹெட்டியாகந்த) பேருவளை.
Tel: 034-2276932/ 0775-963949 Fax: 034-2276932
வீடு இருக்கும் இடத்தை எமது பேருவளை ஷாமிலாஹ் ஜுவலர்ஸில் தெரிந்து கொள்ளலாம்.

ஷாமிலாஹ் ஜுவலர்ஸ் | காலி வீதி, பேருவளை.



**SONDERANGEBOT**

**Möbel Ferrari**

**HINWIL**

**KASSEL**
Komplette Eckpolstergruppe
Textil-Leder beige
In diversen Farb- und
Materialvarianten erhältlich
3er mit Bettfunktion 219x90x93
Liegefläche 175x120
2er 156x90x98
Echtholzverziehrung




Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

Öffnungszeiten
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00

Möbel zum Schlafen, Essen und Wohnen. Benvenuti a Hinwil.

0.0% Direkt Finanzierung